இலக்கிய ஆய்வரங்கு '97

புதுமை இலக்கியம்

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம்

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க
இலக்கியப் பணிகள் மேலும் ஓங்கிவளர
'துரைவி'
வாழ்த்துகிறது.

'துரைவி'யின் வெளியீடுகள்

1. மலையகச் சிறுகதைகள்
   (33 மலையகப் படைப்பாளிகளின் சிறுகதைகள்)
2. உழைக்கப் பிறந்தவர்கள்
   (55 எழுத்தாளர்களின் மலையகச் சிறுகதைகள்)
3. பாலாயி
   (தெளிவத்தை யோசப்பின் மூன்று குறுநாவல்களின் தொகுதி)
4. மலையகம் வளர்த்த தமிழ்
   (சாரல் நாடனின் கட்டுரைகள்)
5. சக்தீ பால ஐயாவின் கவிதைகள்

85, ஸ்ரீ இரத்தினஜோதி சரவண முத்து மாவத்தை,
கொழும்பு–13,
தொலைபேசி: 331596.

புதுமை இலக்கியம்

இலக்கிய ஆய்வரங்கு

1997 டிசம்பர் 6,7

வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபம்,
கொழும்பு - 6.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம்.

‘புதுமை இலக்கியம்’
சிறப்புற மலர
எமது இலக்கியச் சோலையின்
இனிய வாழ்த்துக்கள் !

⁂

* ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புகள்
* தமிழக எழுத்தாளர்களின் நூல்கள்
* அகராதிகள், ஆய்வு நூல்கள்
* அறிவு நூல்கள் - பாடத்துணை நூல்கள்
* மாணவர் பயிற்சி நூல்கள்
* பாடசாலை உபகரணங்கள்

பூபாலசிங்கம் புத்தகசாலை

340, செட்டியார் தெரு,
கொழும்பு - 11
தொலைபேசி : 422321
தொலைநகல் : 337313

257/1A காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு - 6
தொ. பே. 074-515775

கைலாசபதி அரங்கு

06.12.97 சனிக்கிழமை ஆரம்ப வைபவம்

முப. 9.00 : மங்கள விளக்கேற்றல்
9.05 : தமிழ் வாழ்த்து
எழுத்தாளர் கீதம்
9.15 : வரவேற்புரை:
திருமதி சாந்தி நாவுக்கரசன்
பிரதிப்பணிப்பாளர் இ.ச.க. திணைக்களம்
9.25 : அங்குரார்ப்பணவுரை
பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி
9.45 : தலைமையுரை
பிரேம்ஜி ஞானசுந்தரம்
செயலாளர் நாயகம் இ.மு.எ.ச.
9.50 : பிரதம விருந்தினர் உரை
திருமதி. இராஜலக்ஷ்மி கைலாசநாதன்
மேலதிகச் செயலாளர், கலாசார அமைச்சு.
10.00 : "புதுமை இலக்கியம்" மலர் வெளியிடல்.
வெளியீட்டுரை
திரு.இ. சிவகுருநாதன்
முதற் பிரதி பெறுநர்:
தொழிலதிபர் அல்ஹாஜ் ஹாஷிம் உமர்
10.07: சிறப்புப்பிரதிகளைஅன்பளிப்புச் செய்து
இ.மு.எ.ச.வின் புரவலர்களைப் பாராட்டல்:
திரு. என். சோமகாந்தன்
பாராட்டுப் பெறுவோர்:
'முத்தமிழ்ப் புரவலர்'
தெ. ஈஸ்வரன்
'இலக்கியக் காவலர்'
துரை விஸ்வநாதன்
'அறநெறிப்புரவலர்'
பொ. பாலசுந்தரம்
'அச்சுக்கலை வித்தகர்'
பொ. விமலேந்திரன்
'இலக்கியப்புரவலர்'
ஆர்.பி. ஸ்ரீதரசிங்
'கலைப்புரவலர்'
திருமதி. ஜெயந்தி வினோதன்.
10.15 : வாழ்த்துரைகள்:
திரு. ஆ. சிவநேசச் செல்வன்
திரு. எஸ். தில்லை நடராசா
திரு. ஏ. எம். சமீம்
திரு. டொமினிக் ஜீவா
திரு. வி. என். மதியழகன்
10.30 : நன்றியுரை
திரு. குமார் வடிவேல்
உதவிப் பணிப்பாளர் இ.ச.க. திணைக்களம்

தேநீர் இடைவேளை

06.12.97 சனிக்கிழமை – ஆய்வரங்க அமர்வுகள்

அமர்வுகளை நெறிப்படுத்துபவர்:
பேராசிரியர் கா. சிவத்தம்பி

பகல். 10.45 : அமர்வு I
யாழ்ப்பாணப் பிரதேச இலக்கியம்
தலைமை:
திரு. செங்கை ஆழியான்
11.00 : கவிதை:
திரு. மு. பொன்னம்பலம்
11.25 நாவல்:
செல்வி. சூரியகுமாரி பஞ்சநாதன்
11.50 : சிறுகதை:
திருமதி பத்மா சோமகாந்தன்
12.15 : அமர்வு II
மன்னார் பிரதேச இலக்கியம்
தலைமை:
அருட். சகோ. ஆர். ஜெயகாந்தன்
12.30 : கவிதை:
திரு. எப்.எஸ். லம்பேட்
12.55 : புனைகதைகள்:
திரு. கலைவாதி கலீல்
01.20 : நன்றியுரை
திரு. மேமன்கவி

மதிய உணவு இடைவேளை

பி.ப. 02.30 : பிற்பகல் அமர்வுகள்
வரவேற்புரை:
திரு. ராஜஸ்ரீகாந்தன்
துவக்கவுரை:
திரு. சி. வன்னியகுலம்
02.45 : அமர்வு III
வன்னிப்பிரதேச இலக்கியம்
தலைமை:
திரு. வீ. விக்கிரமராஜா
03.00 : கவிதை:
திரு. ந. ரவீந்திரன்
03.25 : நாவல்:
திரு. ஆர். சிவலிங்கம்
03.50 : சிறுகதை:
திரு. எஸ். ஜெயச்சந்திரன்

தேநீர் இடைவேளை

04.30 : அமர்வு IV
திருகோணமலைப் பிரதேச இலக்கியம்
தலைமை :
திரு. கா. சிவபாலன்
04.45 : *கவிதை :*
திரு. எம். ஐ.எம். ஜப்பார்
05.10 : *நாவல் :*
திரு. நந்தினி சேவியர்
05.35 : *சிறுகதை :*
திரு. திருமலை நவம்
06.00 : கலந்துரையாடல் :
தலைமை :
பேராசிரியர் சோ. கிருஷ்ணராசா
07.00 : *நன்றியுரை*
திரு. கே. விஜயன்

07.12.97 ஞாயிற்றுக்கிழமை ஆய்வரங்க அமர்வுகள்

பகல் 9.00 : *வரவேற்புரை :*
திரு. அந்தனி ஜீவா
இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளின் அங்குரார்ப்பண உரை :
திருமதி. சித்திரலேகா மௌனகுரு
முற்பகல் அமர்வுகளின் துவக்கவுரை :
திரு. வீ. தேவராஜ்
9. 30 : அமர்வு V
மட்டக்களப்பு பிரதேச இலக்கியம்
தலைமை :
கலாநிதி சி. மௌனகுரு
9.45 : *கவிதை :*
திரு. செ. யோகராசா.
10.10 : *நாவல் :*
திருமதி ரூபி பிரான்சிஸ்
10.35 : *சிறுகதை :*
திரு. திரிவேணி சங்கமம் மூர்த்தி

தேநீர் இடைவேளை

11. 15 : அமர்வு VI
மலையகப் பிரதேச இலக்கியம்
தலைமை :
திரு. தெளிவத்தை யோசப்
11. 30 : *கவிதை :*
திரு. சு. முரளிதரன்
11. 55 : *நாவல் :*
திரு. சாரல் நாடன்
12.20 : *சிறுகதை :*
கலாநிதி. க. அருணாசலம்
12.45 : *நன்றியுரை :*
திரு. ப. ஆப்தீன்

மதிய உணவு இடைவேளை

01.45 : பிற்பகல் அமர்வுகள்
வரவேற்புரை :
திருமதி. அன்னலட்சுமி ராஜதுரை
துவக்கவுரை :
கலாநிதி திருமதி. செல்வி திருச்சந்திரன்
02.00: அமர்வு VII
தென்னிலங்கைப் பிரதேச இலக்கியம்
தலைமை :
திரு. திக்குவல்லை கமால்
02.15: *கவிதை :*
திரு. நெய்தல் நம்பி.
02.40: *நாவல் :*
திரு. மொயின் சமீன்
03.05: *சிறுகதை :*
திரு. எம்.எச்.எம். ஷம்ஸ்

தேநீர் இடைவேளை

03.45 : அமர்வு VIII
வடமேல் மாநில இலக்கியம்
தலைமை :
நீர்கொழும்பூர் முத்துலிங்கம்
04.00 : *கவிதை*
திரு. மு. பஷீர்
04.25 : *புனைகதைகள் :*
திரு. எஸ்.எம்.ஜே. பைஸ்தீன்
04.50 : கலந்துரையாடல் :
தலைமை :
திரு. க. சண்முகலிங்கம்
06.00 : *ஆய்வரங்க அமர்வுகளின் தொகுப்புரை*
பேராசிரியர் கா. சிவத்தம்பி.
07.00 : *நன்றியுரை*
திரு. செ. மாணிக்கவாசகர்.

எழுத்தாளர் கீதம்

நமக்குத் தொழில் கவிதை நாட்டிற் குழைத்தல்
இமைப் பொழுதும் சோரா திருத்தல்
நமக்குத் தொழில் கவிதை நாட்டிற் குழைத்தல்
இமைப் பொழுதும் சோரா திருத்தல்
நமக்குத் தொழில் கவிதை நாட்டிற் குழைத்தல்
இமைப் பொழுதும் சோரா திருத்தல்

சங்கு முழங்குது! சங்கு முழங்குது!
சங்கு முழங்குது கேள் - புதுமைச்
சங்கு முழங்குது கேள்
எழுத்தெனும் சங்கம் ஒலித்திடுகின்றது
உழுத்திடும் உலகம் ஒழிந்திடவே - சங்கு முழங்குது

சுரண்டல் மிகுந்தது, சூழ்ச்சி நிறைந்தது
இருண்ட இச் சமுதாயம் !
வரண்டு கிடந்திடு மக்களின் துன்ப
வதைகள் ஒழித்திடுவோம் !
திரண்டிவண் எழுவீர் பேனா மன்னர்
தீரமுடன் நீரே - கலைச்
சிற்பிகளே ! எம் எழுத்தாற் பற்பல
அற்புதம் செய்திடுவோம் ! -புது
அமைப்பும் நிறுவிடுவோம். - சங்கு
முழங்குது.

கம்பன், வள்ளுவன், காளமேகம் வழி
வந்தவர் நாமன்றோ ?
கீரன், ஔவை, இளங்கோ பெற்ற
கீர்த்தி நமதன்றோ ?
நாவலன், பாரதி - சோமசுந்தரன்
நமது இனம் அன்றோ ? - இவர்
யாவரும் காட்டும் வழியே நமது
இலக்கிய நல்வழியாம் - அவ்
வழியே சென்று ஒளிசேர் தமிழை
விழிபோற் காத்திடுவோம் - சங்கு

வானவில் வர்ணம் ஏழு
வளைவதை கண்டிடுவீர்
கானகத்தில் கனிகள் ஆயிரம்
காற்றில் அசைவதைப்போல்
பூங்காவனத்தில் ஆயிரம் ஆயிரம்
பூக்கள் மலவர்வதைப்போல்
புத்தம் புதிய கருத்துக்கள் ஆயிரம்
நித்தம் பெருகவென - சங்கு

நமக்குத் தொழில் கவிதை நாட்டிற் குழைத்தல்
இமைப் பொழுதும் சோரா திருத்தல்.

(இ. மு. எ. ச. 1962ம் ஆண்டில் நடத்திய அகில இலங்கைத் தமிழ் எழுத்தாளர் பொதுமாநாட்டை ஒட்டி அமரர் அ. ந. கந்தசாமி அவர்களால் இயற்றப்பெற்றது.)

எல்லாம் வல்ல அன்னை
மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்மன்
இன்னருளால்
"புதுமை இலக்கியம்"
சிறப்புற வாழ்த்துகிறோம்

த. மாரிமுத்துச் செட்டியார் J.P

இரா. தங்கவேல் செட்டியார் & சன்ஸ்

338, பிரதான வீதி,
மாத்தளை.
தொலைபேசி : 066-22437.

கலாசார அமைச்சின் மேலதிகச் செயலாளர்
திருமதி. இ. கைலாசநாதன்
அவர்களின் செய்தி

இலக்கியத்தின் நோக்கம் வாசகர்களிடன் மகிழ்வுணர்ச்சியை உண்டாக்கி, அவர்களைப் பொழுதுபோக்க வைப்பது மட்டுமேயல்ல, வாசிப்பவர்களின் மனதில் புதிய சிந்தனையைத் தூண்டிவிட்டு, வாழ்க்கையில் முன்னேறுவதற்கான நம்பிக்கையை அளிப்பதாகவும் இலக்கியம் அமைய வேண்டும். மனிதர்கள் இருக்கின்ற நிலையிலிருந்து மேலும் உயர்ந்து முன்னேறவிரும்புவது இயல்பு. இந்த எண்ணத்தை வாசகனின் உள்ளத்தில் வளர்த்து அவனது முன்னேற்றத்திற்கு இலக்கியம் துணை புரிய வேண்டும்.

இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் பெரும்பாலான இலக்கியப் படைப்புகளில் வாசகர்களின் முன்னேற்றத்துக்கான கருத்துக்கள் செறிந்திருப்பதை அவதானிக்க முடிகிறது. மானுடத்தினதும் மக்களினதும் முன்னேற்றத்துக்கு உதவும் வகையில் இலக்கியச் சிரஷ்டிகளைப் படைக்க வேண்டும் என்ற இலக்கியத்தின் இலட்சியத்தை இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் மாநாடுகள், கருத்தரங்குகள், வெளியீடுகள் மூலமாக வலியுறுத்தி இலக்கிய கர்த்தாக்களைச் சரியான திசையில் ஆற்றுப்படுத்தியுள்ளமையை இலக்கிய உலகம் நன்கு அறியும்

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் நாற்பதாவது ஆண்டு நிறைவையொட்டி இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் சென்ற ஆண்டு, இவ்வெழுத்தாளர் சங்கம் சிறப்புற நடத்திய மூன்று நாள் இலக்கியப் பேரரங்கு எமது நாட்டுத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு எழுச்சியூட்டுவதாய் அமைந்தது.

21ம் –நுற்றாண்டில் கால் வைப்பதற்கு உலகம் தயாராகிக் கொண்டு வருகிறது. கழிந்து செல்கின்ற நூற்றாண்டில் ஈழத்தின் கவிதை புனைகதைகள் பெற்றுள்ள வளர்ச்சிப் போக்குகளை, பிரதேச வாரியாக ஆய்வுசெய்வதற்காக இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நடத்தவிருக்கும் இருநாள் ஆய்வரங்கு கனமும் காத்திரமும் கொண்டதாக அமையுமென நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறேன். ஆய்வரங்கிற்கான உதவிகளை எமது அமைச்சின் கீழ் இயங்கும் இந்துசமய கலாசாரத்திணைக்களம் செய்துள்ளமையை மகிழ்ச்சியுடன் குறிப்பிட வேண்டும்.

இலக்கிய ஆய்வரங்கும், அதனை முன்னிட்டு வெளியாகும் 'புதுமை இலக்கியம்' சிறப்பு மலரும் வெற்றிபெற உளமார வாழ்த்துகின்றேன்.

எழுத்தாளர் சங்கத்தின் பணிகள் மேலும் வளர என் மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

"புதுமை இலக்கியம்"
சிறப்பு மலருக்கு
எமது வாழ்த்துக்கள்

திருமணம், பிறந்த நாள் மற்றும்
சுப வைபவங்களுக்கு

உங்கள் விருந்தினர்களை
அன்புடன் உணவளித்து
உபசரிக்க

அன்ன பூரணா விடம்
நம்பிக்கையுடன் ஒப்படையுங்கள்

Hotel Annapoorana

Vegetarian Foods Suppliers for Wedding & Parties

ஹோட்டல் அன்னபூரணா,
159 A, செட்டியார் தெரு, கொழும்பு-11.

159 A Sea Street, Colombo-11.
Telephone: 330621.

புதுமை இலக்கியம்

டிசெம்பர் 1997

நிர்வாக ஆசிரியர்
பிரேம்ஜி ஞானசுந்தரன்

பொறுப்பாசிரியர்
என் சோமகாந்தன்

வெளியீடு
இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம்

முகவரி
340, செட்டியார் தெரு,
கொழும்பு – 11.

விலை ரூபா 100.

வடிவமைப்பும்
அச்சுப்பதிப்பும்
யுனி ஆர்ட்ஸ்
(பிறைவேட் லிமிடெட்)
48 B, புளூமெண்டால் வீதி,
கொழும்பு –13.

இலக்கிய ஆய்வரங்கு

ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் ஐந்து தசாப்த கால வளர்ச்சியைக் கணிப்பீடும் மதிப்பீடும் செய்யும் நோக்குடனான இலக்கியப் பேரரங்கினைக் கடந்த வருடம் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இந்து சமய கலாசார திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தியது. இப்பேரரங்கில் பல நூற்றுக்கணக்கான எழுத்தாளர்களும் இலக்கிய ஆர்வலர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். மூத்த இலக்கிய ஆய்வறிஞர்களுடன் இளம் இலக்கிய ஆய்வாளர்கள், குறிப்பாக கணிசமான பெண் ஆய்வாளர்களும் ஆய்வுரைகளைச் சமர்ப்பித்து இலக்கிய ஆய்வுக்கு பாரிய பங்களிப்பைச் செய்தார்கள்.

இப் பேரரங்கு தொடக்கி வைத்த பணியை மேலும் விரிவான, விசாலித்த பரிமாணத்துடன் முன்னெடுத்துச் செல்லும் வகையில் இவ்வாண்டும் இ.மு.எ.ச. இந்து கலாசார திணைக்களத்துடன் இணைந்து பிரதேச இலக்கிய ஆய்வரங்கை நடத்துகிறது.

ஈழத்து இலக்கியம் இலங்கையில் படைக்கப்படும் சிங்கள, தமிழ், ஆங்கில இலக்கியங்களின் கூட்டு வெளிப்பாடாகும். ஈழத்துத் தமிழ் இலக்கியத்தை விடுத்து ஒரு இலங்கை இலக்கியம் இருக்க முடியாது. அது மட்டுமல்ல, இந்த இலக்கியங்கள் சரிநிகர் சமானமானவையாகக் கருதப்படுவதும் மதிக்கப்படுவதும், இவற்றின் வளர்ச்சிக்கு சமநோக்குடைய, பாரபட்சமற்ற உதவியும் ஊக்கமும் ஒத்துழைப்பும் வழங்கப்படுவதும் மீற முடியாத நியதியும் தர்மமுமாகும்.

அதைப் போலவே ஈழத்துத் தமிழ் இலக்கியம் என்பது வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களில் வாழ்ந்து மக்களின் வாழ்வை இலக்கியமாக்கும் தமிழ், முஸ்லிம் படைப்பாளிகளின் ஆக்கங்களை உள்ளடக்கியதாகும். இந்த இலக்கியத்தின் செழிப்புக்கும்

உன்னதத்துவதிற்கும் தமிழ் மாநிலத்தில் வாழும் எழுத்தாளர்கள் மட்டுமல்ல, மலையத்திலும் மற்றும் பல்வேறு பிரதேசங்களிலும் வாழும் தமிழ், முஸ்லிம் படைப்பாளிகள் பாரிய பங்களிப்பைச் செலுத்தியிருக்கிறார்கள். முஸ்லிம் படைப்பாளிகளினதும் மலையக ஆக்க இலக்கியக்காரர்களினதும் பங்கும் பணியும் மதிப்புடனும் விசேஷ மரியாதையுடனும் பாராட்டப்பட வேண்டியவையாகும்.

நாட்டின் பல்வேறு பிராந்தியங்களிலுமுள்ள எழுத்தாளர்களின் இலக்கியப்பங்களிப்பை ஆய்வு செய்யும், பதிவு செய்யும் நோக்குடன் 22 ஆய்வுக்கட்டுரைகள் இந்த ஆய்வரங்கில் இத்துறைகளில் தமது முத்திரையைப் பதித்த இலக்கிய ஆய்வாளர்களால் சமர்ப்பிக்கப்பட விருக்கின்றன.

இத்தகைய ஆய்வரங்குகளில் சமர்ப்பிக்கப்படும் கட்டுரைகள் விஸ்தாரமானவையாகவும் பூரண முழுமைத்துமுடையனவாகவும் இருக்கமுடியாது. இத்துறைகளில் முழுமையான, ஆழமான ,விசாலித்த தனித்தனி ஆய்வுகளை மேற்கொள்வதற்கான அடித்தளத்தையே இவற்றால் அமைத்துக் கொடுக்க முடியும்.

இந்த வகையிலான ஆய்வரங்குகளும் ஆய்வுச் செயற்பாடுகளும் தர்க்கரீதியாவே இதன் அடுத்த கட்டத்திற்கு மாறிச் செல்வது அவசியம்.

அடுத்தடுத்த ஆய்வரங்குகள் ஈழத்து இலக்கியப்படைப்புகள் பற்றி சமூகவியல், வரலாற்றியல், ஆய்வியல், ஒப்பியல் கண்ணோட்டத்தில் மேலும் ஆழமான, காத்திரமான, முழுமையான ஆய்வுகளுக்கு களம் அமைத்துக் கொடுப்பதாக உயர வேண்டும். சிறுகதை, நாவல், கவிதை, நாடகம் உட்பட இலக்கிய ஊடகங்களின் அனைத்துத்துறைகள் பற்றியுமான கூர்மையான, விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் மேற் கொள்ளப்படுவது காலத்தின் தேவையாகும். காலகட்ட ரீதியாகவும், தனிப்படைப்பாளிகளின் சிருஷ்டிகள் பற்றியதாகவும் இவை அமையலாம். கடைசி நாள்வரை காத்திராது இத்தகை விரிவானதும் சமூகப் பார்வை கொண்டதுமான ஆய்வுக் கட்டுரைகளைத் தயாரிக்க அவ்வத்துறைகளில் ஆழ்ந்த பாண்டித்தியம் பெற்றவர்கள் இப்போதிருந்தே இனம் காணப்பட்டு பொறுப்புகள் வழங்கப்பட வேண்டும். ஆய்வுக்கான விஷய மூலங்களும் தீர்ட்சண்யமான நோக்குடன் நிர்ணயம் செய்யப்படுவதும் அவசியம்.

இந்த மிகப் பாரிய, மிகமிக ஆக்கபூர்வமான முயற்சிகளுக்கு கலாசாரத் திணைக்களமும், இலக்கிய அமைப்புகளும், இலக்கிய ஆர்வலர்களும் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்க முன்வர வேண்டும்.

இந்த பாரிய பணியை இந்தக் கால கட்டத்தின் செல் நெறியாகக் கொண்டு ஈழத்து இலக்கிய உலகம் செயற்பட இவ்வாய்வரங்கு தளம் அமைத்துக் கொடுக்கும் என்று நம்புகிறோம். இதையே இவ் வாய்வரங்கின் எதிர்பார்ப்பாக முன்வைக்கிறோம்.

அத்துடன் கடந்த இலக்கியப் பேரரங்கிலும் இவ் ஆய்வரங்கிலும் சமர்ப்பிக்கப்பட்ட, சமர்ப்பிக்கப்படும் ஆய்வுக் கட்டுரைகள் நூலுருவில் வெளிவருவது ஒரு கட்டாயத் தேவை. ஈழத்து இலக்கியத்தை மேலும் செம்மைப் படுத்தவும், குறிப்பாக புதிய, காத்திரமான இலக்கிய ஆய்வுப் பரம்பரை ஒன்றைப் புஷ்பிக்கவும் இது அவசியம்.

இன்று மலர்ந்துள்ள இப்புதுமை இலக்கியம் ''மலர் மிகக் குறுகிய காலத்தயாரிப்பில் உருவானது" காத்திரமான ஆய்வுக் கட்டுரைகள் அடங்கியிருப்பதனால், சென்ற ஆண்டில் வெளியாகிய சிறப்பு மலரைப் போலவே இதுவும் இலக்கிய உலகின் வரவேற்பைப் பெறும் என நம்புகிறோம்.

முற்போக்கு இலக்கியம்- அது முகம் கொடுக்கும் சித்தாந்த நெருக்கடிகளும் ஆற்ற வேண்டிய பணிகளும்

பிரேம்ஜி

முற்போக்கு இலக்கியக் கருத்துருவம் இயக்க வடிவத்தையும் ஸ்தாபனத் தோற்றப்பாட்டையும் பெற ஆரம்பித்த 1950களிலும் அதைத்தொடர்ந்த நான்கு தசாப்தங்களிலும் இருந்த நிலைமைகளிலும் பார்க்க முற்றிலும் வித்தியாசமான ஒரு சூழலை நாம் இன்று எதிர் கொள்கிறோம்.

அன்று முற்போக்குக்கருத்துக்கள், சமூகப் புரட்சியையும் மாற்றத்தையும் மூர்த்திகரித்து நின்ற கருத்துக்கள் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் மிக முனைப்புப் பெற்றும் வலுப்பெற்றும் திகழ்ந்தன. முதலாளித்துவம் ஒரு உலகளாவிய அமைப்பு என்ற ரீதியில் தகர்வுகளைச்சந்தித்தது. முதலாளித்துவ அமைப்பின் உள்ளார்ந்த முரண்பாடுகளும் நெருக்கடிகளும் மூர்த்தண்யம் அடைந்து வந்தன. உலகின் ஆறில் ஒரு பகுதியில் வெற்றிவாகை சூடிய அக்டோபர் சோஷலிஸப் புரட்சி உலக அரங்கில் பாரிய அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தியது. உலகப்புரட்சிகர நிகழ்வுப் போக்கைத் துவக்கி வைத்தது. கருத்துருவ வடிவிலிருந்த சோஷலிஸத் தத்துவத்தை நடைமுறை நியதியாக்கியது. பாட்டாளி வர்க்கத்தால் ஆட்சி அதிகாரத்தைத் தனது கரங்களுக்கு எடுத்துக் கொள்ள முடியும் என்பதையும் நிறுவியது. இதைத் தொடர்ந்து ஒரு புதிய சமூக அமைப்பையும், சமூக நீதியையும் நிர்மாணிக்கவும் நிறுவவும் ஆரம்பித்தது.

முதலாளித்துவச் சங்கிலிப்பிணைப்பில் வெடிப்பு ஏற்பட்டதுடன் ஏகாதியத்தின் கலோனியலிச அமைப்புத் தகர ஆரம்பித்தது. ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய விடுதலைப்போராட்டங்களின் பேரலை பெரு வீச்சுடன் பொங்கியெழுந்தது. முதலாவது வெற்றிகரமான பாட்டாளி வர்க்க அரசும், உழைக்கும் வர்க்கத்தின் உலகளாவிய புரட்சிகர இயக்கத்தின் முன்னேற்றமும் தேசிய விமோசன இயக்கத்திற்கு பேருந்துதலை அளித்தன. பாசிஸத்தின் படுதோல்வியுடனும், ஏகாதிபத்திய சக்திகளின் பலவீனத்துடனும் தேசிய விடுதலை இயக்கங்கள் உலகளாவிய வெற்றியை ஈட்டின. உலக சோஷலிஸஅமைப்பின் தோற்றத்துடனும், விடுதலை அடைந்த நாடுகளின் உதயத்துடனும் முற்போக்குக் கருத்துக்கள் மனித இனத்தின் பெரும் பகுதியை தமது ஆகர்ஷிப்பின் கீழ் கொண்டு வந்தன.

இதன் தாக்கம் கலை, இலக்கியம், பண்பாடு உட்பட மனித சிந்தனையின் எல்லாத்துறைகளிலும் பெரு வீச்சை ஏற்படுத்தியது.

ஆனால் 1990களின் ஆரம்பத்தில் ஏற்பட்ட உலக சோஷலிஸ அமைப்பின் சிதைவும் பின்போதலும் அரசியல் சித்தாந்தம், சமூகப்பார்வை, கலை–இலக்கிய கண்ணோட்டம் உட்பட மனித அறிவுச் செயற்பாடுகளில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.

உலக புரட்சிகர இயக்கம் ஸ்தம்பித–மடைந்துள்ளது. சோஷலிஸம் மாபெரும் ஆகர்ஷிப்பு சக்தியென்ற நிலையிலிருந்து இறங்கியுள்ளது. ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம் தொய்வுற்றுள்ளது. முதலாளித்துவமும் முதலாளித்துவ சிந்தனைப் போக்குகளும் தற்காலிகமாக வலுப்பெற்றுள்ளன. தேசிய விடுதலை இயக்கத்தின் முனைப்பு முடங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ஸ்தாபிதமான இடதுசாரி சக்திகளால் கூட உலகளாவிய தனியார் மயமாக்க போக்கையும் அந்நிய முதலீட்டு நிகழ்வையும் தடுத்து நிறுத்த முடியாத நிலை தோன்றியுள்ளது.

சோஷலிஸமோ, சோஷலிஸ சித்தாந்தமோ தோல்விகளுக்கு, பின்போதல்களுக்கு முகம் கொடுக்கவில்லை என்று எதார்த்திற்குப்புறம்பாக வாதாடுவதிலும் சிந்திப்பதிலும் அர்த்தம் இருக்க முடியாது. உண்மையை, சத்தியத்தை, எதார்த்தத்தை நாம் நேர்மையுடன் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்.

ஆனால் இதற்காக சோஷலிஸமும் சோஷலிஸ சித்தாந்தமும் தவறானவை என்றோ, என்றென்றைக்குமாகவே தோல்வியுற்று விட்டன என்றோ கொள்ளத்தேவையில்லை.

ஏனென்றால் சோஷலிஸத்திலும் பார்க்க உயர்ந்த ஒரு சமூக அமைப்பை, சோஷலிஸ சித்தாந்தத்திலும் பார்க்க உன்னதமான ஒரு சமூக சித்தாந்தத்தை மனித குலத்தால் மனித குலத்தின் மிக ஒப்பற்ற மேதவிலாசங்களினால் கூட முன்வைக்க முடியவில்லை.

சோஷலிஸ நடைமுறையில் காணப்பட்ட பலவீனங்களும், தவறுகளும், குறைபாடுகளும் முதலாளித்துவத்தை ஒரு சமூக அமைப்பு என்ற ரீதியில் நியாயப்படுத்திவிடா. மாறாக முதலாளித்துவத்தின் இயல்பான கொடிய சுரண்டல், வர்க்க ஒடுக்குமுறை, சமூக அநீதிகள், ஏற்றத்தாழ்வுகள், ஜனநாயக அழிப்பு, மனித அவலங்கள் வேலையில்லாத்திண்டாட்டம், வாழ்க்கைத்தரச்சிதைவு, வறுமை, பிணி, அடிமைத்தனம் ஆகியன அதன் மனித விரோத ஜனநாயக விரோத, பண்பாட்டு விரோதத் தன்மைகள் இம்மியளவும் குறைவில்லை என்பதையே காட்டுகின்றன. மாறாக இவை மேலும் மூர்க்கமடைந்துள்ளன.

உலக வியாபிதமடைதல்,'உலகக்கிராமம்' என்ற புதிய வளர்ச்சிகள் சர்வதேச ஏகாதிபத்தியத்தின் அகிலமளாவிய ஆதிக்கத்தை மூர்க்கத்தண்யமாக்கி வருகின்றன. பலநூற்றுக்கணக்கான பல்தேசிய கம்பனிகள் உலகப்பொருளாதாரத்தில் மேலாதிக்கம் செலுத்தும் நிலையிலிருந்து பல பத்துக்கணக்கான ராட்சச 'ட்ரான்ஸ்நஷனல்' நிறுவனங்கள் மூலம் உலக முதலாளித்துவத்தின் ஆதிக்கம் மேலோங்க ஆரம்பித்துள்ளது.

நவகலோனியலிசத்தின் இந்த வளர்ச்சிப்போக்கு முதலாளித்துவத்தின் ஏகாதிபத்திய கட்டத்திலும் பார்க்க வளர்முக நாடுகளுக்கும் சுதந்திரத்தை நேசிக்கும் சக்திகளுக்கும் உலகு தழுவிய உழைக்கும் மக்களுக்கும் ஏன் முழு மனித வர்கத்திற்கும் பேரச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

இதன் விளைவாக செல்வந்த நாடுகளுக்கும் வறிய நாடுகளுக்குமிடையிலான இடைவெளி பாரியளவில் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. வளர்முக நாடுகள் மேலும் மேலும் ஏழ்மை நிலைக்குத்தள்ளப்பட்டு வருகின்றன. இவை உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், கடன்வழங்கும் நாடுகள் ஆகியவற்றின் கோரப்பிடியில் மேலும் மேலும் கூடுதலாகச் சிக்கித்தவிக்கின்றன.

இவை அனைத்தும் விடுதலையுற்ற நாடுகளின் சுதந்திரத்திற்கும் சுயாதிபத்தியத்திற்கும் தேசிய இறைமைக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன. இந்த, நாடுகளின் தேசிய பொருளாதாரங்கள் சார்புப் பொருளாதாரங்களாக ஏகாதிபத்திய வல்லரசுகளில் தங்கி நிற்கும் பொருளாதாரங்களாக மாற்றப்பட்டுவருகின்றன. இந்த நாடுகளின் அரசியல் சுதந்திரத்திற்கும் பொருளாதார சுயாதீனத்திற்கு மட்டுமல்ல ஜனநாயகத்திற்கும், ஜனநாயக சுதந்திரங்களுக்கும், பண்பாட்டுக்கும், கலை கலாசாரங்களுக்கும் பெரும் அச்சுறுத்தல் தோன்றியுள்ளது.

இவை அனைத்தும் சோஷலிஸத்தின், சோஷலிஸ முகாமின் சிதைவினால் ஏற்பட்ட எதிர்மறை விளைவுகளாகும். உலகத்தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வளர்ச்சி, சோஷலிஸ சித்தாந்தத்தினதும் இயக்கத்தினதும் வீறார்ந்த முன்னேற்றம், உலக சோஷலிஸ அமைப்பின் முன்போதல்கள், தேசிய விடுதலை இயக்கத்தினதும், உலகளாவிய முற்போக்கு இயக்கத்தினதும் முன்னேற்றத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதுபோலவே சோஷலிஸ அமைப்பினது சிதைவும் சோஷலிஸ சித்தாதத்தினது பின்போதலும் உலகத் தொழிலாளி வர்க்க இயக்கத்திலும் தேசிய விடுதலை இயக்கத்திலும் முற்போக்கு இயக்கத்திலும் பெரும் பாதிப்பை தன்னியல்பாகவே ஏற்படுதியுள்ளன.

இந்த வீழ்ச்சியிலிருந்து பின்நகர்விலிருந்து உலக தொழிலாளர் வர்க்க இயக்கமும் தேசிய விடுதலை இயக்கமும் உலக முற்போக்கு இலக்கியமும் மீள் வலுப்பெற வேண்டுமானால் மனித குலத்தின் முற்போக்கு முன்னேற்றத்தின் அடிச்சரடாகவும் மையத்தளமாகவும் இருந்துள்ள சோஷலிஸமும் சோஷலிஸ சித்தாந்தமும் சோஷலிஸ பேரியக்கமும் உலகளாவிய சக்தி என்ற பழைய நிலைக்கு வலுபடுத்தப்படுவதும் உயர்த்தப்படுவதும் அவசியம். இது இன்றி, இதைத்தவிர்த்து முற்போக்குக் கருத்துக்களுக்கு கலை இலக்கியத் துறையிலோ, சமூக பொருளாதார, அரசியல் துறைகளிலோ, புதிய உற்சாகத்தையோ உந்துதலையோ வலுவையோ அளிக்க முடியாது.

இதற்கு சோஷலிஸ அமைப்புக்கு சோஷலிஸ சித்தாந்தத்திற்கு என்ன நடந்தது, அதன் பின்போதல்களுக்கான சமூக, அரசியல், பொருளாதார, உளவியல் காரணிகள் என்ன, இந்த அமைப்பையும் சித்தாந்தத்தையும் மீள் கட்டியெழுப்புவது எப்படி என்பன பற்றிய சித்தாந்த ரீதியான, சமூகவியல் ரீதியான ஆழ்ந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவது அவசியம்.

சோஷலிஸ நிர்மாணத்தின் ஒரு பரீட்சார்த்த வடிவும் தோற்று விட்ட நிலையில் இதிலிருந்து உகந்த படிப்பினைகளை கற்றுக் கொண்டு புதிய வடிவங்களுக்கான தேடுதல்கள் காத்திரமான, நிதானமான, அறிவியல் பூர்வமான முறையில் மேற்கொள்ளப்படவேண்டும்.

சோஷலிஸ சித்தாந்தத்தின் அடிப்படை இலட்சியங்களுக்கும் கோட்பாடுகளுக்கும் விசுவாசமாக இருக்கும் அதே வேளையில்; அதன் புரட்சிகர இயல்புகளையும் முற்போக்கான குணாம்சங்களையும் உள்வாங்கிக் கொள்ளும் அதே சமயத்தில்; ஏற்பட்டுவரும் மாற்றங்கள், சமுதாய வளர்ச்சிப் போக்கின் புதிய

நியதிகள், மனித சிந்தனையின் நவீன வளர்ச்சிகள், மாறிவரும் உலகில் மனித உளவியலில் ஏற்படும் மாற்றங்கள் ஆகிய அனைத்தையும் அடியாதாரமாகக் கொண்டு சோஷலிஸ சித்தாந்தத்தை புதுப்பித்தும் வளர்த்தும் முன்னெடுத்துச் செல்வது அவசியம்.

இவை அனைத்தின் மூலம் தான் சோஷலிஸ அமைப்பில், சோஷலிஸ சித்தாந்தத்தில், அதன் நடைமுறையில் ஏற்பட்ட தவறுகளை, பலவீனங்களை எதிர்மறைப்போக்குகளைச்சரியாக இனம் காண முடியும். அதனடிப்படையில் இவற்றைத்திருத்துவதற்கான தர்க்கவியல் ரீதியான, அறிவியல் பூர்வமான முயற்சிகளை மேற்கொள்ளுதல் அவசியத் தேவையாகிறது.

வேறு வார்த்தையில் சோஷலிஸ சித்தாந்தமும் நடைமுறையும் பற்றிய ஆழமான, முழுமையான, விஞ்ஞானபூர்வமான தத்துவார்த்த ஆய்வும்; இதை ஆதாரமாகக் கொண்டு சோஷலிஸ சித்தாந்தம்–நடைமுறை பற்றிய புதிய தேடுதல்களும் சித்தாந்த முடிவுகளும் மேற் கொள்ளப் பட வேண்டும்.

இது பெரும்பாலும் விஞ்ஞான சோஷலிஸ சித்தாந்தவியலாளர்களினதும் சமூக வரலாற்றியலாளர் – களினதும் பணியாக இருந்த போதிலும் ஆத்மாவின் என்ஜினியர்கள் என்ற ரீதியில் இந்த ஆய்வுக்கான முயற்சிகளில் எழுத்தாளர்களும் கலைஞர்களும் அறிவியலாளர்களும் தமது பங்களிப்பைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

தனிச் சித்தாந்திகளுக்கு மட்டும் இந்தப் பெரும் பணி உரியதாக இருக்கக்கூடாது. ஏனென்றால் இவர்களில் இயல்பாகவே காணப்படும் தன்வயச்சிந்தனை முழுமையான பெறுபேறுகளுக்குக் குந்தமாக அமையலாம். எனவேதான் சமுதாயத்தின் நானாவிதமானவர்களின் கூட்டுச் சிந்தனையும், அனுபவமும், அணுகுதல் பண்பும் அவசியமாகின்றன.

இலக்கியத் துறையினருக்கு, குறிப்பாக முற்போக்கு இலக்கியத்துறையைச் சேர்ந்தவர்களுக்கு இது இன்று மையப்பிரச்சனையாகவும் கேந்திர பணியாகவும் மாறியுள்ளது. சோஷலிஸ ஆர்வலர்கள், சமூகவியலாளர்கள், சமுதாயப் புரட்சியாளர்கள் மத்தியில் சோஷலிஸ அமைப்பின் பின்போதல் தத்துவார்த்தக் குழப்பத்தையும் நெருக்கடியையும் ஏற்படுத்தியுள்ளது போலவே முற்போக்கு இலக்கியவாதிகளிடமும் சித்தாந்த குழப்பமும் குளறுபடியும் இயல்பாகவே தோற்றம் பெற்றுள்ளன. சோஷலிஸத்தின் தற்காலிக பின்னடைவுகளின் தாக்கத்தின் கீழ் 'இலக்கியத்தில் சோஷலிஸ யதார்த்தவாத கருத்துருவம் முன்வைக்கப்பட்டமை நாம் செய்த தவறு' என்று முற்போக்கு இலக்கிய இயக்கத்துடன் நீண்ட காலமாகவே தம்மை இனம் காட்டிக் கொண்ட, இந்த இலக்கியச்சித்தாந்தத்தின் விற்பன்னர்களாக இருந்த ஒரு சில அறிவு ஜீவிகள் இப்போது பேசவும் வாதாடவும் ஆரம்பித்துள்ளமையை அவதானிக்க முடிகிறது. எம்மைப் பொறுத்தமட்டில் ஈழத்து முற்போக்கு இலக்கிய ஸ்தாபனம் சோஷலிஸ எதார்த்தவாத இலக்கியக் கோட்பாட்டை நடப்பு நிகழ்ச்சி நிரலில் என்றுமே முன்வைத்ததில்லை. மாறாக வளர்முக நாடொன்றில் முதலாளித்துவத்தை எதிர்த்த சோஷலிஸ புரட்சியல்ல, பதிலாக ஏகாதிபத்தியத்தை எதிர்த்த தேசிய ஜனநாயகப் புரட்சியே நடைமுறைத்தேவையாக உள்ளது என்பதைச் சரியாகக் கிரகித்துக் கொண்டு தேசிய சுதந்திரத்தை முழுமைப்படுத்துகிற, பொருளாதார, கலாசார சுயாதீனத்தை ஈட்டுகிற, சமுதாயத்தை ஜனநாயக ரீதியில் மாற்றியமைக்கிற பணியினை அடி ஆதாரமாகக் கொண்ட ஜனநாயக எதார்த்தவாத இலக்கியக் கோட்பாட்டையே நாம் தெளிவான பார்வையுடன் முன்வைத்தோம்.

என்றாலும் சோஷலிஸ சமுதாயத்தையும் அத்தகைய சமுதாயத்திற்கான புரட்சிகர மாற்றத்தையும் அடிநாதமாகக் கொண்ட சோஷலிஸ எதார்த்தவாத இலக்கியச் சித்தாந்தத்தை ஜனநாயகப் புரட்சியின் வெற்றியைத் தொடர்ந்த அடுத்த கட்ட இலட்சியமாக வரித்துக்கொண்டோம்.

எனினும் சோஷலிஸ எதார்த்தவாத இலக்கிய சித்தாந்தத்தை இன்று நிராகரித்து விமர்சனவாத எதார்த்தவாத இலக்கியம் என்ற புதிய தத்துவத்தை முன்வைப்பவர்கள் அதன் மூலம் என்னத்தை மனம் கொள்கிறார்கள் சோஷலிஸத்தை ஒரு சித்தாந்தமாக, சோஷலிஸ சமுதாய அமைப்பை ஒரு சமூக உருவாக்கமாக வரலாறும் வாழ்வும் என்றென்றைக்குமாக நிராகரிக்க வேண்டும் என்கிறார்களா? அவ்வாறாயின் இன்றுள்ள கொடிய, மூர்க்கத்தனமான, மிலேச்சத்தனமான, முதலாளித்துவமும் அதன் வர்க்க முரண்பாடுகளும், வர்க்கச் சுரண்டலும், வர்க்க ஆதிக்கமும் சாஸ்வதமாகவே நீடிக்க வேண்டும் என்கிறார்களா? இவர்கள் இவ்வாறு வெளிப்படையாகவே கூற, ஒப்புக்கொள்ள தயங்குவார்கள் என்ற போதிலும் சோஷலிஸ சமுதாயத்தை மூர்த்திகரித்து நிற்கும் சோஷலிஸ எதார்த்தவாத இலக்கியக் கோட்பாட்டை நிராகரிப்பது என்பது நடைமுறையில் சோஷலிஸ சமுதாய அமைப்பையும் சோஷலிஸ கருத்துருவத்தையும் நிராகரிப்பதாகும். சிந்தனை குழப்பத்தால், சிந்தாந்தக் குழப்பத்தால் பாதிப்புற்றுள்ள இவர்கள் முன்வைக்கும் புதிய தத்துவமான விமர்சன எதார்த்தவாத கருத்துருவம் வாஸ்தவத்தில் என்ன சமுதாய நிலைப்பாட்டினை எடுக்கிறது? நடப்புச் சமுதாயத்தை, அதன்

கோணல்மாணல்களை விமர்சிப்பதுடன் இலக்கியத்தின் பணி முற்றுப்பெற வேண்டும் என்பது இவர்களின் நிலைப்பாடா? நடைமுறையில் உள்ள சமுதாயத்தை, வாழ்க்கை முறையை இலக்கியம் விமர்சிக்க வேண்டும் என்பதன் மூலம் இலக்கியத்தின் சமுதாயச் செயற்பாட்டை இவர்கள் ஏற்கிறார்கள் என்பது ஸ்பஷ்டம். ஆனால் அத்துடன் இலக்கியத்தின் பணியும் பயன்பாடும் முடிவுற வேண்டும் என்கிறார்களா? சமூக நிஷ்டூரங்களுக்காக அநீதிகளுக்காக, மானுட விரோத இயல்புகளுக்காக இலக்கியத்தால் விமர்சிக்கப்படும் அந்த சமுதாய அமைப்பை தூக்கி எறியவும் மாற்றவும் அதற்கு மாற்றீடாக நீதியும், நியாயமும், தர்மமும் உள்ள ஒரு புதிய சமுதாயத்தை தோற்றுவிப்பதற்கான மனித குலத்தின் குறிப்பாக அந்த சமுதாய அமைப்பின் கொடிய பாதிப்புக்களுக்கு இலக்காகும் உழைக்கும் வர்க்கத்தின்– சுரண்டப்படும் வர்க்கத்தின் விமோசனத்திற்காக அந்த வர்க்கம் நடத்தும் போராட்டத்திற்கும் இலக்கியத்திற்கும் ஒட்டோ உறவோ இல்லை என்கிறார்களா ? சோஷலிஸ சித்தாந்தத்திலும் நடைமுறையிலும் ஏற்பட்ட தவறுகள் இனம் காணப்படுவதுடனும், திருத்தப்படுவதுடனும் புதிய சித்தாந்த முடிவுகளுடனும் இந்த கருத்துக் குழப்பங்கள் முடிவுக்கு வரமுடியும். இதைத் தொடர்ந்து இலக்கியத்துறையில் தலைதூக்கி வரும் இந்த கருத்துப் பிறழ்வுகளும் சீரடையலாம்.

இது போலவே இலக்கிய உலகில் இன்று பல நவீன கருத்துருவங்கள் தோன்றியுள்ளன. இதுவும் சோஷலிஸ முற்போக்குச் சித்தாந்தங்களில் ஏற்பட்ட பின்போதல்களின் விளைவே. நவீனத்துவம், பின்நவீனத்துவம், இருப்பியல்வாதம், அமைப்பியல்வாதம், மஜிக்கல் றீயலிஸம் போன்ற பல கருதுகோள்கள் முகிழ்ந்துள்ளன. இவை அடைப்படையில் சோஷலிஸ எதார்த்தவாத– சமூக எதார்த்தவாத கருதுகோள்களை நிராகரிப்பனவாக உள்ளன. இலக்கியத்தின் சமுதாயப் பார்வை, பயன்பாடு, பணி ஆகியவற்றிற்கு மாறாக இலக்கியத்தின் வடிவத்திற்கே இவை முக்கியத்துவம் அளிக்கின்றன. பழைய உருவவாத சிந்தனையின்நவீன வெளிப்பாடுகளாகவே இவற்றை இனம் காண முடியும். இவை பற்றிய விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவது அவசியம். என்றாலும் இவற்றை எதிர்த்த ஒரு புனிதப் போராட்டம் நடத்தப்பட வேண்டும் என்றில்லை. ஆனால் இவற்றின் குறைபாடுகள் விமர்சிக்கப்படுவது அவசியம். இந்த நவீன வாதங்கள் வந்த வேகத்திலேயே மறையவும் செய்வதை அவதானிக்க முடிகிறது. பின் நவீனத்துவம் என்ற தோற்றப்பாடு இந்த மங்கி வரும் நிகழ்வுப் போக்கையே சுட்டுகிறது.

இந்தப் புதிய கருதுகோள்கள் இலக்கியத்தின் வடிவம், உத்தி, உருவ அமைப்பு போன்றவற்றில் கூடுதல் கவனம் செலுத்துவதாலும் புதிய பரிசோதனை முயற்சிகளை மேற்கொள்வதாலும் உருவமைப்புச் செம்மை குறித்து இவற்றில் இருந்து படிப்பினைகளை மேற்கொள்ள முடியுமா என்பதில் நாட்டம் செலுத்துவது நன்மை பயப்பதாக அமையலாம்.

இந்த நவீனவாத கருத்தியளாளர்களுடன் முற்போக்கு இலக்கியவாதிகள் பகைமையையோ கசப்பான உறவுகளையோ கொள்ளத் தேவையில்லை. மாறாக நேச பூர்வமான உறவுகளை பேணுவதும் சிநேக ரீதியான கருத்துப் பரிமாறல்களையும் அனுபவப் பரிவர்த்தனைகளையும் மேற்கொள்வது நல்லது.

இனி தேசிய நிலைமைகளுக்கு வருவோம். சர்வதேச நிலையில் சித்தாந்த குழப்பமும் கருத்து மயக்கமும் நிலவுவதைப் போலவே தேசிய நிலையிலும் சித்தாந்த குழப்பத்தையும் கருத்து நிலைப்பாட்டுச் சிக்கலையும் எதிர்க்கின்றோம்.

இலங்கைப் புரட்சியின் கட்டம் என்ன ? அந்தப் புரட்சியின் இலக்கு எந்த சமூக சக்திகளை எதிர்த்து திசையமைவது ? எத்தகையதொரு சமுதாயத்திற்கான போராட்டத்தை உடனடிப் பணியாகக் கொள்வது சோஷலிஸமா அல்லது ஜனநாயக சமூகமாற்றமா? தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் விவசாய மக்களையும் மற்றும் உழைக்கும் மக்களையும் மட்டும் உள்ளடக்கிய இடதுசாரி அரசியல் அணியா அல்லது உழைக்கும் வர்க்கத்தையும் விவசாய மக்களையும் மத்திய தர வர்க்கத்தையும் தேசிய பூர்வாக்களையும் உள்ளடக்கிய பரந்த ஜனநாயக அணி அமைவா? தொழிலாளர்கள்– விவசாயிகள் ராஜ்யமா அல்லது பரந்து பட்ட ஜனநாயக அரசமைப்பா? பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமா அல்லது விரிவான ஜனநாயக வடிவமா? தேசிய இனப்பிரச்சனையின் தீர்வுக்கு பிரிந்துபோகும் உரிமையை உள்ளடக்கிய சுயநிர்ணய உரிமையா அல்லது தேசிய ஐக்கிய வரையறைக்குள் பிரதேச சுயாட்சியா போன்ற பிரச்சனைகளில் இடதுசாரி – முற்போக்குச் சக்திகளுக்குள் கருத்து முரண்பாடுகளும் சிந்தனைக் குழப்பங்களும் நிலவுகின்றன.

இவற்றில் இறுதியானதும் சரியானதுமான நிலைப்பாட்டை சோஷலிஸ சித்தாந்தம் பற்றிய புதிய ஆய்வுகளும் முடிவுகளும் மேற்கொள்ளப்படுவதுடனேயே எடுக்க முடியும். அப்போதும் கூட பல்வேறு அணுகுமுறைகளும் தொடரலாம்.

என்றாலும் வரலாற்றுப் போக்கில் வாழ்வாலும் நடைமுறையாலும் முன்வைக்கப்பட்டு பொதுவான சமூக அங்கீகாரத்தைப் பெறும் நிலைப்பாடுகள் சமூக – அரசியல் வளர்ச்சிப் போக்குகளை நிர்ணயிக்கும் சித்தாந்த நிலைப்பாடுகளாக முகிழும்.

சமூக–வர்க்க சக்திகளை முந்திக்கொண்டு இந்த அதி முக்கிய சித்தாந்தப் பிரச்சினைகளில் எழுத்தாளர்களாலும் அவர்களின் நிறுவனங்களாலும் தன்னிச்சையாக முடிவுகளையும் நிலைப்பாடுகளையும் எடுப்பது சாத்தியமில்லை. என்றாலும் சமூக சக்திகள், வர்க்க சக்திகள் சித்தாந்த பிரச்சினையில் பொது முடிவுகளை எடுக்கும்வரை இலக்கியமும் இலக்கிய இயக்கமும் வாளாவிருக்க முடியாது. ஆகவே தான் பொது அங்கீகாரம் பெற்ற நிலைப்பாடுகளில் இருந்து இலக்கியத்திற்கும் இலக்கிய இயக்கத்திற்கும் முன்னாலுள்ள கடமைகளையும் பணிகளையும் நிலைப்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும்.

இன்று இந்த நாட்டைப் பொறுத்தவரை தேசிய இனப்பிரச்சினையும் அதற்கான தீர்வுமே பிரதானமான மையப்பிரச்சினையாகும். இதனுடன் யுத்தமா, சமாதானமா, ஆயுதப்போராட்டம் தொடர்வதா அல்லது அரசியல் தீர்வு காண்பதா போன்றவை பின்னிப்பிணைந்துள்ளன.

இவற்றில் எமது நிலைப்பாடு ஆரம்பம் முதல் தெளிவானதாகவும் உறுதியானதாகவும் இருந்துள்ளது. தமிழ்த்தேசியத்தின் ஆரோக்கியமான அம்சங்களை நாம் எப்போதும் ஆதரித்து வந்துள்ளோம். தொழிலாளி வர்க்க ஒற்றுமை, ஜனநாயக–முற்போக்குச் சக்திகளின் ஐக்கியம் என்ற மிகச் சரியான நிலைப்பாட்டில் பற்றுதியுடன் நின்றமையால் தமிழ் தேசியத்திற்கு முழுமையான அழுத்தத்தை எல்லாக் காலங்களிலும் கொடுக்காத போதிலும் தமிழ்த் தேசிய இனம் அதன் தனித்துவம் பேணல், சுதந்திர இலங்கையில் சுயாட்சித் தமிழகம் அமைத்தல், பிரதேச சுயாட்சி அல்லது இணைப்பாட்சி, இன–மொழி சமத்துவம் ஆகிய நிலைப்பாடுகளில் நாம் எப்போதும் உறுதியாகவே இருந்துள்ளோம்.

தமிழ் மக்களை, தமிழ் மொழியை எதிர்த்துப் பாகுபாடுகள் காட்டப்பட்ட போதெல்லாம் அவற்றை எதிர்த்திருக்கிறோம். என்றாலும் அந்தக் கட்டத்தில் இனங்களுக்கிடையிலான முரண்பாடுகள் சிநேகபூர்வமான முரண்பாடுகளே என்றும் இவை சிநேகபூர்வமான முறையில் தீர்க்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியிருக்கிறோம். இனப்பிரச்சினையின் தீர்வுக்கான 12 அம்சத்திட்டம் ஒன்றை முன்வைத்து அதற்கு 1975ல் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் எழுத்தாளர் மாநாட்டில் ஏகமனதான ஒப்புதலைப் பெற்றோம். அன்றைய அரசினதும் முற்போக்கு அரசியல் கட்சிகள் அமைப்புகளினதும் அங்கீகாரத்தை ஈட்டினோம். அதன் அடிப்படையில் அரசுக்கும் தமிழ்த் தலைமைக்குமிடையில் பேச்சுவார்த்தை நடைபெறச் செய்தோம்.

பின்னர் 1980களில் தமிழ் புறக்கணிப்பும் தமிழர் உரிமை மறுப்பும் தமிழர் ஒழிப்பு என்ற நிலைக்கு அரசகொள்கையாகவும் நடைமுறையாகவும் மாறியபோது, தமிழ் மக்களுக்கு எதிராக அரச பயங்கரவாதம் கட்டவிழ்ந்து விட்ட போது இவற்றை எதிர்த்து தர்ம நியாயமான போராட்டத்திற்கு எமது தார்மீக, அரசியல் ஆதரவைத் தெரிவித்தோம்.

இன்றும் கூட 13 ஆண்டுகளாக நீடிக்கும் இந்த அர்த்தமற்ற, வெற்றிபெறவே முடியாத யுத்தத்தை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் நிபந்தனைகள் அற்ற பேச்சுவார்த்தையை சம்மந்தப்பட்ட தரப்பினர் உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்றும் தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்யக்கூடிய சுயாட்சி முறையினதும் ஆட்சி அதிகாரத்தில் அனைத்து இனங்களினதும் கௌரவமான பங்கினை உறுதிப்படுத்தும் அடிப்படையிலும் இனப்பிரச்சனைக்கு ஜனநாயக ரீதியான அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் கோரிவருகிறோம்.

ஆக்க இலக்கியம் தமிழ் மக்களின் இடர்களையும் துயரங்களையும் பிரதிபலிக்க வேண்டும் என்றும், தமிழ் உரிமைக்கான போராட்டத்தை சரியான மார்க்கத்தில் முன்னெடுத்துச் செல்வதற்கான உளப்பக்குவத்தை வளர்க்க உதவ வேண்டும் என்றும் வலியுறுத்துகிறோம். இந்த அணுகுமுறைதான் ஆக்கபூர்வமானது என்றும், மக்களின் உயிர், உடமை, பண்பாட்டு, அழிவுகளைத் தவிர்க்க உள்ள ஒரே ஒரு சரியான மார்க்கம் என்றும் நாங்கள் நம்புகிறோம்.

தமிழ் மக்கள் மத்தியிலும் தேசத்திலும் சர்வதேச ரீதியிலும் உள்ள அனைத்து நியாயபுத்தி படைத்தவர்களும் ஜனநாயகவாதிகளும், சமாதான விரும்பிகளும், மனித நேயமிக்கவர்களும் யுத்த நிறுத்தத்திற்கான, சமாதானத்திற்கான, அரசியல் தீர்விற்கான முயற்சியில் முனைப்புடன் ஈடுபட வேண்டும் என வேண்டுகிறோம்.

கடந்த இரு தசாப்தங்களாக இந்த நாட்டில் ஜனநாயகத்திற்கும் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கும் ஜனநாயக ஸ்தாபனங்களுக்கும் ஜனநாயக கோட்பாடுகளுக்கும் பேராபத்தும் பாரியஅச்சுறுத்தலும் எற்பட்டது. ஆட்சி அதிகாரம் ஒரு வர்க்கத்தின் கரங்களில் மட்டுமல்ல, ஒரு தனி மனிதனின் கரங்களில் குவிமையப்படுத்தப்பட்டது.

இந்த நிலைமையில் இப்போது ஆக்கபூர்வமான அபிவிருத்தி ஏற்பட்ட போதிலும் அதே ஜனநாயக விரோத சக்திகளால் இன்னமும் அச்சுறுத்தல் ஏற்படுவதை அவதானிக்கலாம். 17 ஆண்டு கால அரச

பயங்கரவாதத்தின் வெளிப்பாடுகளை அவ்வப்போது இனம் காணலாம்.

இந்த வன்முறை, படுகொலைப் போக்குகள் தலைதூக்குவதை முற்றாகக் கட்டுப்படுத்துவதும், துப்பாக்கி–டயர் கலாசாரத்தின் வெளிப்பாடுகளை அடியோடு அகற்றுவதும், ஜனநாயகத்தையும் ஜனநாயக ஸ்தாபனங்களையும் ஜனநாயக கோட்பாடுகளையும் மேலும் வலுப்படுத்துவதும், ஜனநாயக மீறல்கள் மீண்டும் தலைதூக்கக்கூடிய வாய்ப்புகளை இல்லாது ஒழிப்பதும் இலங்கைச் சமூகத்தின் முன்னுள்ள இன்னுமொரு பிரதான கடப்பாடாகும்.

அரச பயங்கரவாதமும், வன்முறைகலாசாரமும் தேசத்தின் அரசியல் நடைமுறையாக மாறியமை மனித விழுமியங்களின் வீழ்ச்சிக்கு இட்டுச் சென்றன. சமூக உறவுகளில் அராஜகம் நிலவியது. பாதாள உலகச் சக்திகள் ஆட்சி அதிகாரம் பெற்ற சக்திகளாக மாறின. இவற்றை ஒழித்து மனித விழுமியங்களையும் பண்பாட்டுப் பெறுமானங்களையும் மனித நேய உணர்வுகளையும் சமுதாய நியதியாகவும் வாழ்க்கை முறையாகவும் மீளமைப்பது இன்றுள்ள பிரதான பணியாகும்.

யுத்தச் சூழலினாலும்; அந்நியப் பொருளாதார ஆதிக்கத்தினாலும் விலைவாசி ஏற்றம், பொருளாதார முன்னேற்றத்தின் ஸ்தம்பிதம் மற்றும் தொழில் துறைகளின் முடக்கம், வேலையின்மை முதலிய சமுதாய பிரச்சினைகளாலும் மக்களின் வாழ்க்கைத் தரமும் வாழ்வும் பெரும் பாதிப்புகளுக்குள்ளாகியுள்ளன. மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பாதுகாக்கவும், இச் சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவுமான போராட்டம் முக்கிய இடத்தைப் பெறுகிறது. இவையும் மற்றும் நாடு முகம் கொடுக்கும் ஏனைய சமூகப் பிரச்சினைகளும் முழு சமுதாயத்திற்கும் போலவே இலக்கியத்திற்கும் இலக்கியக்காரர்களுக்கும் முன்னுள்ள பாரிய பிரச்சனைகளாகும். இவற்றை, இவற்றின் பல்வேறு தோற்றப்பாடுகளிலும் இலக்கியம் பிரதிபலிப்பதுடன் இவற்றின் தீர்வுக்கான போராட்டத்திலும் அதுதன் பங்களிப்பைச் செய்யக் கடமைப்பட்டுள்ளது. இந்தப் பணியில் மக்களுடன் இலக்கியமும் எழுத்தாளனும் இணைந்து செயற்படுவது அவசியம்.

அதேபோல ஈழத்து இலக்கியத்தின் கருப்பொருட்களாக இருந்து வந்துள்ள சாதிக் கொடூரங்கள் சீதனக் கொடுமை, பெண் அடிமைத்தனம், சமூக ஏற்றத்தாழ்வுகள், இன ஒடுக்குமுறை, சுரண்டல், சமூக அநீதிகள் தொடர்ந்து இலக்கியத்தின் கதாவஸ்த்துக்களாக இருப்பது தவிர்க்கப்பட முடியாதது ஆகும். ஏனென்றால் இந்த சமூக அநீதிகள் இன்னமும் ஒழிந்தபாடில்லை. ஒடுக்கு முறைகளும் அநீதிகளும் இருக்கும் வரை அவற்றை எதிர்த்த போராட்டம் தொடரவே செய்யும். இந்த சமூகச் சிக்கல்களை இலக்கியம் பிரதிபலிப்பது தொடரும். என்றாலும் இந்த சமூகப்பிரச்சினைகள் அவற்றின் புதிய பரிமாணங்களிலும் வளர்ச்சி நிலைகளிலும் மேலும் ஆழமாகச் சித்தரிக்கப்படுவது அவசியம் ஆகும்.

சில சமூகப் பிரச்சினைகள் அவ்வக் காலங்களில் முனைப்படைவது இயல்பு. என்றாலும் ஒரு சில பிரச்சினைகளின் குறுகிய எல்லைக்குள் மட்டும் இலக்கியம் தன்னை நிறுத்திக் கொள்ளாமல் வாழ்வின் சமூகத்தின், மானுடத்தின் நானாவித பிரச்சினைகளும் சிக்கல்களும் வாழ்வுக்கோலங்களும் விஸ்தாரமான கலை இலக்கிய வெளிப்பாடு பெறுவது அவசியம். மட்டுப்படுத்தப்பட்ட பிரச்சினையில் மட்டும் இலக்கியக் கவனிப்பு குவிமையப்படுவது இலக்கியத்தின் வியாபகத்தையும் வளத்தையும் செழுமையையும் மட்டுப்படுத்துவதாகவே முடியும். இன்று தோன்றியுள்ள புதிய நிலைமைகள், புதிய வளர்ச்சிப் போக்குகள், புதிய மாற்றங்கள், போராட்டத்தின் புதிய வெளிப்பாடுகளும் தேவைகளும், இதன் முன்போதல்களும், தோல்விகளும், யுத்தத்தின் மானுட அவலங்களும் அனர்த்தங்களும் விரத்திகளும், நம்பிக்கைகளும் உட்பட வாழ்வும் காலமும் இலக்கியத்திற்கு விஸ்தாரமான கருப்பொருட்களையும் கதாவஸ்துக்களையும் வழங்கி உள்ளன. இவை அனைத்தும் மானுட நேயத்துடனும் உளவியல் பக்குவத்துடனும், எதிர்கால நம்பிக்கையுடனும் இலக்கியத்தில் வடிக்கப்படுவது காலத்தின் தேவையாகும்.

இவையும், ஏனைய வாழ்க்கைப் பிரச்சினைகளும் இலக்கிய வெளிப்பாடு பெறும்போது இவற்றின் உருவச் செம்மைக்கு உரிய அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும். உருவவாதக் கோட்பாடு இலக்கிய உலகில் மேலாதிக்கம் செலுத்திய காலகட்டத்தில் உள்ளடக்கத்தின் முக்கியத்துவத்திற்கு கூடுதல் அழுத்தம் கொடுக்கப்பட்டது. ஆனால் இலக்கியத்தின் சமூகப் பொறுப்பு ஈழத்து இலக்கியத்தின் பொதுநியதியாகவும் செல்நெறியாகவும் ஸ்தாபிதம் பெற்றுவிட்டு இன்று இலக்கியத்தின் உருவச் சிறப்புக்கு, கலைத்துவ நேர்த்திக்கு உரிய முக்கியத்துவம் அளிப்பது அவசியமாகிறது.

அதே போல கதாபாத்திரங்கள் அவ்வப் பாத்திரத்திற்குரிய மொழி வழக்கை கையாளவேண்டும் என்ற போராட்டத்தை புதுமை இலக்கியவாதிகள் நடத்தினர். இதுவும், மண்வாசனை, சாமான்யர்கள் கதாநாயகர்கள் ஆவது போன்ற எமது நிலைப்பாடுகள் இலக்கியத்தின் பொதுநெறியாகி விட்ட இன்று பிழையற்ற எழுத்து நடை மொழிச்செழுமியம், புதிய படைப்பு உத்திகள் புதிய புதிய இலக்கிய பரிசோதனைகள் ஆகியவற்றில் முழுக்கவனம் செலுத்துவது இன்றியமையாததாகும். படைப்பாளிகள் இலக்கிய சிருஷ்டியின் வினைத்திறனில்

ஒப்பற்ற பாண்டியத்தை ஈட்டிக்கொள்வதன் மூலம் தான் இலக்கியத்தின் பெறுமானத்தையும், செழுமையையும், உயிர்ப்பையும் உயர்த்திட முடியும்.

இலக்கிய வளர்ச்சிக்கும் உள்ளடக்க–உருவ செம்மைக்கும் இலக்கிய விமர்சனம் காத்திரமான முறையில் செயற்படுவது அவசியம். வளர்ந்தோங்கிய இத்துறை இன்று சற்றுத் தொய்வுற்ற நிலையில் இருப்பது விசனத்துக்குரியது. இலக்கிய விமர்சனம் ஒரு கனதியான துறையாக வளரவேண்டியது அவசர அவசியமாகும். புதிய இலக்கியக் கோட்பாடுகளை இலக்கியப் பரப்பில் நிறுவவேண்டிய தேவையிருந்த காலத்தில் இலக்கிய விமர்சனம் செயற்பட்ட பாங்கிலிருந்து விலகி முழு இலக்கியத்தையும் வளப்படுத்தும் பண்பினைப் பெறுவது அவசியம். விமர்சனம் கூர்மையாக, வீச்சாக, சமுதாய கடப்பாட்டுக்கும் கலைத்துவ தரத்திற்கும் ஏககாலத்தில் அழுத்தம் கொடுப்பதாக இருக்கும் அதே வேளையில் நல்ல இலக்கிய படைப்புகள் முழுவதையும் மதிப்பதாகவும் நல்ல எழுத்தாளர்கள் அனைவரையும் குறுகிய எல்லைகளைக் கடந்து நேசிப்பதாகவும் பக்குவப்பட வேண்டும்.

அதே போல, வாசகர்கள் மத்தியில் இலக்கியத்தை விமர்சன ரீதியாக பார்க்கும், ரசிக்கும், அனுபவிக்கும் விமர்சனப் பண்பு வியாபிக்கவும் வேண்டும். இதற்கு வாசிப்பு கலாசாரத்தை மக்கள் மத்தியில், குறிப்பாக மாணவர்கள் மத்தியில் வளர்ப்பதற்கு உரிய ஆக்கபூர்வமான இயக்கங்களும் நடவடிக்கைகளும் எடுக்கப்படுவது முக்கியம்.

இலக்கியத்திலும், இலக்கியப் பரப்பிலும் ஆரோக்கியமான நிலைமைகளைத் தோற்றுவிக்க கோஷ்டிவாத போக்குகள் தவிர்க்கப்படுவது அவசியம் எழுத்தாளர்கள் தத்தமது சித்தாந்த பார்வைக்கும் சமுதாய நிலைப்பாட்டிற்கும் ஏற்ப ஸ்தாபன ரீதியாக இயங்கினாலும் எல்லா எழுத்தாளர் அமைப்புகளுக்குமிடையில் இலக்கிய வளர்ச்சி என்ற பொதுப்பணியிலும் தேவையிலும் கூட்டான செயற்பாடும் ஒத்துழைப்பும் நேச உறவுகளும் பேணப்படுவது அவசியம்.

இலக்கிய உலகில் ஆரோக்கியமான பண்புகளையும் உயர் நெறிகளையும் மீள் ஸ்தாபிதம் செய்வதும் இன்று தலையாய கடமையாகிறது.

இவற்றுடன் இலக்கிய வளர்ச்சியைத் துரிதப்படுத்த மேலும் பல செயற்பாடுகள் அத்தியாவசியமாகும்.

1. புத்தக வெளியீட்டு முயற்சிகளை மேலும் அர்த்தமுள்ளதாக்குவதும் ஸ்தாபன மயப்படுத்துவதும்.
2. இலக்கிய இயக்கச் செயற்பாடுகளில் மக்களை குறிப்பாக மாணவர்களை ஈடுபடச்செய்வது.
3. புதிய எழுத்தாளர்களின் தோற்றத்திற்கு இலக்கியப் பயிற்சிகளை நடத்துவது.
4. நாடு முழுவதும் இயங்கும் இலக்கிய வட்டங்களை ஒருங்கிணைத்து இவற்றின் செயற்பாட்டிற்கு புதிய பரிமாணத்தை அளிப்பது.
5. கலை–இலக்கிய வளர்ச்சிக்கு எலக்றோனிக்–அச்சு ஊடகங்களை மேலும் முனைப்பாகவும் திட்டமிட்டும் பயன்படுத்துவது.
6. தொலைக்காட்சி நாடகம், வானொலி நாடகம், குறுந்திரைப்படம், நாடகம் ஆகிய துறைகளின் வளர்ச்சியில் முழுக்கவனம் செலுத்துவது.
7. வீடு தோறும் நூலக இயக்கத்தை நடத்துவது.
8. எழுத்தாளர்–வாசகர் உறவுகளை வியாபித்து கருத்து பரிமாற்றத்தை ஏற்படுத்துவது.
9. தொலைக்காட்சி, இன்ரநெட் ஆகிய நவீன சாதனங்களை வரவேற்கும் அதே வேளையில் இவற்றின் மூலம் சர்வதேச ரீதியில் பரப்பப்படும் துர்கலாசாரத்தை எதிர்த்துப் போராடுவது.
10. எழுத்தாளர்களுக்கும் இலக்கியத்திற்கும் உதவும் திட்டங்களை பரந்தளவில் பயன்படுத்துவதுடன் இத் திட்டங்களை வியாபிதம்டையச் செய்யப் பாடுபடுவது.
11. எழுத்தாளர் அமைப்புகளின் கூட்டமைப்பை உருவாக்குவது.
12. தமிழர் சமுதாயம் சர்வதேச மயப்பட்டுள்ள நிலைமையை கலை–இலக்கிய வளர்ச்சிக்கு முழுமையாகவும் திட்டமிட்டும் மேற்கொள்வது.

இவையும் மற்றும் நடவடிக்கைகளும் ஈழத்து இலக்கியம் முழுமையான, செழுமையான வளர்ச்சியையும் பரிபக்குவத்தையும், முதிர்ச்சியையும் அடைய உதவும் என நம்பலாம். இதற்கு எழுத்தாளர்களின் இலக்கிய ஆர்வலர்களின் முனைப்பான, கூட்டான செயற்பாடு அத்தியாவசியமான முன்தேவையாகும்.

சமாதானத்தின் உதயத்துடன்தான் பூரணமான கலை–இலக்கிய வளர்ச்சிக்கான மெய்யான சாத்தியப்பாடுகள் தோன்றும் என்பதையும் மனம்கொள்வதும் அதற்காகச் செயற்படுவதும் ஈழத்து இலக்கியத்தின், எழுத்தாளர்களின் முதன்மையான–முக்கியமான பணியாகும்.

'புதுமை இலக்கியம்'

சிறப்பு மலருக்கு

மனமார்ந்த வாழ்த்துக்கள் !

❋
❋❋
❋

❋
❋❋
❋

❋
❋❋
❋

LUCKYLAND BISCUIT MANUFACTURES

Natharanpotha

Kundasale.

Phone : 08-224217, 232574.

இன்றைய ஈழத்துத் தமிழ் இலக்கியமும் முற்போக்கும்

இ. முருகையன்

"முற்போக்கு என்றதுமே வெருண்டடிக்கிற அறிஞர்கள் எங்களிடையே இன்னும் இருக்கிறார்கள். நமது வானொலியின் தேசிய ஒலிபரப்பில் மரபுகள், விழுமியங்கள் பற்றிப் பிரசங்கம் பண்ணும் பழந்தமிழ்ப் பற்றாளர்கள் சிலரின் குரல்களை நாம் அடிக்கடி கேட்கிறோம். இந்தப் பிரசங்கங்களிலே இடையிடையே கல்லெரியும் அதிரடியும் வாங்குகிற இரண்டு சொல்லுகள் இருக்கின்றன. ஒன்று யதார்த்தம், மற்றது முற்போக்கு காரணம் என்ன?

தொல்காப்பியத்தையும் புறநானூற்றையும் துணைக்கிழுத்தும் கொள்ளும் ஒருவகைப் பெரியோர்களுக்குச் சில சொல்லுகள் பூதம் போலவும் பிசாசுகள் போலவும் புராணங்களிலே வரும் அசுரர், அவுணர், அரக்கர் போலவும் தோன்றுகின்றன. மத்திய காலத்துச் சமயவாதிகளைப் போல அவர்கள் மட்டுபட்டதோர் எல்லைக்குள் நின்றவாறே சுற்றிச் சுழல்வதற்குக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். தாங்கள் சுழன்று வரும் அந்தச் சிறிய வட்டத்துக்கு அப்பால், எதுவுமே இல்லை. எதுவும் இருக்க முடியாது. எதுவும் இருக்கக் கூடாது என்று அவர்கள் பிடிவாதம் பிடிக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களைப் பற்றித்தான்.

"சமய வாதிகள் தத்தம் மதங்களில்
அமைவதாக அரற்றி மலைத்தனர்."

என்று சொல்லப்பட்டுள்ளது. இவர்களுடைய கண்களிலே 'முற்போக்கு' என்ற பதத்தைக் காட்ட முடியாது; அந்தச் சொல்லை அவர்களுடைய செவிகளின் உள்ளே செலுத்த முடியாது. இது ஒரு விதமான மூடநம்பிக்கை. இப்படிப்பட்ட பழமைப்பற்றாளர்களின் எண்ணிக்கை வரவரக் குறைந்து கொண்டே போகிறது. இது மிகவும் ஆறுதல் தரும் ஒரு செய்தியாகும்.

ஆனால் இப்படியான குரல்களையும் போதனைகளையும் அடிக்கடி கேட்க நேரும் இளந்தலைமுறையினர் பலரும் இந்த விதமான சிந்தனைப் போக்கினுள்ளே அகப்பட்டுக் கொள்ளத்தக்க ஆபத்து உண்டு. மீண்டும் மீண்டும் அழுத்தி அழுத்தி நெருக்கி, நெருக்கி ஒன்றைச் சொல்லிக் கொண்டு வந்தால், அது அந்தத் திணிப்பு– மக்களின் அடிமனத்தில் ஆழப்பதிந்து விடும். விளம்பரகாரர்களே நன்கு தெரிந்து உபயோகிக்கும் ஓர் உபாயமாக 'மீள வலியுறுத்தல்' என்ற இந்த உத்தி அமைந்து விடுகிறது.

இது ஒரு புறம் இருக்க, இலக்கிய உலகிலே, எழுத்தாளர்களிடையேயும், வாசகர்களிடையேயும் இன்று 'முற்போக்கு' என்பது குறித்துப் பல வகையான அபிப்பிராயங்கள் பரப்பப்பட்டு வருகின்றன. 'ஒரு காலத்திலே அது தேவையாக இருந்தது; உண்மை தான். ஆனால் இனிமேல் அது அவ்வளவு தேவை இல்லை' என்றவாறான எண்ணங்கள் நமது சுற்றாடல்களில் விதைக்கப்படுகின்றன. முற்போக்கு எழுத்துப் பற்றியும் முற்போக்குத் திறனாய்வு பற்றியும் முற்போக்கு இயக்கம் பற்றியும் பலபடப் பேசப்படுகிறது. மேற்குலகிலே இடையிடையே வந்து போகும் எழுத்தியற் கோட்பாடுகள் பற்றியும் திறனாய்வுக் கோட்பாடுகள் பற்றியும் நமது எழுத்துலகப் பேரறிஞர்கள் அவ்வப்போது அரையும் குறையுமாகச் சில செய்திகளை உதிர்த்து வருகிறார்கள். பேட்டிகளின்போதும் விமரிசனக் கூட்டங்களிலும் இலக்கியக் கருத்தாடல்களின்போதும் இந்த விதமான குறிப்புரைகளை நாம் செவிமடுக்கிறோம். இவ்வாறான மேற்குலகக் கோட்பாட்டு முறைமைகள் பற்றி படிக்கிரமமான அறிமுகம் நிகழ்ந்தால் ஒழிய, அவை பற்றிய மருட்சிகளும் மயக்கங்களும் தான் மிஞ்சி நிற்கும். உருப்படியான தன்மைகள் விளையமாட்டா. தொடக்க நிலை எழுத்தாளருக்கும் வாசகர்களுக்கும் ஒரு வகையான பிரமிப்பும் திகைப்பும் உண்டாவதற்கும் இந்த நிலைமை ஏதுவாகும்.

ஆகவே, இலக்கியத்தின் தொடர்பிலே 'முற்போக்கு' என்பது என்ன என்பது பற்றி, அடிப்படைக் கருத்துகள் சிலவற்றைத் தெரிந்து கொள்ளுவதும் தெளிவுபெறுவதும் தேவை ஆகின்றது. இது பற்றி நிலவும் தவறான எண்ணங்கள் சிலவற்றை நீக்கி, எழுத்துலகின் நலன்களைப் பெருக்கிக் கொள்வதற்கு அந்த எண்ணக் கரு எப்படி உதவுகிறது என்பதை விசாரிப்பது நல்லது. அவ்வாறு விசாரிப்போமானால், ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் வாழ்வும் வளமும் மேம்பாடு பெறுவதற்கு நாம் வழி சமைத்தவர்களாவோம்.

2

'முற்போக்கு என்றால் என்ன என்ற கேள்வியை முதலிலே நாம் கேட்டுக் கொள்ளுவோம்.

அது ஒரு 'வாழ்க்கை நோக்கு' என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். இங்கு நாம் வாழ்க்கை என்று கருதுவது மனித வாழ்க்கையினையே ஆகும். மனிதர்கள் தோன்றுவதற்கு முன் பல கோடி ஆண்டு காலமாக, மிகமிக எளிமையான விலங்குகள்தான் இந்தப் பூமியிலே வாழ்ந்து வந்தன. பின்னர், மீன்கள், ஊர்வன பறவைகள், பாலூட்டிகள் என்று பல்வேறு விதமான உயிரினங்கள் படிப்படியாகத் தோன்றிக் கூர்ப்படைந்தன. இறுதியில் மனிதர்களாகிய நாம் வந்தோம். இந்த மனிதகுலம் ஒரு பத்துலட்சம் ஆண்டுகளை விடக் குறைவான வயதைத்தான் கொண்டது. அதுவும் இன்றுள்ள மனிதர்களுக்கு இருக்கும் அளவிலான மூளை ஆற்றல் உண்டானது ஐந்திலட்சம் ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்குள்ளே தான் இவை. அண்மைக்காலத்திலே தோன்றி வளர்ச்சி பெற்ற அண்டப்பிறப்பியல், புவிச்சரிதவியல், புவியியல், உயிரியல் முதலான அறிவுத் துறைகளின் வளர்ச்சியினால் நாம் பெற்றுக்கொண்டுள்ள செய்திகள்.

இந்தக் கால நெடும்பரப்பை நோக்குகையில், மனிதகுல வரலாறு, ஏனைய உயிரினங்களின் வரலாறுகளை விட மிகவும் குறுகியது. ஆனால், இந்தக் குறுகிய வரலாற்றுக் காலத்தினுள்ளே, நாம் ஆற்றியுள்ள சாதனைகள், பெற்றுள்ள வெற்றிகள், ஈட்டியுள்ள ஆற்றல்கள் மிகவும் பிரமாண்டமானவை. வியக்கத் தக்கவை. பெருமைப்பட வைப்பவை. மனிதர்களுக்கே உரிய சிறப்பான முயற்சிகளில் நாம் ஈடுபடத் தொடங்கியது. ஏறத்தாழ ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தான் என்பது அறிஞர்களின் மதிப்பீடு எழுதும் முறையைக் கண்டறிந்தமையும் அரசியல் அமைப்புகளை ஆக்கிக் கொண்டமையும் தான் மனிதர்களைப் பிற உயிரினங்களிலிருந்து பிரித்துக் காட்டுகின்ற இரண்டு பெரிய சாதனைகள் என்று பேட்ரண்ட ரசல் ஓர் இடத்திலே சுட்டிக் காட்டுகிறார். முன்பின்னானதொரு கால கட்டத்திலே, கருவிகளைக் கையாண்டு இயற்கைச் சூழலை மாற்றி அமைத்துப் பயன்கொள்வது எப்படி என்ற இரகசியத்தையும் நாம் தெரிந்து கொண்டோம்.

இப்படித் தொடங்கிய வரலாறு காலஞ் செல்லச் செல்லப் படிப்படியாக முன்னேறி வந்துள்ளது என்று பொதுவாக நாம் கூறுகிறோம். இந்த முன்னேற்றமும் ஒரே வேகத்திலே நடைபெற்று வரும் ஒன்றல்ல. சில வேளைகளிலே ஆறுதலாகவும் நிதானமாகவும் இந்த மாற்றங்கள் நடந்து வந்தன. வேறு சில வேளைகளில் இவை திடீர் திடீர் என்று துள்ளிப் பாய்வது போலவும் ஏறுமாறாகவும் நடந்து வந்துள்ளன. இந்த மாற்றங்களின் கூட்டு மொத்தமான பலன் தான் வரலாற்றின் போக்குப்பற்றிய எண்ணக்கருவை நமக்குச் சுட்டிக்காட்டுகிறது. சென்ற ஐந்தாறு நூற்றாண்டுகளிலே இந்த மாற்றங்களின் வேகம் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே போகிறது. இது அறிவின் திடீர் விரிவு (எக்ஸ்ப்ளோஸன் ஒஃவ் நொலெட்ஜ்) என்று கூறப்படுவதுண்டு. அறிவினைப் போலவே, மனித ஆற்றல்களும் திடீர் விரிவு கண்டுள்ளன என்று சொல்ல வேண்டும். விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் இன்று பெற்றுள்ள பெருக்கம், வரலாறு காணாத விந்தை என்று பேசப்படத்தக்கது.

"எஞ்ஞான்றும் முற்காலம் ஈடாகா வண்ணமதாய்
விஞ்ஞானம் நிமிர்ந்தெழுந்து விந்தைகள் புரிந்திடவும்..."

என்றார் அறிஞர் ஒருவர். இவை எல்லாம் முன்னேற்றத்தின் அடையாளங்கள் என்று நாம் பொதுவாக விளங்கிக் கொள்கிறோம். ஆனால் அறிவின் வெற்றிகளைக் கண்டு நடுங்கி வெறுத்துச் சோரும் சிந்தனையாளர்களும் உள்ளனர். அவர்கள் இந்த மாற்றங்களை எல்லாம் முன்னேற்றம் என்று கருதுவதில்லை. இவை எல்லாம் பொல்லாத சீரழிவுகளாகத்தான் அவர்களுக்குத் தோன்றுகின்றன.

மனித வரலாறு ஒரு வெற்றிக் காவியமா? இல்லையானால் அது ஒரு பெருவீழ்ச்சியின் சோகச்சித்திரமா? இவை தான் எங்கள் முன் உள்ள முக்கியமான கேள்விகள். இந்தக் கேள்விகளுக்கு நாங்கள் தருகின்ற விடையிலே தான் எங்களுடைய 'உலக நோக்கு' தங்கியுள்ளது.

மனித வரலாறு ஒரு பெருவீழ்ச்சியில் முடிவடையவுள்ள அவல நாடகம் என்று நினைப்பவர்கள் பண்டைய வரலாற்றேடுகளின் பக்கங்களிலே சில கவர்ச்சிகரமான பந்திகளைக் கண்டு, அவற்றில் மயங்கி, அந்தப் பொற்காலங்களின் மகோன்னதங்களைக் கற்பனையிலே பார்த்து மயங்கி அதிலே மூழ்கிப்போகிறார்கள். அந்த மகோன்னதங்களை நிகழ்காலத்தின் கோரங்களுடனும் குரூரங்களுடனும் ஒப்பிட்டுப் பெருமூச்செறிகிறார்கள் சோர்வடைகிறார்கள். 'மரபு' என்றும் சென்ற காலத்தின் பழநிலாச்சிறப்பு' என்றும் இவர்கள் வாயூறுவது கால ஓட்டத்தின் கொடுமையினாலே பழுப்பேறி மங்கிப்போனாலும், கற்பனைப் புனைகனவுகளால் மெருகு பெற்றுப் பளபளக்கும்' ஒரு பொய்த்தோற்றத்தினையே ஆகும்.

இந்த விதமான பளபளப்பையும் தோற்ற மருட்சியையும் தவிர்த்துவிட்டு உண்மைகளை நேருக்கு நேர் காண முற்படுவோமானால், மனித வரலாறு ஒரு வளர்ச்சி வரலாறே என்ற தெளிவுக்கு அண்மையில் நாம் கொண்டு செல்லப்படுவோம்.

3

மனித வரலாற்றின் சாராம்சம் வளர்ச்சியே என்பதை ஒப்புக்கொள்ள நம்மிற் பலர் தயங்கலாம். நம்மைச்சுற்றிலும் நாம் காண்பதென்ன? பூசல், பிணக்கு, சண்டை, சச்சரவு, தடியடி, வெடியிடி, கொலை, குருதிப் பெருக்கு, சுடலைக்காடு, சாம்பல்மேடு இவை ஒரு புறம். பொய், பொறாமை, சதி சூது, கபடம், வஞ்சம் – இவை மற்றொருபுறம். அதிகாரம், ஆதிக்கம், அடக்கல், ஒடுக்கல், நசுக்கல், உதைத்தல், வதைத்தல் – இவை இன்னொரு புறம். ஊழல், மோசடி, லஞ்சம், ஓரவஞ்சனை, கயமை, கழுத்தறுப்பு, இவை வேறொரு புறம்.

'சுட்டுப் பொசுக்கிப் புவியினைச் சாம்பற்
சூடனாய் ஊதிட எண்ணிய பேர்கள்,
வெட்டிக் கசக்கிப் பிழிந்து செந்நீரை
வேண்டிய மட்டும் குடித்திட எண்ணும்
துட்டர்கள், பாவிகள், மோசக்காரர்கள்'

சூழ்ந்திருக்கிறார்களே சித்தப் பூமியிலே – என்றெல்லாம் நீதியுணர்வு கொண்ட நல்லோர் மனங்கள் ஏங்குகின்றன. உண்மை தான். இப்படி எல்லாம் இருக்கின்ற போது, உலகம் முன்னேறியிருக்கிறது என்று எப்படி ஒப்புக் கொள்வது? இந்தக் கட்டத்திலே தான் மனிதவரலாற்றின் போக்குப் பற்றிய விளக்கங்கள் சில நமக்குக் கைகொடுத்து உதவுகின்றன. வரலாற்றின் 'சியங்கியல்' பற்றிய எண்ணங்கள் சிலவற்றை நாம் கிரகித்துக் கொள்ள வேண்டும்.

பூசல், பிணக்கு, போர்– இவை தான் நாம் கணந்தோறும் சந்திக்கும் காட்சிகள். உழைப்போரின் நலன்களை அடகு வைத்து, உடைமையாளர் மேலோங்க எண்ணி முனைகிறார்கள்; சிறுபான்மைக் கூட்டத்தினர்மேல் ஏறிப் பெரும்பான்மையானவர்கள் சவாரி செய்ய முந்துகிறார்கள்; சாதியால் வேறுபட்டவர்கள் ஒருவரையொருவர் மோதி மிதிக்க முற்படுகிறார்கள்; மதத்தின் பேரைச் சொல்லிக்கொண்டு மற்றையோரை வதைப்பதற்குக் கச்சைகட்டிக் கொண்டு கிளம்புகிறார்கள்; நிறபேதத்தைச் சாட்டாகக் கொண்டு கறுப்பர் வெள்ளையர் என்ற பிரிவினைகள் பேணி வளர்க்கப்பட்டுப் பிசகுகளைப் பெருக்குகின்றன. பொருட் செல்வத்தையும் அறிவுச் செல்வத்தையும் ஏகபோக உரிமைகளாக்கி, வணிகரீதியிலே கொள்ளை இலாபங்கள் குவிக்கப்படுகின்றன. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கணமும் நம் செவிகளில் வந்து மோதிடும் செய்திகள் எப்படிப்பட்டவை? குழிபறிப்பு, குத்திக் கிழிப்பு, குண்டு வீச்சு, கொன்று குவிப்பு ! இத்தனையும் என்ன? பூசல், பிணக்கு, போர்– இவற்றின் விளைவுகள், சுருக்கமாகச் சொன்னால், முரண்பாடுகளின் விளைவுகள்.

எல்லாப் பிரச்சினைகளுக்கும் ஏதுவாய் இருப்பன முரண்பாடுகள் முரண்பாடுகள் தீர வேண்டும்; தீர்க்கப்பட வேண்டும் எப்படி?

முரண்பாடுகள் தீயவை; பொல்லாதவை; கொடியவை என்றெல்லாம் சிந்தித்துத் தெளிந்தவர்கள் இவற்றை எல்லாருக்கும் போதனை செய்து முரண்பாடுகளைத் தீர்த்து விடலாமா? நல்ல நெஞ்சங்களை உடையவர்கள் நல்ல எண்ணங்களைப் பரப்புவதன் மூலம், முரண்பாடுகளை முடிவுக்குக் கொண்டு வரலாமா? அது சுலபமான வழிபோலத் தோன்றுகிறது. அபாயம் இல்லாமல், ஆபத்து இல்லாமல், துன்பம் இல்லாமல், துயரமில்லாமல், எல்லாவற்றையும் நல்லபடியாய்த் தீர்த்து விட முடியுமானால், எவ்வளவு நல்லது!

நல்லது தான். ஆனால் உண்மையில் நாம் காணும் உலகின் நடப்பியல்பு, அந்த வழிமுறையின் பலத்த தன்மையை மறுத்து நிற்கிறது. சிந்தனையாளர்களின் புத்திசாதுரியத்தினால் இந்த முரண்பாடுகள் தீரும் என்றால், உலகவரலாற்றில் எவ்வளவு மனித வதைகளைத் தவிர்த்திருக்கலாம்? எத்தனை இரத்தக் களரிகளை, குருதிக் குளிப்பாட்டுகளை நிறுத்தியிருக்கலாம்.

நடந்தனவா, அந்தக் காரியங்கள் ? இல்லை ! ஏன் ?

தனி மனிதர்கள் வெவ்வேறு சிறப்பியல்புகளைப் பெற்றிருக்கலாம். ஆனால், சமுதாயம் என்று வரும்பொழுது, அவர்கள் சிற்சில கூட்டங்களாக, குழுக்களாக, வர்க்கங்களாகச் சேர்ந்து கொள்ளுகிறார்கள்–அதாவது பிரிந்து விடுகிறார்கள். சேர்மானமே, பிரிவினையாகவும் அமைந்துவிடும் விசித்திரமான ஒரு நிகழ்நிலையை நாம் இங்கு பார்க்கிறோம். வரலாற்றின் இயக்கத்திலே முரண்பாடுகள் மோதல்களாக விளைகின்றன. அந்த மோதல் மென்செயலாக நின்று விடுவதும் உண்டு; வன்செயல்களாக முற்றுவதும் உண்டு. எந்த முறையிலாயினும், மென்முறையிலாயினும், வன்முறையிலாயினும் அவை தீர்வு பெறுகின்றன.

ஆனால், அந்தத் தீர்வும் கூட முடிந்த முடிபாகி நின்று விடுவது அரிது. ஒரு நாடு பிறிதொரு நாட்டின் பிடியில் அகப்பட்டுக் கொள்கிறது என்று வைத்துக் கொள்வோம். இங்கு ஒரு முரண்பாடு தோன்றுகிறது. மோதல் அல்லது போராட்டம் நடைபெறுகிறது. குறிப்பிட்ட நாடு விடுதலை பெறுகிறது. அந்த விடுதலை ஒரு தீர்வு. முன்பிருந்த முரண்பாடு தீர்ந்து விட்டது. ஆனால், வரலாறு அத்துடன் நின்று விடுவதில்லை. தீர்வாக எய்தப்பட்ட அந்த விடுதலையின் உள்ளேயே புதிய முரண்பாடுகள் தோன்றலாம். அல்லது வெளியிலிருந்து வேறு முரண்பாடுகள் முளைக்கலாம். அவற்றைத் தொடர்ந்து புதிய மோதல்கள் நடைபெறலாம்.

முரண்பாடு→மோதல்→தீர்வு→முரண்பாடு→மோதல்→தீர்வு

மு→மோ→தீ→மு→மோ→தீ.....

இந்தத் தொடர் முடிவில்லாது நீள்கிறது. வரலாறு என்பது அப்படித்தான் சென்றுகொண்டிருக்கிறது.

முரண்பாடுகளின் கொடுமையையும் கோரத்தையும் குறைக்கும் போக்குள்ள மோதல்கள், சாராம்சத்திலே ஆக்கபூர்வமான மோதல்கள், முற்போக்கானவை, கொடுமையையும் கோரத்தையும் அதிகமாக்கும் மோதல்கள் பிற்போக்கானவை.

வரலாற்றை நகர்த்திச் செல்லும் இந்த மோதல்கள் தீர்வுகள் எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துச் சீர்தூக்கிக் காணும்பொழுது, இறுதிப்பலன் நன்மையை நோக்கிய ஒன்றாகவே உள்ளதென்பது நுணுகி நோக்குவோர் காணும் உண்மை ஆகும். இடைவழியிலே சிற்சில ஏற்ற இறக்கங்கள்–பின்னடைவுகள்–தோன்றலாம்; தோன்றுகின்றன. ஆனால், பொதுவான போக்கு வரலாற்றின் இயங்கியல்–நலம் நோக்கியதாகத் தான் இருக்கிறது. நலம் நோக்கிய இந்த அறநெறித் திசைமுகத்தினைத்தான் – பொதுமைப் பண்பு வாய்ந்த, அந்த மனித விழுமியத்தைத் தான்–'பொதுமையறம்' என்றும் நாம் ஏற்றுக் கொள்ளலாம்.

இது தான் முற்போக்கின் அடிப்படை. அதன் அடியாழத்தில் உறைந்து கசியும் சாராம்சம்.

இந்த முற்போக்காகிய பொதுமை அறம் இலக்கியத்துடன் எவ்வாறு தொடர்பு பெறுகிறது? இது தான் நாம் அடுத்துக்காண வேண்டியது?

4

முரண்களின் தீர்வு வெறும் எண்ண வெளிப்பாட்டால் மட்டும் நிறைவேறி விடுவதில்லை என்று கண்டோம். தீர்வு என்று வரும்பொழுது செயல்கள் தான் முதன்மை பெறுகின்றன. பொருண்மியம், சட்டம், தொழில்கள், உற்பத்தி, பகிர்வு, எழுச்சி, கிளர்ச்சி, புரட்சி இவை எல்லாம் தீர்வின்பொருட்டு மேற்கொள்ளப்படும் செயல்கள். "இழிபடு போர், கொலை, தண்டம் பின்னியே கிடக்கும் அரசியல்" கூட அந்தச் செயல்களில் ஒன்று தான். இவை தான் வரலாற்றை நகர்த்திச் செல்லும் உயிருந்தல்கள்.

இங்கே இலக்கியத்தின் இடம் என்ன?

ஏனைய செயற்பாடுகளுடன் ஒப்பிடுகையில், இலக்கியத்தின் பங்களிப்பு அற்பமானது தான். நாம் இலக்கியகாரர்களாக இருப்பதால் அந்தப் பங்களிப்பின் தாக்கத்தை அளவு மீறி மதிப்பிட்டு விடும் ஆபத்து உண்டு. அதே வேளை அதை அளவு மீறிச் சிறுப்பித்தும் நோக்கக் கூடாது.

இலக்கியம் வாசிப்பவரின் கருத்துகளை உடனடியாகவோ நேரடியாகவோ மாற்றிவிடுவதில்லை. அது சிறுகச் சிறுக, மெல்ல மெல்ல மக்களின் உணர்வுகளை மாற்றி அமைக்கக் கூடியவை. இந்த விழிப்புணர்வு படைப்பாளிக்கு இருக்க வேண்டும். அந்தப் படைப்பாளியின் நோக்கம் முற்போக்கானதாய் இருக்க வேண்டும். தன் நோக்கங்களைச் சாதிக்கக் கூடிய விதத்திலே தனது உத்தி நுணுக்கம் பற்றிய உள்ளொளி–யும் திறமையும் அவருக்கு இருக்க வேண்டும். இவையெல்லாம் இருக்குமானால், அந்தப் படைப்பாளி வெற்றிகரமான முற்போக்கு இலக்கியத்தை இயற்றிவிட முடியும்.

5

இது வரை நாம் பார்த்தவற்றிலிருந்து, இலக்கியத்தின் முற்போக்குத் தன்மை அதன் உள்ளடக்கம் பற்றிய அக்கறையின் ஓர் அம்சமே என்பது விளங்கும். ஈழத்து இலக்கிய உலகிலே முற்போக்கு எண்ணங்கள் தலையெடுத்த காலத்தில், விமரிசகர்கள் இலக்கியத்தின் உள்ளடக்கம் பற்றியே அதிகம் பேசி வந்தனர். அது இயல்பானதே. ஏனென்றால், முற்போக்கு இலக்கியங்களைப் பிற வகை எழுத்துகளிலிருந்து பிரித்துக் காட்டுவது அவற்றின் உள்ளடக்கம் தான். இவ்வாறு உள்ளமையால், அவற்றின் வடிவச் சீர்மைபற்றிய அக்கறை குறைந்தவர்களாக எழுத்தாளர் சிலர் செயற்பட்டனர் என்று சிலர் சொல்வதுண்டு.

அது எவ்வாறாயினும், வாசிப்போரின் சுவைப்பு நிலையையும் உணர்திறனையும் மனத்திற் கொண்டு, தன் படைப்பின் அமைப்புச் சீர்மையை நிருணயித்துக் கொள்ள வேண்டியது படைப்பாளியின் பொறுப்பே ஆகும். வெறெல்லா விதத்திலும் சிறந்து விளங்குமே ஆயினும் தான் சென்றடையக் கருதும் வாசகர்களின் கவனத்தை ஈர்க்கும் வல்லமை அற்றதோர் ஆக்கம், வீண்பொருளாய்த் தோற்றொழியும்.

6

இனி, இன்று நம்மவராற் பெரிதும் பேசப்படும் நவீனவியம், நவீனப் பின்னியம், அமைப்பியம், கட்டவிழ்ப்பியம் என்னும் கோட்பாடுகள் எல்லாம் ஓர் எழுத்தாக்கத்தின் அகப்புற இயல்புகள் பற்றியும், படைப்பாளிக்கும் நுகர்வாளிக்கும் உள்ள அல்லது இல்லாத தொடர்புகள் பற்றியும், மெய்யுண்மைகள் இலக்கிய உள்ளடக்கத்துடன் எவ்வகை உறவுகளை உடையன என்பது பற்றியும் சில விளக்கங்களைத் தருவதற்கு உதவியாய் உள்ளன. அவை, படைப்புகளை மதிப்பிட முற்படும் ஆய்வாளருக்கும், நுகர்வாளருக்கும் விளக்கத்துணையாய் அமையலாம். படைப்பாளிகள் சிலருக்கும் அவை உதவலாம். ஆனால் அவற்றுக்கு அளவு மீறிய முக்கியத்துவம் கொடுக்கத் தேவை இல்லை.

7

வாழ்க்கை என்பது நன்மையை நோக்கிய ஒரு பயணம். இந்த நம்பிக்கையில் முனைவிட்டெழுந்த உலக நோக்காகிய (பொதுமை அறமே) முற்போக்கு ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் வளம் சிறப்பதற்கு இந்தத் தெளிவு அவசியம்.

இலங்கையில் தமிழிலக்கியத்தின் அண்மைக் காலப்போக்கும் கலாசார ஒருங்கிணைப்பும்

பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி

இலங்கை அரசின் மத, பண்பாட்டுத்துறை அமைச்சு, 23.11.1997 அன்று கொழும்பில் நடத்திய "எழுத்தாளர்களுக்கான கலாசார ஒருங்கிணைப்பு" ஒன்று கூடலின் பொழுது, தமிழிலக்கியம் பற்றிச் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை.

இந்த ஒருங்கு கூடலின் முக்கியத்துவத்தை உணர்கிறேன்.

நாடு இன்று பிளவு பட்டுக் கிடக்கின்றது. இந்த வேளையில் எழுத்தாளர்களின், இந்தத் தலைப்பிலான ஒன்று கூடல், எதிர்நோக்கும் பிரச்சினையின் உக்கிரத்தை அறிந்து கொள்வதற்கும் உண்மையான நிலைபாடுகளை விளங்கிக் கொள்வதற்கும் உதவும்.

இலக்கியம் என்பது உண்மையில் ஆழப்பதிந்த சமூகப் பிரக்ஞையின் வெளிப்பாடாகும்.

இலங்கையில் இன்று, இனங்களினது வேறுபாடுகளின் சின்னமாகப் பண்பாடுதான் கொள்ளப்படுகின்றது. பண்பாட்டு அடையாளங்களைக் கொண்டே இனத்துவ அடையாளம் செய்யப்படுகின்றது.

அத்தகைய ஒருவேளையில் இந்த முயற்சியை மேற்கொள்கிறோம்.

பண்பாட்டுத்துறையிற் பயமின்றிச் சீவிக்க முடியாதவரை சமாதானத்துக்கான மனநிலையே ஏற்படாது.

இத்தகைய ஒரு மகாநாட்டில், உண்மை நிலையைக் கூறுவது எனது கடமை.

வைத்தியனுக்கும் வக்கீலுக்கும் எதையும் ஒளிக்கக் கூடாது. ஒளித்தால் வருத்தமும் மாறாது; வழக்கும் வெல்லப்படாது. இந்த நிலைமையை உணராது நாம் ஆக்க பூர்வமான எதனையும் செய்து விட முடியாது.

"தமிழின் அண்மைக்கால இலக்கியப்", "பண்பாட்டு ஒருங்கிணைப்பு" என்ற இந்த இரண்டு பிரச்சினைகளையும் இணைப்பது சற்று அசாதாரணமான ஒரு நிகழ்ச்சியே.

ஆனால் இது நிச்சயமாகக் கிளப்பப்பட வேண்டிய பிரச்சினையாகும். இந்தப் பிரச்சினை கிளப்பப்படுவதும், நேர்மையான பதில் தரப்படுவதும் அவசியமாகும்.

II

முதலில் "பண்பாட்டு ஒருங்கிணைவு" என்பது எதனைக் குறிக்கின்றது என்பதை நோக்குவோம்.

ஆங்கிலத்திலுள்ள Integration என்னும் சொல்லினையே நாம் இங்கு அடிப்படையாகக் கொண்டு இந்த மொழிபெயர்ப்பைச் சொல்கின்றோம்.

"Integrate" என்பதற்கு ஒக்ஸ்ஃபோட், சுருக்க அகராதி பின்வரும் அர்த்தங்களைத் தருகின்றது.

Integrate -Complete (imperfect thing) by addition of parts (into a whole)

Combine.

(முழுமையடையாத ஒன்றை, முழுமையுள்ள ஒன்று ஆக்குவதற்குப்) பகுதிகளைச் சேர்த்துப் பூர்த்தி செய்தல்.

– ஒருங்குசேர்த்தல்.

"Integration" என்பதற்கு

Intergrating

(ஒருங்கிணைத்தல்)

ending of racial segregation

(இன ஒதுக்கற் பாட்டைக் கைவிடல்)

Combination of diverse elements of penception

(புலப்பதிவின் பல்வேறு அமிசங்களையும் ஒருங்கு சேர்த்தல்)என அகராதி விளக்கம் தரும்.

நமது நிலையில் இதன் கருத்து யாது?

இலங்கைப் பண்பாடு ஒன்றாக இருக்க வேண்டுமெனில், சிங்கள, முஸ்லிம் பண்பாட்டுக் கூறுகளுடன் தமிழ்க் கூறும் இணைய வேண்டும் என்பதாகும்.

இந்த இணைவு எவ்வாறு நிகழும் என்பது பற்றிச் சமூகவிஞ்ஞானத்துறையில் நன்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

பண்பாடுகளின் இணைவு பற்றிப் பேசும்பொழுது, சமூகவியலாளர்களும், மானிடவியலாளர்களும் இரண்டு பதங்களைக் குறிப்பிடுவார்கள். இவை,

Acculturation

Assimilation

என்பனவாகும்.

acculturate (அக்கல்ச்றேற்) என்பதனை "தொடர்புறவின் மூலம் வேறுபட்ட இன்னொரு பண்பாட்டின் (நம்பிக்கைகள், வழக்காறுகள், முதலான) கூறுகளை எடுத்தமைத்துக் கொள்ளுதல்" எனும் கருத்துப்பட

Adopt a different culture (beliefs and customs etc)through contact.என்றும்,

Assimilate (அஸ்'ஸிமிலேற்) என்பதனை "போல ஆக்குதல்" "முறைமைக்குள் உள்வாங்கல்" எனும் கருத்துப்பட,

To make like

Absorb into the system

என்றும் கருத்துக் கூறுவர்.

ஒருங்கிணைப்பு என்பது "ஒன்றாக்குகை" அல்ல. அதனை எந்தப் பண்பாடும் விரும்பாது. அதுவும் சன நாயக உலகில் இது ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய ஒரு நிலைபாடு அல்ல.

நாங்கள் சிங்களவர்களாகவும், தமிழர்களாகவும், முஸ்லிம்களாகவுமிருந்து கொண்டு அதே வேளையில் ஒரு இலங்கைப் பண்பாட்டை உருவாக்க முனைய வேண்டும்.

நான் தமிழனாகவும் இலங்கையனாகவும் இருக்க விரும்புகிறேன்.

III

அடுத்து,தமிழ் இலக்கியத்தின் அண்மைக் காலப்போக்குகள் பற்றி நோக்குவோம்.

இலங்கையில் தமிழ் மொழியின் நிலைமை சுவாரசியமானது.

அதை இரு இனங்கள் (தமிழர்கள், முஸ்லிம்கள்) தங்கள் தாய் மொழியாகக் கொண்டுள்ளனர். மூன்று மதத்தினர் (இந்துக்கள், இஸ்லாமியர், கிறித்தவர்கள்) அதன் மூலம் தம் ஆத்ம உயிர்ப்புக்களை வெளியிடுகின்றனர்.

இலங்கையில் இந்த மொழியின் பயன்பாட்டில் ஒரு இருகிளைப்பாடு தெட்டத்தெளிவாக உண்டு. அதாவது இலக்கியம் இரண்டு விடயங்களுக்குப் பயன்படுகிறது.

(1) மதப் பாரம்பரியங்களை இலக்கியத்தின் மூலம் பேணல்.

(11) சமூகப் பிரச்சினைகளை இலக்கியத்தின் மூலம் எடுத்துரைத்தல்; விவாதித்தல்.

"இலக்கியம்" என்று வரும்பொழுது தமிழ், முஸ்லிம் படைப்புக்கள் ஒன்றாகவே பார்க்கப்படுகின்றன.

இங்கு இரண்டாவதாக கூறப்பட்டதே முக்கியமாகின்றது.

இன்றைய இலங்கையின் பிரதான பிரச்சினையான இனப்போராட்டத்தை இலக்கியம் பிரதிபலிக்காமல் இருக்க முடியாது. அது பிரதிபலிக்கின்றது.

இலங்கையின் தமிழ் இலக்கியம் (இதனை ஈழத்து இலக்கியம் என்று கூறுவதே மரபு) 1983 முதல் இனப் பிரச்சினைகளையையும், அதன் வழி வரும் தாக்கங்கள் ஒவ்வொன்றையும் தவிர வேறொன்றையும் எடுத்துக் கூறவில்லை.

இது இலங்கையின் தமிழிலக்கியப் பிரதேசங்கள் என நாம் சாதாரணமாக எடுத்துக் கூறும் ஒன்பது பிரதேசங்களுக்கும் பொதுவானதாகும்.

அந்த ஒன்பது பிரதேசங்களும் பின்வருமாறு :

மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி, யாழ்ப்பாணம், மன்னார், வடமேல் மாகாணம் (புத்தளம், சிலாபம் முதல் நீர்கொழும்பு வரை) கொழும்பு, தென்பகுதி, மலையகம்.

இந்த ஒன்பது பிரதேசங்களிலும் இனப்பிரச்சினையே இன்று முக்கிய பிரச்சினையாகவுள்ளது.

இந்த இனத்துவப் போராட்டத்தாக்கம் முதன்முதலில் கவிதையிலேயே வெளிவந்தது. கவிஞர்கள் பலர் 1981 முதல் இனப்போராட்டத்தின் மனித நிலைப்பாதிப்புக்களைக் கவிதைகளில் எழுதினர். சண்முகம் சிவலிங்கம், ''வெளியார் வருகை'', என்ற தனது கவிதையில் எழுதிய ஒரு வரி, இந்தக் கவிஞர்களதும் மக்களினதும் நிலமையைத் தொகுத்துக் கூறுவதாய் இருந்தது. ''மரணத்துள் வாழ்வோம்'' என்பது அந்த வரியாகும்.

இந்தத் தலைப்பில் 1985இல் ஒரு கவிதைத்தொகுதி வெளிவந்தது.

1981இன் நூல் நிலைய எரிப்பு எமது இலக்கிய வெளிப்பாட்டிலே ஒரு பிரிகோடாக அமைந்தது.

அதுபற்றி இன்று அமரத்துவம் பெற்றுள்ள இரண்டு படைப்புக்கள் உள்ளன.

ஒன்று நுஃமானின் 'புத்தரின் படுகொலை' (1981) மற்றது சேரனின் – இரண்டாவது உதயத்தில் வரும் ஒரு சரிதை.

அதில் ஒரு வரி வரும் ''முகில்களின் மீது நெருப்புத்தன் சேதியை எழுதியாயிற்று'' என்று.

பாதுகாப்புப் படையினர் ஏற்படுத்திய துன்பத்தினைச் சண்முகம் சிவலிங்கம் தனது ''எமது பாடுகளின் நினைவாக'' என்ற கவிதையில் வெகு உருக்கமாகப் பொறித்துள்ளார்.

அண்மைக்காலத்து ஈழத்துத் தமிழிலக்கியத்தினை, சற்று நுண்ணியதாகப் பின்வரும் காலக் கூறுகளாக வகுத்துக் கொள்ளலாம்.

1983 – 1987

1987 – 1990 – இந்தியப்படை இங்கிருந்த – காலம்.

1990க்குப்பின்,

1995இல் நடந்த யாழ்ப்பாணக் குடிப்பெயர்வு முக்கியமானது (வன்னிக்கான குடிப்பெயர்வு)

கவிதையில் முதலில் தன்னை இனம்காட்டிக் கொண்டது.

கவிதையின் பின்னரே அது சிறுகதையில் வெளிவந்தது.

1988 இல் ரஞ்சகுமாரின் மோகவாசல் தொகுதி வெளிவந்தது.

அதில் வந்த இரண்டு கதைகள் முக்கியமானவை; ஒன்று ''கபறகொய்யா'', இலங்கையின் ஜே. வி. பி. பிரச்சினையை விளங்கிக் கொள்ள விரும்பும் எவரும் இந்தக் கதையை வாசிக்காமல் விடக்கூடாது. மற்றது கோசலை – கோசலை, போராட்ட இயக்கங்களுக்குப்போன பிள்ளைகளின் தாயைப் பற்றியது. கோசலை என்பது அந்தத் தாயின் பெயரல்ல. அது எமது கடவுளான ஸ்ரீராமனின் தாயின் பெயர்.

இதே போன்று மட்டக்களப்பில் ஏற்பட்ட வாழ்வுச் சீரழிப்பினை மிகச் சிறப்புடன் எடுத்துக் கூறிய புதிய எழுத்தாளர் திருக்கோவிலூர்க்கரியுவன்.

இவர்களைவிட இன்னும் பல இளம் எழுத்தாளர்கள் உள்ளனர். நான் அவர்கள் எல்லோரினதும் பெயர்களைச் சொல்லவில்லை. அதற்காக என்னை மன்னிக்கவும்.

இதிலே ஒரு முக்கியமான விடயம் என்னவென்றால், இந்தப் பிரச்சினைகள் பற்றி எழுதுவதில் எழுத்தாளர்களிடையே வேறுபாடு இருக்க வில்லை. இந்த விடயத்தில் 1960, 70களில் தேசிய ஒருமைப்பாடு பேசிய முற்போக்கு எழுத்தாளர்களுக்கும், அவர்களை எதிர்த்து நின்ற எழுத்தாளர்களுக்கும் வேறுபாடு இருக்கவில்லை. முற்போக்குவாதிகள், இந்தப் பிரச்சினை பற்றி எழுதியமைக்கு மூன்று எழுத்தாளர்களின் படைப்புக்களைக் குறிப்பிடலாம்.

அவர்கள், தெணியான், ராஜஸ்ரீகாந்தன், சாந்தன் ஆகியோராவர்.

இக்காலத்தில் அகதிப்பிரச்சினை மிக முக்கியமான பிரச்சியாகிற்று. போராட்டம் பற்றிய இலக்கியங்கள் பிரசுர வசதிகளில்லாமை காரணமாக, ஒலிப்பேழைகளில் (கசெற்றுக்களில்) இசைப்பாடல்களாக வெளிவந்தன. இத்தக் 'கசெற்' இலக்கியங்கள் முக்கியமானவை.

1984–88 இன் பின்னர் நிலைமை படிப்படியாக மாறத் தொடங்கிற்று. இனப்போராட்டம் நடந்து கொண்டிருந்த அதே வேளையில் மூன்று அமிசங்கள் முக்கியப்பட்டன.

1. குழுக்களிடையே போராட்டங்கள்.
2. சில இயக்கங்களின் மிகைத் தாக்குதல்கள் இதற்கு எதிராக எழுத்தாளர்கள் பலர் எழுதினர். விஜேந்திரன் என்பவர் இங்கு குறிப்பிடப்படவேண்டியவர்.
3. வடக்கிலிருந்து முஸ்லிம்களின் வெளியேற்றம். (இது 1990 இல் நடைபெற்றது).

இந்த 1987, 88க்குக் காலம் முதல்தான் எமது இலக்கிய உலகில், புலம்பெயர் இலக்கியம் என்ற முக்கிய நிகழ்வு ஏற்பட்டது.

இக்காலப்பகுதியில் பெருந்தொகையான இளைஞர்களும் குடும்பங்களும், மேலைநாடுகளுக்கு அகதிகளாகச் சென்றனர். இன்று ஏறத்தாழ ஐந்து லட்சம்பேர் அகதிகளாக வெளிநாடுகளில் உள்ளனர்.

இவ்வாறு சென்றவர்களுள் இலக்கிய ஆர்வமுடையோர் குழுக்களின் உட்சண்டைகள் பற்றியும் எழுதினரெனினும் ஆக்க இலக்கியங்களில்,

(1) இடம் பெயர்வு ஏற்படுத்திய இன்னல்களைப் பற்றியும்
(2) அந்நியப்பட்டுப்போன வாழ்க்கை பற்றியும் பதிவு செய்தனர்.

இந்தப் புலம் பெயர் இலக்கியங்களின் மூலமாக ஆற்றல் மிகுந்த எழுத்தாளர்கள் அறியப்பட்டனர். அரவிந்தன், பார்த்திபன், சுரேஷ் சுப்பிரமணியன், விஜேந்திரன் எனப்பல பெயர்களைக் குறிப்பிடலாம். புலம்பெயர் இலக்கியத்தின் பதிவுகள் இப்பொழுது ஆங்கிலத்திலும், பிரெஞ்சிலும் வெளிவரத் தொடங்கின.

இதே வேளையில் இங்குள்ளவர்கள், தங்கள் வாழ்வியலின் நெருக்கடிகளைச் சிறுகதை, நாவல்களில் பதிவு செய்தனர். இத்தகைய எழுத்தாளர்களுள் தாமரைச் செல்வி, செங்கை ஆழியன் முக்கியமாக எடுத்துப் பேசப்பட வேண்டியவர்கள்.

இந்தப் பிரச்சினைகள் மலையகத்தினரையும், முஸ்லிம்களையும் பாதித்துள்ளது. குறிப்பாக கிழக்கிலங்கை முஸ்லிம்களின் நிலைமை முக்கியமான இலக்கிய இடத்தைப் பெறுகிறது. அது பற்றிச் சற்றுப் பின்னர் பார்ப்போம்.

அண்மைக் காலத்துத் தமிழிலக்கிய வளர்ச்சியின் ஒரு முக்கிய அமிசம் பெண்களின் எழுத்துக்களாகும். இவற்றைப் பெண் நிலைவாத மொழிவுகள் என்று கூறலாம். பெண்கள் தங்கள் நிலை நின்று இனப்பிரச்சினை தங்களைப்பாதிக்கும் முறைமையினை எடுத்துக்கூறத் தொடங்கினர்.

இதில் ஒரு முக்கிய அம்சம் என்னவென்றால் போராளிப்பெண்கள் கணிக்கப்படத்தக்க ஆக்க இலக்கியங்கள் படைத்தனர். அவர்களுள் பாரதி என்பவர் குறிப்பிடத்தக்கவர்.

இதேவேளை, மக்களிடையே ஏற்பட்ட வாழ்க்கைச் சிதைவுகளையும் பயங்களையும் சந்திரா தியாகராஜா, தாமரைச் செல்வி போன்ற பெண் எழுத்தாளர்கள் நன்கு பதிவு செய்தனர்.

பெண்கள் இலக்கிய முயற்சிகள் பற்றிப் பேசும்பொழுது யூன் 3–18 (1997) சரிநிகர் இதழில் கலாலா எனும் பெண் கவிஞரால் எழுதப்பட்டுள்ள "கோணேஸ்வரிகள்" என்ற கவிதை ஏற்படுத்தியுள்ள வாதத்தினைப் பற்றிக் குறிப்பிடல் வேண்டும்.

முஸ்லிம்கள் வடக்கிலிருந்து வெளியேற்றப் பட்டுள்ளமை ஒரு முக்கிய பிரச்சினையாக மேற்கிளம்பிற்று. இது சம்பந்தமாக விரிவான சுயவிமர்சனம் நடந்துள்ளது. முஸ்லிம்களை அவ்வாறு வெளியேற்றியமை தவறு என்ற கருத்தும் அது துரதிர்ஷ்டவசமான ஒரு நடவடிக்கை என்பதும் இப்பொழுது ஏற்கப்படுகிறது.

கிழக்கிலங்கையின் அநுபவங்கள் இவ்விடயத்தில் தனித்துவமுடையவை. அங்கு தமிழர்களும் முஸ்லிம்களும் பக்கத்துப் பக்கத்துக் கிராமங்களில் வாழ்பவர்கள். அங்கு தமிழ் முஸ்லிம் போராட்டங்கள் மிகப் பெரிய தாக்கத்தினை ஏற்படுத்தின.

இந்த அநுபவங்களை, மட்டக்களப்பு மண்ணுக்குரிய மொழி மரபு நுண்மையுடன் சோலைக்கிளி என்ற கவிஞர் வெளிக் கொணர்ந்தார். இது எமது தமிழ்க் கவிதை வளர்ச்சியில் ஒரு புதிய பாய்ச்சலாக அமைந்தது.

1995இல் ஏற்பட்ட வன்னிக்கான யாழ்ப்பாணப் புலப்பெயர்வு மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்திற்று.

இதனூடாகவும், இதனைத் தொடர்ந்தும் அகதிப் பிரச்சினை மோசமடைந்து மிக உக்கிரமான நிலை

ஏற்பட்டுள்ளது. இந்தப் புதிய நிலைமையைச் சுட்டிக் காட்டுகிறது தாமரைச் செல்வியின் அண்மைக் காலச் சிறுகதையொன்றின் தலைப்பு, அது "அழுவதற்கு நேரமில்லை" என்பதாகும்.

இலக்கியம் பற்றிய இந்தக் குறிப்பில், இந்தக் காலத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் அரங்கு பயன்பட்ட முறைமை பற்றிக் கூறுவது அவசியம்.

இக்கால கட்டத்தில் மக்கள் எதிர்நோக்கிய அழுத்தங்களையும் முற்றுமுழுதாக அச்சுச் சாதனம் மூலம் வெளிப்படுத்த முடியாத ஒரு நிலைமை இருந்தது. அந்த வேளையில் சண்முகலிங்கம், சிதம்பரநாதன் முதலியோரின் அரங்கப் பணி முக்கியமானதாகும். இவை காரணமாக ஏற்பட்ட நாடக விழிப்புணர்வின் வளர்ச்சிக்குத் திருமறைக் கலா மன்றத்தின் பணி முக்கியமானதாகும்.

இந்த எழுத்துக்கள், ஆக்கங்கள் யாவும் தமிழ் மக்களுக்கேற்படுத்தியுள்ள திகைப்பையும் அந்நியப் பாட்டையும் எடுத்துக் காட்டுகின்றன. தமிழ் மக்கள் அந்நியப்பட்டு நிற்கின்றனர்.

இந்த வேளையில் கல்வித் துறையில் உள்ள சில விடயங்கள் நிலைமையை மேலும் மோசப்படுத்துகின்றன.

அழகியற் கல்வி, பண்பாடு சம்பந்தப்பட்டது. அந்த அழகியற் கல்விக்குரிய வரைதல் (Art) எனும் பாடத்தில், க.பொ.த. (சா.த) பாடத்திட்டத்தில், தமிழ்ப் பண்பாட்டுக்கோ இஸ்லாமியப் பண்பாட்டுக்கோ இடமில்லாதுள்ளது. இது தமிழ், முஸ்லிம் மாணவர்களுக்குப் பெரும் சிரமத்தைக் கொடுக்கின்றது. பரதம் பற்றிய கற்கை நெறியிலும் பிரச்சினையுள்ளது.

இந்தப் பிரச்சினைகள் இருப்பதை உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

IV

அடுத்து, இந்த விடயத்தைச் சற்று அகண்ட ஒரு பின்புலத்தில், வைத்து நோக்க வேண்டுவது அவசியமாகிறது.

இந்தப் பண்பாடுகளின் ஒருங்கிணைவு பற்றிப் பேசும்பொழுது, இந்தப் பண்பாடுகளின் வரலாற்றுத் தன்மையை விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

முதலில் சிங்களப் பண்பாட்டை எடுத்துக் கொள்வோம்.

இலங்கைக்குள் வந்த பல்வேறு செல்வாக்குகளை உள்வாங்கிய சிங்கள மக்கள் தமக்கென ஒரு பண்பாட்டுப் பாரம்பரியத்தை உருவாக்கி வளர்த்தெடுத்துள்ளார்கள். அதற்கு ஒரு தனித்துவமும் உண்டு. அது தனது தனித்துவத்துக்கு ஊறு இல்லாவகையில் மற்றைய பண்பாடுகளுடன் இணைந்து கொள்கிறது.

தமிழ்ப் பண்பாட்டுக்குச் சில முக்கியமான தனித்துவங்கள் உண்டு. அனைத்திந்தியாவில் வடமொழிப் பண்பாடு மேலோங்கியிருந்தும், அதனூடே தமிழ்ப் பண்பாடு தன் தனித்துவத்தை என்றும் இழக்காது இருந்து வந்துள்ளது. இந்த மொழியின் ஒரு முக்கிய பண்பு, ஒன்றுக்கொன்று வேறுபட்ட பல்வேறு மதங்கள் தங்கள் கருத்துக்களை வெளியிடுவதற்கான ஒரு பெரும் நெகிழ்ச்சி இந்த மொழிக்கு உண்டு. இது தனது தனித்துவத்துக்கு ஊறு இல்லா வகையில் மற்றைய பண்பாடுகளுடன் இணைந்து கொள்கிறது.

இஸ்லாமியப் பண்பாடு நாடு, இன, மொழி வேறுபாடுகளைக் கடந்து தனது மத நம்பிக்கையின் அடிப்படையில் ஒரு உலகப் பொதுவான பண்பாட்டை உருவாக்கியுள்ளது. அது மற்றைய பண்பாடுகளுடன் தொடர்பு கொள்ளும் பொழுது தனது தனித்துவத்தைக் கைவிடாது.

இலங்கையிற் பண்பாட்டு ஒருங்கிணைவு என்பது இந்தப் பண்பாடுகளின் தனித்துவங்களை ஏற்றுக் கொண்டு, அவற்றினிடையே ஓர் ஒருங்கு நிலைப்பாட்டை ஏற்படுத்த வேண்டும்.

இந்தச் சவாலை ஏற்றுக் கொள்வதிலேயே இந்த நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது.

"புதுமை இலக்கியம்"
சிறப்பு மலருக்கு
எமது மனம் நிறைந்த
நல் வாழ்த்துக்கள்!

Lanka Polythene Industries (Private) Ltd.

32, A - K. Cyril C. Perera Mawatha,
Colombo-13.

இ.மு.எ. சங்கத்துக்கு இளைய மனிதனின் இன்றைய பிரகடனம்

மேமன் கவி

என் இலக்கிய பால்ய காலத்தின்
உன்னத தரிப்பிடமே !
உனக்கு எனது ஆத்மார்த்த நன்றிகள் !
நீ - இலங்கை தமிழ் இலக்கிய வரலாற்றின்
ஒரு சகாப்பத்தின் நதி மூலம் ;
என்னை நானே இலக்கிய இயக்கத்தில்
கண்டு பிடித்த ஆதி மூலம் ;

உன் வெந்த பாதச் சுவடுகளில்
தத்துவ கப்பல்கள் தமது
கலங்கரை விளக்குகளை கண்டு பிடித்தன ;

நீ
விதையாகி விளைவித்த விருட்சங்கள்
இன்று -
தம்மை வியாக இலக்கிய தாவர ஜாதிகளாய்
பிரகடனப்படுத்திக் கொண்டன ;

இதோ
இந்த இளைய மனிதனும்
அந்த ஜாதிகளில் ஒருவனாய்....
காலத்தின் - (Space)
சாய்வு நாற்காலிகளில்
சயனிக்கப் போன இலங்காபுரியின்
தமிழ் இலக்கிய சரிதத்தை
ஆய்வு சாதனைக்கு அனுப்பி வைத்த
அழகிய அம்சம் நீ !

உன் நிழலின் அடியில் குருகுலம்
பயின்றவர்கள்
இன்று
உன் மடியில் அறிஞர்களின் பட்டயத்துடன்
உலா வருகிறார்கள் ;

உனது சரித்திரத்தில் வந்த ஆயிரம் ஆயிரம்
சருகுகள் இன்று
சரித்திர மகத்துவம் பெற்று
இலக்கியம் பேசும் ஆத்மாக்களாய்
தம்மை அறிமுகம் செய்து கொண்டன;

இந்த
இளைய மனிதனும்
அவர்களில் ஒருவன் !

நீ விதையாகி போன விஷயத்தை
சிலர் சிதைவுகளாய் பார்த்த வேளையெலாம்
உன் தலைமைத்துவத்தின் பலத்தால் தானே
களத்தில் கால் ஊன்றிக் கொண்டாய் !

நீ
முற்போக்கு எனும்
சிவப்பு விளக்கு தான் !

ஆனாலும்
இலங்கையின் தமிழ் இலக்கிய வரலாற்றை
நிறுத்தி வைக்கவில்லை
அதனை
நிறுத்துப் பார்க்கும்
இலக்கிய தராசாய் அல்லவா
அவதாரம் எடுத்தாய் !

இதோ
வரலாறு உனது விளைவுகளில்
தன்னை காத்து
இலங்கையின் தமிழ் இலக்கியத்தின்
பிதா வென உன்னை
பிரகடனப்படுத்திக் கொள்கிறது.

இந்த இளைய மனிதனின்
தலைமுறைகள் இலக்கிய வாதிகளாய்
தம்மை அடையாளம் காட்ட
நீயே அனுமதி பத்திர மானாய் !

எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

நந்தாஸ் மலிரி ஷொப்

236, செட்டியார் தெரு,
கொழும்பு-11.
தொலைபேசி. 329545

குழந்தைகளின் சகலவிதமான தேவைகளையும் பூர்த்தி செய்யும் நிறுவனம்.
சவர்க்காரங்களும், பவுடர் வகைகளும், நப்கின், பேபி பெம்பர்ஸ், நடைவண்டிகள், பேபி கொமோர்ட், ஆடைகள், சுவெற்றர்கள், பரிசுப் பொருட்கள், வாழ்த்துமடல்கள், சில்லறைச் சாமான்கள் - ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் வெளியீடுகளான அனைத்து நூல்களும் கிடைக்குமிடம்.

இணை நிறுவனம்:

சிவா டெக்ஸ்டைல்ஸ்,

172, மெயின் வீதி, கொழும்பு–11.
தொலைபேசி இல: 422523.

ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில்

மலையக எழுத்தாளர்களின் பங்கு

தெளிவத்தை ஜோசப்

தமிழ் இலக்கியம் என்றும், இலங்கைத் தமிழ் இலக்கியம் என்றும் பேசப்படுவது போல் மலையக இலக்கியம் என்றும் தனியாகப் பேசப்படும் அளவுக்கு மலையக உழைக்கும் மக்கள் பற்றிய இவ்வெழுத்துக்கள் ஈழத்து இலக்கியத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி வந்திருக்கின்றன. 'மலையகத் தமிழாராய்ச்சி மகாநாடு' என்றும் அண்மையில் நடந்தேறியுள்ளமை இப் பெருந்தோட்ட பிரதேச மக்கள் பற்றிய ஒரு உணர்வு பரவலாக வேரூன்றி வருவதை உணர்த்தி நிற்கின்றது.

ஏறத்தாழ நூற்றி எழுபது ஆண்டுக்குள் அடங்கியதே இம் மலையக சரித்திரம் (1827–1997) என்றாலும் அதற்கொரு ஆழமான கலாச்சார வரலாற்றுப் பின்னணி உண்டு. இந்திய வம்சாவளித் தமிழர்களாகிய இவர்கள் இங்கு கொண்டு வரப்பட்ட போதே தங்களுடைய பழமை மிகுந்த தென் இந்திய கலை கலாசார பண்பாட்டுக் கோலங்களையும்; மத நம்பிக்கைகளையும், வழிபாட்டு முறைகளையும் தங்களுடன் கொண்டே வந்துள்ளனர்.

19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஏறக்குறைய 1815 ஆம் ஆண்டளவில், இலங்கையில் இதுகால வரையும் ஆங்கிலேயருக்கு உட்படாதிருந்த கண்டி ராஜ்யமும் அவர்கள் கைவசம் வரவே முழு இலங்கையும் ஆங்கிலேய ஆட்சிக்குக்கீழ் கொண்டுவரப்பட்டது. இதைத் தொடர்ந்து அரசியல் பொருளாதாரத்துறைகளில் புதிய அணுகு முறைகளை ஆங்கிலேயர் கடைப்பிடித்தனர். இலங்கையில் முக்கிய பொருளாதார நடவடிக்கையாயிருந்தது விவசாயம். முக்கிய விவசாயப் பயிராய் இருந்தது நெல்.

இது வரை காலமும் இலங்கையை ஆண்ட அந்நியர்களான போர்த்துக்கேயர்; ஒல்லாந்தர், ஆங்கிலேயர் உட்பட ஏலம், கறுவா போன்ற வாசனைத் திரவியங்களுக்கும், ரத்தினம், முத்து போன்ற விலையுயர் கற்களுக்குமே முக்கியத்துவம் கொடுத்து வந்தனர். இவை யாவும் இலங்கைக்கேயுரிய பாரம்பரிய பொருட்கள். ஆனால் ஆங்கிலேயர் முழு இலங்கையையும் தம்வசப்படுத்திய பின் புதிய ஒரு பயிரான கோப்பியை இங்கு பயிரிட்டதன் மூலம் இலங்கையின் பொருளாதார வரலாற்றின் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தினர். கோப்பி செய்கைக்குரிய காலநிலையை இலங்கை கொண்டிருந்ததாலும்; கோப்பிச் செய்கையில் முன்னணியில் நின்ற மேற்கிந்தியத் தீவுகள் கோப்பிப் பயிர் செய்கையை கைவிட்டிருந்ததாலும் ஐரோப்பாவில் கோப்பிக்கு பெரும் கிறாக்கி இருந்ததாலும் இலங்கையின் கோப்பிச் செய்கை நிலைபெற்று நிற்கத் தொடங்கியது. பெருந்தொகையான நிலம் கோப்பிச் செய்கைக்கு உட்படுத்தப்பட்டது. இதற்கென பிரத்தியேகமான ஒரு தொழிலாளர் கூட்டம் அவசியமானதாக இருந்தது. குறைந்த கூலிக்கு தொழிலாளர்கள் தென்னிந்திய மானிலங்களிலிருந்து கிடைக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் இருந்ததாலும், இந்தியாவும் ஆங்கிலேயரது ஆட்சிக்குட்பட்ட நாடாகவே இருந்ததாலும் இலங்கை இந்தியர் என்று கூறப்படும் மலையக மக்கள் இலங்கையின் மத்திய பகுதிக்குக் கொண்டு வரப்பட்டனர்.

கண்டி ராஜ்யமும் ஆங்கிலேயர் கைகளில் விழுந்த பின்னரே காடுகள் மலிந்து மனித சஞ்சார மற்ற இம் மத்திய மலைப்பகுதியை காடழித்துத் திருத்தி நாடாக்கி பயிர் செய்கைக்கு ஏற்ற நிலமாக மாற்றவும் மலைகளைக் குடைந்து பாதைகள் போடவும் இந்த மக்கள் பட்ட சிரமங்கள் ஏட்டில் அடங்காது. எழுத்தில் அடங்காது. 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையின் தேசாதிபதியாக இருந்த சர் மெயிட்லண்ட் என்பார், பொருளாதார நடவடிக்கைகளில் தனியார் ஈடுபட முடியாதவாறு அது வரை இருந்த அரசியல் சட்டங்களை ரத்து செய்தார். அரசாங்க ஏக போக உரிமைகள் ரத்து செய்யப்பட்டதால் வெள்ளைக்கார முதலாளிகள் கொழும்புக்கு வெளியே நிலம் வாங்க முடிந்தது. கண்டி ராஜ்யத்தின் பெரும்பான்மையான நிலங்கள் ஏழை விவசாயிகளிடமிருந்து குறைந்த விலைக்கு வாங்கப்பட்டன. தேசீய பொருளாதார நடவடிக்கைகளில் தனியாரின் ஈடுபாட்டை உற்சாகப்படுத்தும் அரசியல்

அழுத்தமும் இந்த பெருவாரியான நில விற்பனையை நிர்ப்பந்தித்து நின்றது. ஆங்கிலேயத் தனியார் முதலீடு மலைப்பிரதேசத்தில் ஏகமாக விழுந்தது.

பிரிட்டிஷ்காரர்களின் முதலீடும், இந்தியத்தமிழர்களின் உழைப்பிற்கான வருகையும் கண்டியை மையமாகக் கொண்ட மத்திய மலைப்பகுதியை வளம் கொழிக்கும் பூமியாக மாற்றத் தொடங்கின.

நிலமற்ற விவசாயிகளாகவும்; நாட்கூலித் தொழிலாளர்களாகவும் இந்தியக் கிராமங்களில் இருந்த இவர்கள், நெற் பயிர் செய்கையிலும், விவசாயத்திலும் அக்கறையற்ற ஆங்கிலேயர்களின் அரசியல் நடவடிக்கைகளால் அங்கேயே பட்டினிக்குள்ளாக்கப்பட்டனர். வேலையில்லாத் திண்டாட்டம் பசி பட்டினி பஞ்சம் என்று கிடந்தவர்களை "பசியாறச் சோறு, படுத்துத்தூங்க வீடு, அது இது" என்று கூறி இலங்கைக்குக் கூட்டிவரத் தொடங்கினார்கள் வெள்ளைக்கார முதலாளிகளின் கைக்கூலிகளான கங்காணிகள்.

இந்தியக் கிராமங்களில் இருந்து இவர்கள் கிளம்பி வந்தபோது இலங்கைக்குப் போவதாகக் கூறவில்லை. கண்டிக்குப் போவதாகவே கூறிக்கிளம்பினர். முதலில் கிளம்பி வந்தவர்கள் ஆண்கள் என்பதையும் கண்டிக்குப் போவதாகவே கூறிக் கிளம்பியதையும் இவ் வாய் மொழிப்பாடல் ஊர்ஜிதப்படுத்துகிறது.

"கண்டி ஒருகாதம் கதிர்கொழும்பு முக்காதம்,
முக்காதம் போர சாமி எக்காலம் வருவீரோ.."

அடிமைகளாகவே இங்கு வந்தவர்கள் பட்ட பாடுகளும் வதையின் கதைகளும் அங்குள்ளவர்களுக்கு தெரிந்துவிடுகிறது. செத்து மடிந்த செய்திகளும், தப்பினேன் பிழைத்தேன் என்று திரும்பி ஓடிப்போன ஓரிருவர் கூறிய கதைகளும் கண்டிச்சீமையின் நரக வாழ்வை அப்போதே காட்டி இருக்கிறதை கீழ்க்காணும் பாடல்கள் காட்டி நிற்கின்றன.

கண்டிக்குப் போன மச்சான்
கடுக்கன் வித்து தின்னமச்சான், என்று
வெறுங்கையுடன் திரும்பியவனையும்.

கண்டி கண்டி என்காதீங்க
கண்டி பேச்சு பேசாதீங்க
கண்டி படும் சீரழிவை
கண்ட பேர்க சொல்லுறாக" என்று புதிதாகக் கிளம்புகிறவனையும் இப்பாடல்கள் எச்சரிக்கின்றன.

தோட்டத் தொழிலாளரின் இலங்கை வருகை, இந்நாட்டைச் சுரண்ட வந்த ஒரு அந்நிய இனத்தவரின் நடவடிக்கையால் ஏற்பட்ட ஒன்று.

இலங்கையின் பாரம்பரியப் பொருளாதாரத்தில் தளர்ச்சியை ஏற்படுத்தி பிறநாடுகளில் தங்கி இருக்க வேண்டிய ஒரு பொருளாதார அமைப்பை உருவாக்கிக் கொடுத்ததே ஆங்கிலேயரின் இப்பெருந்தோட்டத்துறை அறிமுகம்தான். இப் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்காக அவர்கள் பயன்படுத்திய நிலங்கள் ஏழைச் சிங்கள விவசாயிகளினுடையது. இதையிட்டு ஒரு பாமர ஏழைச்சிங்கள விவசாயியின் அபிப்பிராயம் என்னவாய் இருக்கும். "தன் நிலத்தைப் பறித்து இந்தியாவிலிருந்து வந்த இந்தக் கூட்டத்துக்குக் கொடுத்து விட்டான் வெள்ளைக்காரன். தான் அனுபவிக்க வேண்டியதை இந்தியாக்காரன் அனுபவிக்கிறான் என்ற ரீதியிலேயே அமைந்தது. ஆங்கிலேயரின் இப்புதிய நடவடிக்கைகளால் தன் உழைப்பில் தனக்கே உரிமை இல்லாது கசக்கிப் பிழியப்படும் தோட்டத் தொழிலாளியின் நிலைமை என்ன, பங்கு என்ன என்பதெல்லாம் இப் பாமர ஏழை விவசாயியின் அறிவுக்கு எட்டாத ஒன்று. இந்நிலையில் அவனது எதிர்ப்புணர்ச்சி இப்பரிதாபமிக்க தொழிலாளர் மீதே படிந்தது.

இன்றும் சிங்கள மக்கள் மத்தியில்–குறிப்பாக கண்டிய கிராமப்புற சிங்கள விவசாயிகள் மத்தியில்– இம்மலையகத் தமிழர்கள் பற்றிய அபிப்பிராயம் அதுவாகவே இருக்கிறது.

இத்தகைய மனோபாவத்துக்கு சில வரலாற்றாசிரியர்கள் சரித்திர வரலாற்றை சான்று கூறுகின்றனர். தென்னிந்தியாவில் தமது சாம்ராஜ்யத்தை நிறுவிய எந்த அரசும் இலங்கையிலும் தம் ஆதிக்கத்தை நிலைநாட்டியே வந்துள்ளது. சோழப் பேரரசு, பாண்டியப் பேரரசு; விஜய நகர சாம்ராஜ்யம் போன்றவைகளை இதற்குச் சான்றாகக் கூறலாம். இவ்வரலாற்று நிகழ்ச்சிகள் சிங்கள வரலாற்றுக் குறிப்புகளிலும் இலக்கிய ஏடுகளிலும் சித்தரிக்கப்பட்டு பெரும்பான்மை மக்கள் மத்தியில் தென்னிந்தியரைப் பற்றிய மாறான எண்ணத்தையே ஏற்படுத்தி வந்துள்ளன. சரித்திர ஆசிரியரான திரு. கொடிக்கார அவர்கள் தென்னிந்தியர்கள் சிங்களவர்களுக்கு பாரம்பரிய எதிரிகள் என்று கூறுகின்றார். South Indians are a traditional enemies to the Sinhala.

இம்மலையக மக்களின் பிரதான அம்சமாக பெருந்தோட்டத் தொழில் அமைந்து விட்டதாலும், அடிப்படைத் தேவைகள் அனைத்தும் தோட்டங்களுக்குள்ளேயே தீர்க்கப்பட்டதாலும் தாங்கள் புலம் பெயர்ந்து வந்த இந்தியக் கிராமிய சமூக, கலை, கலாசார நிலைமைகளையே இங்கும் பேணக்கூடிய வகையில் பெருந்தொகையாக இடம் பெற்ற குடியேற்றத்தினாலும் தோட்டத்துக்கு வெளியே செல்லும் தேவை இம்மக்களுக்கு இருக்கவில்லை. மற்ற சமூகத்தினருடன் பழகாமல், சிறைக்குள் வைக்கப்பட்ட அடிமைகள் போல் தனிமைப்பட்டுப் போய்க் கிடந்து விட்டதும் இவர்களுடைய இற்றைவரையிலான அவலங்களுக்கு ஒரு முக்கிய காரணியாகும். 1800 களின் ஆரம்பத்தில் அரசியல் சட்ட திட்டங்கள் ஓரளவு தளர்த்தப்பட்டாலும் ராஜகாரிய முறை ஒழிக்கப்படவில்லை. அரசாங்க, தனியார் தோட்டங்களில் கட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே தொழில் புரிய வேண்டிய நிர்ப்பந்தம் இம்மக்களுக்கு இருந்தது.

பிரிதொரு தேசத்திலிருந்து வந்த இவர்கள் புதிய இடங்களில், புதிய சூழலில், பழக்கமற்ற சுவாத்திய நிலைமைகளில், குடியேற்றப்பட்டு, இந்நாட்டின் பிறமக்களுடன் சேர்ந்து வாழவோ, பரஸ்பரத் தொடர்புகள் கொள்ளவோ; பழகவோ, சந்தர்ப்பங்கள் இன்றி சட்ட ரீதியாகவும் தனிமைப் பட்டிருந்தனர்.

பெரும்பான்மை ஓட்டை மட்டுமே நம்பி ஆட்சி செய்யவரும் அரசியல்காரர்கள் தோட்ட சுவீகரிப்பு; காணிப்பகிர்வு; போன்ற நடவடிக்கைகள் மூலமும் அடிதடிகள் கலவரங்கள் அத்துமீறல் குடியேற்றங்கள் போன்றவைகளை கண்டும் காணாதது போல் இருந்து விடுதல் மூலமும் தோட்டத்தையே நம்பி இருக்கும் அம்மக்களை–உழைப்பை மட்டுமே ஆதாரமாகக் கொண்ட இத் தொழிலாளர் கூட்டத்தை வீடற்றவராக, நாடற்றவராக, வீதிகளில் விரட்டிவிட்டு, மட்டக்களப்பு, திருகோணமலை என்றும், வவுனியா கிளிநொச்சியென்றும், வந்தது போலவே வெறும் கையுடன் இந்தியாவுக்கென்றும் அனாதைகளாய், அகதிகளாய் அலைய விட்டிருப்பதெல்லாம் வெள்ளைக்காரர்களின் ஆதிநாளைய செயற்பாடுகளுக்கான மீள் நடவடிக்கைகள் தான். ஆனால் பலியாகிறவர்கள் இந்தப் பரிதாபத்துக்குரிய மக்கள்.

கோல்புருக் விசாரணைக் குழுவின் சிபார்சின் படி 1930 களிலேயே ராஜகாரிய முறை ஒழிக்கப்பட்டது. ஒரு நூற்றாண்டு கால அடிமை வாழ்வின் பின்; அந்தத் தனிமைப்படுத்தலில் இருந்து மாற்றங்கள் ஏற்பட்டன. நாட்டின் பொது நடவடிக்கைகளில் ஈடுபடவும் பிற சமூகத்தினருடன் கலந்து அடைவதற்கு பழகவும் வாய்புக்கள் தோன்றின. இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்பிருந்தே இம்மலையக மக்களையிட்டு சிங்கள அரசியல்வாதிகள் மத்தியில் ஒரு பயம் கலந்த சந்தேகம் புகைந்து கொண்டே இருந்தது. இந் நாட்டின் பாரம்பரிய பொருளாதாரத்தை சீர்குலைத்து பிற நாடுகளில் தங்கி இருக்க வேண்டியதொரு ஏற்றுமதிப் பொருளாதார அமைப்பை ஏற்படுத்திய பிரித்தானியர்களுக்குத் துணைநின்றவர்கள் இப் பெருந்தோட்ட மக்கள் என்பது அவர்களின் கோபம். ஆனால் வெள்ளைக்காரர்களைக் கோபித்துக் கொள்ளும் மனமோ மனத்திடமோ அவர்களிடம் இல்லை. ஆகவே இலங்கை சுதந்திரம் அடைந்த அதே 1948இல் இலங்கைப் பிரஜா உரிமைச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். பிராஜா உரிமை யாருக்கு வழங்கப்பட வேண்டும் என்பதை விட யாருக்கு வழங்கப்படக்கூடாது என்பதிலேயே அதிக அக்கறை காட்டப்பட்டது. இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமையைக் கட்டுப்படுத்துவதே இச்சட்டமூலத்தின் மையம். ''இங்கிலீஷ் காரர்களின் கைகளிலிருந்த ஆட்சி அதிகாரம் இந்தியர்களின் கைகளுக்குப் போவதை நாம் அனுமதிக்கப்போவதில்லை'' என்னும் இலங்கையின் முதற் பிரதமரின் கூற்று இவர்களையிட்டு அவர்களின் பயத்தை ஊர்ஜிதம் செய்யவல்லது.

ஒரு சமூகத்தின் உயர்வும் முன்னேற்றமும் அச்சமூகத்தினர் அதனை மதிக்கும் போதும் தம் சமூகக் குறைபாடுகளை தாங்களே களைய முன்வரும் போதுமே ஏற்பட முடிகிறது. மலையக சமூகத்தின் மூத்த பரம்பரையினர் கல்வியறிவற்றவர்கள். தோட்டங்களில் உழைப்பதற்கும் வேளை வரும் போது செத்து மடிவதற்கும், செத்த பின்பும் இத்தேயிலைக்கே உரமாவதற்குமே பிறந்து விட்டவர்கள் நாங்கள் என்று இருந்துவிட்டவர்கள். தங்களைப் பற்றிச் சிந்திக்க அவர்களுக்கு வாய்ப்போ வசதியோ அதற்கான நேரமோ இல்லை. அதுவே இவர்களின் உயர்வும் முன்னேற்றமும் படித்த இளம் தலைமுறையினரிடயே தங்கியிருந்தது. இன்று இது குறிப்பிட்ட அளவு உணரப்பட்டுள்ளமை இம்மக்களின் விழிப்புணர்விலிருந்து அறியக்கிடக்கிறது.

உழைக்கப் பிறந்தவர்களாகவே இருந்து விட்ட நிலையிலும் அவர்களுடைய வாழ்க்கைப்பாடுகள் கண்டிச் சீமைக்குக் கப்பலேறியதிலிருந்து தலைமுறை தலைமுறையாக இங்கேயே வாழ்ந்து மடியும் வாழ்வின் பல்வேறு நிலைமைகளை தங்களது வாய்ப்பாடல்கள்

மூலம் பதிந்து வைத்திருக்கும் உண்மை வியப்புக்குரியது. தாலாட்டில் இருந்து ஒப்பாரி... காதலில் இருந்து கடவுள் வழிபாடு வரை.

நாங்க வந்த கப்பல்
நல்லதொரு கப்பல்
ஆழக்கடலினிலே ஆடி அசைந்தடி
நீலக்கடலினிலே நிக்காம வந்ததடி என்று

தாங்கள் ஏறிவந்த கப்பல் ஆடி அசைந்து மெதுவாக வந்ததைக் கூறி மகிழ்கின்றார்கள். இந்த ஆரம்ப மகிழ்வும் கடலைக் கண்டதால் ஏற்பட்ட வியப்பும் சில நொடிகளில் மறைந்து விடும் என்று கண்டார்களா.. ?

கடல் காத்து வீசயில கண்ணு ரெண்டும் சுத்துதடி
குடிச்சு வந்த கஞ்சி கொட கொமட்டி வெளியாச்சுதடி

என்னும் அடுத்த கட்ட ஆயாசம். பயணமே நல்லதாக இல்லை. வந்த இடம் புதிய இடம்! கூட்டிவரும் போது கூறிய கதைகள் பொய்யானவை என்பது தெரிகிறது. புகுந்த இடத்தின் பொய்மை பிறந்த இட ஏக்கமாகக் கிளம்புகிறது.

காருதடி கம்பரிசி.. கசங்குதடி காணுத்தண்ணி,
இனிக்குதடி நம்மசீமை இனிப்பயணம் தப்பாது.

என்றும்

கோண கோண மலையேறி கோப்பிப் பழம் பறிக்கயிலே
ஒரு பழம் தப்பிச்சின்னு ஒதைக்கிறானே சின்ன தொரை

என்றும் தாங்கள் பட்ட கஷ்டங்களையும்

கூடை குத்தாங்க குனிஞ்சு கொழுந்தெடுக்க...
கூடை தலைமேலே எங்க கொழந்தைக மடுவத்திலே..

என்று வந்ததும் வேலை செய்யப் பணிக்கப்பட்ட விதத்தினையும் கொழுந்தெடுத்தும் பழக்கமில்லை.

சில்லரைக் கங்காணி சேவுகமே எங்களை
சீமைக்கே அனுப்பிடுங்க சாம்.. சாமி.. என்றும்

திரும்பிப் போய் விடத் துடிக்கின்றார்கள்.

காலத்தை வென்று வாழக்கூடிய ஜீவசக்திமிக்க நாட்டு பாடல்களே மலையக இலக்கியத்தின் தோற்று வாயாகிறது. இரத்தத்திலும், வேதனையின் ஏக்கத்திலும் இருந்து பிறந்த தோட்டப் பகுதி நாட்டார் பாடல்கள் பெரும்பாலும் பெண்கள் வாய்ப் பாடல்களாகவே முகிழ்கின்றன. சகல புண்களுக்கும் காலமே மருந்தாகலாம். ஆனால் வடுக்கள் புண்களை நினைவு படுத்திக் கொண்டே இருக்கும்.

170 ஆண்டு கால மலையக சரித்திரத்தில் மலையக எழுத்துக்கு 125 ஆண்டு காலச் சரித்திரத்தைத் தேடிக்கொடுத்திருக்கிறது 1869ல் வெளிவந்துள்ள 'கோப்பிக்கிருஷிக்கும்பி' மலையகத்தில் இருந்து எழுந்த முதல் நூல் என்னும் பெருமையும் இதற்குண்டு. இந்நூலை இயற்றி மிக நேர்த்தியாக அச்சிட்டு வெளியிட்டவர் ஆபிரஹாம் ஜோசப் என்னும் கோப்பித் தோட்டக் கண்டக்டர். அக்காலத்தில் மலைநாட்டில் அச்சுக் கூடங்கள் எதும் இல்லாத நிலையில் யாழ்ப்பாணம் "ஸ்ட்ராங் அன் ஆஸ்பரி' பிரிண்டர்ஸ் என்னும் அச்சகத்தில் இந்நூலை அச்சிட்டிருக்கின்றார் அவர். ஆங்கிலத்திலும் தமிழிலுமாக அச்சிடப்பட்டுள்ள இந்நூலின் தலைப்பும் இரு மொழிகளிலும் அச்சாகி இருக்கிறது. A cummi poem on coffee planting என்பது இந்நூலின் ஆங்கிலத் தலைப்பு. 280 கும்மிப்பாடல்கள் இதில் இடம் பெற்றுள்ளன என்று குறிக்கின்றார் மு. நித்தியானந்தன். (மலையகத்தின் முதல் நூல் தினகரன் கட்டுரை 1994 ஆகஸ்ட்) இலங்கையின் முதல் நாவலான அறிஞர் சித்திலெப்பையின் "அசன் பேயின் சரிதம்" 1885ல் வெளிவந்தது. இதற்கும் 15 ஆண்டுகளுக்கு முன்பே வந்திருக்கிறது கோப்பிக் கிருஷிக் கும்மி. அதன் பின் மலையகக் கவிதையின் முன்னோடியாக நம்முன் நிற்பவர் அருள் வாக்கி அப்துல் காதிறுப் புலவர். மலைநாட்டில் பிறந்து 50 ஆண்டுகளுக்குமேல் மலைநாட்டிலேயே வாழ்ந்து 30க்கும் மேற்பட்ட நூல்களை இயற்றி தமிழுக்கும் இஸ்லாத்துக்கும் அருந்தொண்டாற்றிய மலைநாட்டுக் கவிஞர் இவர். கோவிந்த சாமித்தேவர் பெரியாம் பிள்ளை, பி.ஆர். பெரியசாமி, ரெங்கநாதன், எஸ். எஸ். நாதன்: வெளிமடைக்குமரன், பதுளை ஞானபண்டிதன், ஈழக்குமார், சக்தி பாலையா, குறிஞ்சித் தென்னவன், தமிழோவியன், மலைத்தம்பி, பண்டாரவளை அன்புச் செல்வன், லிங்கதாசன், முரளீதரன், வண்ணச்சிறகு என்று மலையகக் கவிதையுலகையும் மலையகத்தையும் செப்பனிடும் பணியில் இக்கவிஞர்கள் ஈடுபட்டே வந்துள்ளனர். ஈழக்குமார் வெளியிட்ட குறிஞ்சிப் பூ மலையகக்கவிஞர்கள் பலரின் கவிதைகளை உள்ளடக்கிய தொகுதியாகும். அறுபதுகளின் மலையக விழிப்புணர்வின் முதல் நூலும் இக்கவிதை நூலே ஆகும். வெளிமடைக் குமரன் எழுதிய கவிதைகள் தூவானம் என்னும் பெயரில் 1967ல் மல்லிகைக் காதலனின் குறிஞ்சிப் பண்ணை மூலம் வெளிவந்தது. அல் அஸுமத் புலராத பொழுதுகள்—மலைக்குடில் என்னும் இரண்டு கவிதை நூல்களை வெளியிட்டார். கண்டி எம். ராமச்சந்திரனின் விடிவை நோக்கி, முத்தி சம்பந்தரின் முத்துத்துளிகள், குறிஞ்சித் தென்னவன்

கவிதைகள், முரளீதரனின் தியாக யந்திரங்கள், கூடைக்குள் தேசம், நாவண்ணனின் கதை கவிதை கண்ணீர், பண்டாரவளை அன்புச் செல்வனின் வாழவா தோழா, வண்ணச்சிறகு கவிதைகள் ஆகியவை நூலாகி இருக்கும் மலையகக் கவிதை நூல்கள்.

சக்தி பாலையாவின் மொழி பெயர்ப்பில் வந்த தேயிலைத் தோட்டத்திலே 1969ல் செய்தி பதிப்பகத்தின் மூலம் நூலாக்கப்பட்டது. மலையக இலக்கியத்தின் முன்னோடியும், முதுபெரும் எழுத்தாளரும், கவிஞரும், நாவலாசிரியரும் தொழில் சங்க வாதியுமான அமரர் சி.வி. வேலுப்பிள்ளை இம்மக்களின் துயர் தோய்ந்த வாழ்வை ஆங்கில வாசகர்களுக்குக் காட்டியதன் மூலம் அழியாப் புகழ் பெற்றவர். பத்மாஜினி, வழிப்போக்கன் ஆகிய இரண்டு நூல்களை ஆங்கிலத்தில் 1950க்கு முன்பே வெளியிட்டிருந்தாலும் மலையக மக்களின் அவலங்கள், பிரச்சினைகள் பற்றி எழுந்த இவருடைய 'In Ceylons Tea Gardens' 1954ல் வெளிவந்து இவருக்கு ஏகோபித்த பாராட்டையும் புகழையும் ஈட்டிக் கொடுத்தது. 'சக்தி'யால் தமிழில் மொழிபெயர்க்கப் படுவதற்கு முன்பே ரஷ்ய மொழியில் வந்துவிட்டது இந்நூல். 30களிலேயே எழுதத்தொடங்கினாலும் இந்த மக்களைப் பற்றி எழுதத் தொடங்கிய பின்பே நான் பெருமைப்படுத்தப் பட்டேன் என்று சி.வி. அடிக்கடி கூறுவார். தோட்டத்தில் பிறந்து வளர்ந்தவரான சி.வி. இம்மக்களைப்பற்றி நன்கு அறிந்தவர். இவர்களுடைய சோகம் மிகுந்த அன்றாட வாழ்வின் காட்சிகளை சிறு சிறு கட்டுரைகளாக Born to Labour என்னும் தலைப்பில் எழுதிவந்தார். 1969ல் எம்.டி.குணசேனா பதிப்பகம் இந்த ஆங்கில நூலை வெளியிட்டது. இவை தவிர சி.வி. எல்லைப் புறம், பார்வதி, வாழ்வற்ற வாழ்வு, வீடற்றவன், இனிப்பட மாட்டேன் ஆகிய நாவல்களையும் எழுதியுள்ளார். வீடற்றவன், இனிப்படி மாட்டேன் ஆகியவை நூலாகியுள்ளன.

சி.வி. யின் தொழிற் சங்க அனுபவமும், நாட்டார் பாடலில் அவருக்குள்ள ஈடுபாடும் அவருடைய எழுத்தின் வலிமைக்கு உரமாய் அமைந்தன.

மலையக எழுத்துலகில் நாவல்களின் தோற்றம் 1930 களிலேயே ஆரம்பித்துள்ளது. மஸ்கெலிய எ. போல் என்பவர் "காதலின் வெற்றி" அல்லது "சுந்தரமீனாள்" என்னும் நாவலை எழுதி வெளியிட்டார். மலையகத்தின் முதல் நாவல் என்பதைத் தவிர இதற்கு வேறு முக்கியத்துவமோ பெருமையோ கிடையாது.

மலையகத்தின் முதல் நூலான கும்மிப்பாடல் 1869ல் வெளிவந்தது என்று முன்பே கூறினேன். இதற்குப் பிறகு ஏறத்தாழ ஒரு 60 ஆண்டு கால பயங்கர மௌனத்திற்குப் பிறகு 1920 களின் கடைசிக் கூறில் மலையக எழுத்துலகில் ஒரு வேகத்துடன் பிரவேசித்து இயங்கியவர் கோ. நடேசய்யர். மலையகத்தின் தொழிற்சங்க வரலாற்றில் அரசியல் நடவடிக்கைகளில், பத்திரிகை மற்றும் நூல் வெளியீட்டுத் துறையில், இலக்கிய முயற்சிகளில் ஒரு கால் நூற்றாண்டுகால சாதனை படைத்தவர் நடேசய்யர்.

தங்களை உணராமல், தங்கள் பலம் அறியாமல் உறைந்து போய்க் கிடந்த மலையக மக்களை தன் எழுத்தால், பேச்சால், துண்டுப் பிரசுரங்களால், இடைவிடாத தொழிற் சங்க நடவடிக்கைகளால் உலுப்பி உலுப்பி அசையச் செய்தவர் நடேசய்யர். தொழிலாளர் அந்தரப் பிழைப்பு, வெற்றியுனதே, நீ மயங்குவதேன், இந்திய இலங்கை ஒப்பந்தம்,தொழிலாளர் சட்டப் புத்தகம், அழகிய இலங்கை, கதிர்காமம் என்று பத்துக்கு மேற்பட்ட புத்தகங்களை 30 களிலேயே போட்டுக் காட்டியவர் இவர். 'ராமசாமி சேர்வையின் சரிதம்' என்னும் மலையகத்தின் முதல் சிறுகதையைப் படைத்த பெருமையும் இவரையே சேருகிறது.

இதே காலகட்டத்தில் வீரகேசரியின் ஆசிரியராக இருந்த எச். நெல்லையா சந்திரவதனா அல்லது காதலின் வெற்றி (1934) இரத்தினாவளி அல்லது காதலின் மாட்சி (1938) காந்தாமணி அல்லது தீண்டாமைக்கு சாவுமணி (1938) பிரதாபன் அல்லது மகாராஷ்டிர நாட்டு மங்கை (1941) சோமாவரி அல்லது இலங்கை இந்திய நட்பு (1940) என்னும் நாவல்களை எழுதியுள்ளார். இவைகள் வீரகேசரியில் தொடர்கதைகளாக எழுதப்பட்டவை.

நாவல் என்பது கடின உழைப்பையும், நீண்ட நாள் எழுத்து முயற்சியையும், வெளியிட பத்திரிகை வசதியையும் வேண்டி நிற்கும் ஒன்று. நாவல் தோன்றி வெற்றிகரமாக நடை பயின்று கொண்டிருக்கும் போதே திடீரென சிறுகதை என்னும் புது வடிவம் தோன்றி நாவலை விடவும் வேகமாக வளர்ந்து வந்ததென்றால் அதற்கான ஒரே காரணம் நாவல் படைப்பதில் உள்ள சிரமங்கள் தான். பொதுவான இந்தச் சிரமங்கள் மத்தியிலும் நாவல்கள் மலையகத்திலும் தோன்றியுள்ளன என்பது பாராட்டுதலுக்குரியதே கையில் பத்திரிகையும், உட்கார்ந்து எழுத ஒய்வும் உள்ளவர்களே கூடுதலாக நாவல் துறையில் ஈடுபட முடியும். மலையகத்தவர்களைப் பொறுத்தவரை இந்த இரண்டு வாய்ப்புகளுமே அற்றவர்களாக இருப்பது கண் கூடு. சமூக உணர்வும், எழுத்தாற்றலும் மட்டுமே நாவலிலக்கிய வளர்ச்சிக்குப் போதுமானவையாகாது.

நெல்லைபாவுக்குப் பின், ஓரளவு ஓய்வும், வெளியிட வாய்ப்பும் உடையவரான சி.வி. யின் நாவல்கள் வெளிவந்தன. அதன் பிறகு 1962ல் நந்தியின் மலைக் கொழுந்து தினகரனில் தொடர்கதையாக வந்து 64ல் நூலுரு பெற்று சாகித்திய மண்டலப் பரிசையும் பெற்றுக் கொண்டது. 1964ல் கோகிலம் சுப்பையாவின் 'தூரத்துப் பச்சை' யை வீரகேசரி பிரசுரம் நூலாக வெளியிட்டது. வரலாற்று ரீதியாக இம்மக்களின் வரவையும், வந்தபின் பட்ட துயரங்களையும் இந்த மண்ணில் காலூன்ற அவர்கள் ஆற்றிய பணிகளையும் சோகம் ததும்பக் காட்டும் முதல் நூலாகத் திகழ்வது கோகிலம். சுப்பையாவின் தூரத்துப் பச்சை. புதுமைப் பித்தன் 50களில் மணிக்கொடியில் எழுதிய துன்பக் கேணி என்னும் குறுநாவலும் இம்மக்களின் வரவுக்கான காரணத்தையும் வந்தபின் அனுபவித்த பாலியல் துன்புறுத்தலையும் விவரிக்கின்றது. 1969ல் சிக்கன் ராஜ் எழுதி வெளியிட்ட 'தாயகம்' என்னும் குறுநாவல் பிரஜா உரிமை சட்டத்தால் அனாதரவாக்கப்பட்டு சிரிமா–சாஸ்திரி ஒப்பந்தத்தால் மீண்டும் தமிழ் நாடேகும் வரலாற்றை சோகம் ததும்பக் கூறும் குறுநாவல்.

மிகவும் மந்த கதியில் ஆடி ஆடி நடந்தாலும் மக்கள் வாழ்வு அவர்களின் சோகங்கள் அதிலிருந்து விழிப்புப் பெறுவதற்கான முயற்சிகள் ஆகியவற்றையே அடி நாதமாகக் கொண்டு எழுந்தவை இந்நாவல்கள்.

1974ல் தெளிவத்தை ஜோசப்பின் காலங்கள் சாவதில்லை வீரசேசரிப் பிரசுரமாக வெளிவந்தது. இம்மக்களிடையேயும் கண்டும் காணாமலும் இன உணர்வுப்பகைமை புகைந்து கொண்டே இருக்கின்றது என்பதையும் வெகு விரைவில் அது இனக்கலவரமாக வெடிக்கும் என்பதையும் காட்டிய நாவல் காலங்கள் சாவதில்லை. இனவாத நாற்றம் வீசும் பிற்போக்கு நாவல் என்று முற்போக்கு விமர்சகர்கள் விமர்சனம் கூறினார்கள். அந்த ஆண்டுக்கான சாகித்திய விருதுக்கு எடுபட்டு "இனவாவதம் பேசுகிறது–சிங்களவர்கள் ஆள் கொண்டு வந்து தோட்டத்து மக்களை அடிப்பதாகக் காட்டுகிறது" என்று காரணம் கூறி இறுதி நேரத்தில் சாகித்திய பரிசுக்கு லாயக்கற்ற நாவல் என்று ஒதுக்கப்பட்ட நூல். இப்போது இனவாதம் நாற்றமா அடிக்கிறது! பூமணம் அல்லவா வீசிக் கொண்டிருக்கிறது! 1974 ஆம் ஆண்டுக்கான சாகித்திய விருது பெற்ற நாவல் தெளிவத்தை ஜோசப்பின் காலங்கள் சாவதில்லை என்று தமிழகப் பத்திரிகைகள் கூட விமர்சனம் எழுதியிருந்தன. ஆனால் கடைசி நேரத்தில் பரபரப்பாக முடிவு மாற்றப்பட்டு விட்டது.

1976ல் கே.ஆர். டேவிட்டின் "வரலாறு அவளை தோற்று விட்டது என்னும் நாவல் வீரகேசரிப் பிரசுரமாக வெளிவந்தது. வீரகேசரி தனது நூல் வெளியீட்டுப் பணியினை கைவிட்டதுவும் மலையக நாவல் வளர்ச்சியை குறிப்பிட்ட அளவு பாதித்தே உள்ளது.

1979ல் வெளிவந்த தி. ஞானசேகரனின் குருதிமலை மலையக நாவலிலக்கியத்தில் சிறப்பாகப் பேசப்பட்ட ஒன்று காணிப்பகிர்வும், அதற்கான அரசியல் பின்னணியும், இனக்கலவரமும் இந் நாவலின் மையமாக அமைந்துள்ளன. சமகாலப் பிரச்சினையை ஒரு சத்தியத்துடன் பேசும் இந்த நாவலுக்கு சாகித்திய விருது கிடைத்தது. மதுரை அமெரிக்க மிஷன் கல்லூரியின் எம்.ஏ. பாடத்திட்டத்துக்கான ஒரு துணை நூலாகவும் இது வைக்கப்பட்டிருக்கிறது.

புலோலியூர் க. சதாசிவத்தின் 'மூட்டத்தினுள்ளே' 1983ல் வீரகேசரிப் பிரசுரமாக வெளிவந்தது. வீரகேசரி நடாத்திய பிரதேச நாவல் போட்டியில் மலையகப் பிரதேசத்துக்கான பரிசினைப் பெற்ற நாவல் இது. குருதிமலை எழுதிய தி. ஞானசேகரனின் லயத்துச் சிறைகள்–கவ்வாத்து–ஆகிய இரண்டும் நூலாகியுள்ளன. தி. இராஜ கோபாலனின் 'கண்ணான கண்மணிக்குக் கதை பேச நேரமில்லை' என்னும் குறுநாவல் 1988ல் நூலாக வந்துள்ளது. இவருடைய மலையக வரலாற்று நாவலான 'சிரிக்கும் செவ்வந்திப் பூ' வீரகேசரியில் (1993) தொடர் கதையாக வந்துள்ளது. 1992ல் மாத்தளை கார்த்திகேசு வழிபிறந்தது என்னும் நாவலை நூலாக வெளியிட்டார்.

தேசிய கலை இலக்கியப் பேரவையும் சுபமங்களாவும் இணைந்து நடாத்திய ஈழக்குறு நாவல் போட்டியிலும் தெளிவத்தை ஜோசப், தி. ஞானசேகரன், சீ. பன்னீர் செல்வம் ஆகிய மலையக எழுத்தாளர்களின் படைப்புக்கள் பரிசு பெற்றுள்ளமையும் குறிப்பிடக்கூடியதே. மலையகத்தில் வாய் மொழி இலக்கியம், கவிதை, நாவல்களைத் தவிர்ந்து சிறப்பித்துக் கூறக் கூடிய அம்சமாகத் திகழ்வது சிறுகதைத்துறை.

கோ. நடேசய்யரையும், சி.வி. வேலுப்பிள்ளையையும் போலவே முப்பதுகளில் மலையக இலக்கியத்தில் பிரவேசித்து மலையக எழுத்துலகின் முன்னோடியாக இன்றும் தம்முடன் இருப்பவர் கே. கணேஷ் ஆகும்.

நாவல், சிறுகதை, கவிதை ஆகிய மொழி பெயர்ப்புக்களுடன் சுயமாகவும் சிறுகதைகள் எழுதியவர் இவர். முல்க்ராஜ் ஆனந்தின் அன்டச்சபிள்சை

தீண்டத்தகாதவன் என்று மொழிபெயர்த்தார். இதுவே கணேஷ் மொழி பெயர்த்து வெளியிட்ட முதல் நூல். பிரேம் சந்த், கே.ஏ. அப்பாஸ், ஹோசி மின் லூசுன் என்று 20க்கும் மேற்பட்ட மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிட்டுள்ளவர் கே. கணேஷ்.

ஆனால் அவருடைய சுய ஆக்கங்கள் நூலுருப் பெறாமல் போனது துர்அதிஷ்டமே. சத்தியபோதி மரம், பால்காரப் பழனி, சட்டமும் சந்தர்ப்பமும் (வீரகேசரி) ஆசா நாசம் (மணிக்கொடி) ஆகஸ்ட் தியாகி ஆறுமுகம் (தேசாபிமணி) ஆகியவைகளே இவர் எழுதிய சிறுகதைகள். 1946ல் கே. கணேஷனும், கே. ராமநாதனும் இணைந்து வெளியிட்ட பாரதியே தமிழில் வெளிவந்த முதல் முற்போக்கு இதழ் என்னும் பெருமை கொண்டது. டி.எம். பீர்முகம்மது ஒரு சில சிறுகதைகளைப் படைத்துள்ளார். 6 சிறுகதைகள் என்று ஒரு நூலை வெளியிட்ட டி.எம்.பீ. 'சதியில் சிக்கிய சலீமா.' 'கங்காணி மகள்' ஆகிய இரண்டு சிறு நாவல்களையும் எழுதியுள்ளார். சி.வி. யின் ஆங்கிலப் படைப்புக்களை தமிழில் மொழி பெயர்த்தவரான பொ. கிருஷ்ணசாமியும் சில சிறுகதைகளை எழுதியுள்ளார்.

1953ல் தினகரனில் வெளிவந்த பாண்டியன் பரிசு என்னும் சிறுகதை மூலம் அறிமுகம் பெறுகின்றனர். த. ரஃபேல். மலையகப் பட்டினங்களில் தொழில் புரிந்தவர். மலையக மண்ணின் மணம் இவருடைய படைப்புக்களிலும் எழவில்லை.

'பிரதேச வாழ்க்கையைப் பொருளாய்க் கொண்டு எழுதப்பட்டு வந்துள்ள படைப்புக்களில் பெருந்தோட்டப் பயிர் செய்கைக்குக் களமாய் உள்ள மலை நாட்டை மையமாகக் கொண்டு எழுதப் பட்டிருப்பவைகளுக்கு தனியிடம் உண்டு. சிறுகதை, நாவல், நாடகம், கவிதை என்னும் இலக்கியப் பிரிவுகளில் சிறுகதையே மலைப்பிரதேசம் பற்றிய படைப்புக்களில் முதலிடம் பெற்றுள்ளது எனலாம்' என்னும் பேராசிரியர் கைலாசபதியின் கூற்றை மெய்ப்பிக்கின்றன அறுபதுக்குப் பிந்திய சிறுகதைகள்.

தென்னிந்தியாவில் சிறுகதை வளர்ச்சி பற்றிப் பேச வருபவர்கள் 1930 ஆம் வருஷத்துக்குப் பிறகு உப்புச் சத்தியாகிரஹத்தின் இலக்கிய அலையாகத் தோன்றிய புதுவேகம் சிறுகதை இலக்கியத்திலும் தோன்றியது. சில நல்ல சிறுகதை எழுத்தாளர்கள் தோன்றினார்கள்' என்பதை ஒரு மரபாகக் கூறுவது போலவே மலையக இலக்கியத்திலும் அறுபதுக்குப் பின் ஒரு திடீர்க்குமுறலாகக் கிளம்பிய புது வேகம் சில சிறந்த எழுத்தாளர்களைத் தோற்று வித்தது என்று கூறுவது சாலப்பொருத்தமாகும்.

1956ன் ஆட்சி மாற்றம், அரசியல் சட்ட திட்டங்களில் பல புதிய மாற்றங்களைக் கொண்டு வந்தது. தேசிய மொழிகள் உயர்கல்விக்குரிய போதனா மொழியாக்கப்பட்ட பெருமாற்றத்தின் பின் சிங்கள கலை இலக்கியத்துறைகளில் பெரும் மறுமலர்ச்சி ஏற்பட்டது. வடக்கு கிழக்கு மாகாணத் தமிழர்களிடையேயும் இம் மாற்றங்கள் தொற்றி வளர்ந்தன. ஆனால் மலையகத்தைப் பற்றி யாரும் கவனிக்கவில்லை. கவனித்ததாகத் தெரியவில்லை. மலையக எழுத்துக்கள் பற்றி யாரும் அக்கறை காட்டவில்லை. காலம் காலமாக நாங்கள் புறக்கணிக்கப்பட்டவர்கள் தானா என்னும் ஆத்திரம், படித்த மலையக இளைஞர் மத்தியில் பரவலாக புகைந்து கொண்டிருந்தது.

இவர்கள், பதுளை பண்டாரவளை, அப்புத்தளை, அட்டன், வெளிமடை, நுவரெலியா, கண்டி, மாத்தளை என்று மலையத்தின் பல பகுதிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், ஒருவரை ஒருவர் நேரில் அறியாதவர்களாகவே இருந்தாலும், ஏக்கம் கலந்த இந்த ஆத்திரம் நான்கு வருட கற்ப வாசத்தின் பின், அறுவதுகளின் ஆரம்பத்தில் ஒரே விதமான நாடித்துடிப்புடன் பீறிட்டுக் கிளம்பியது.

இதன் முதற் குரலாக செந்தூரனின் உரிமை எங்கேயைக் கூறுலாம். ஈழத்து எழுத்தாளர்களுக்கென கல்கி நடத்திய சிறுகதைப் போட்டியில் மூன்றாவது பரிசு பெற்ற சிறுகதை இது. மலையகத்தின் எரியும் பிரச்சினையான குடியுரிமைப் பிரச்சினையை மையமாகக் கொண்ட படைப்பு இது.

மலையகம் என்ற கோஷத்தை முன் வைத்து, இம் மக்கள் குழுவுக்கு ஒரு அடையாளத்தைத் தேடித்தர படித்த மலையக இளைஞர்கள் ஒன்றிணைந்து மலைநாட்டு நல்வாழ்வு வாலிப் சங்கம், மலையக இளைஞர் முன்னனி, மலையக வெகுஜன இயக்கம் மலையக மக்கள் இயக்கம் என்று ஆரம்பித்து அவைகளின் செயற்பாடுகள் மூலம் இம்மக்கள் மத்தியில் ஒரு சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தினர். இலக்கிய எழுச்சிக்கு சமூக விழிப்புணர்வு தேவை என்னும் நியதிக்கு ஒப்ப மலையகச் சமூதாயத்தில் ஏற்படத் தொடங்கிய விழிப்பு மலையகச் சிறுகதை இலக்கியத்துக்கும் காலாய் அமைந்தது. இந்த எழுச்சிக்கு வித்திட்டவர்களாக இரா. சிவலிங்கம், செந்தூரன், பதுளை பாரதி கல்லூரி, ராமசாமி, பெரி. கந்தசாமி போன்றவர்களைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

எவ்வித 'வழிகாட்ட்லுமின்றி அறுபதுகளில் இலக்கியப் பிரவேசம் செய்த செதூரன், என்.எஸ்.எம். ராமையா தெளிவத்தை ஜோசப், சாரல் நாடன், போன்றோர்க்கு தாங்களே பாதையும் வெட்டிப் பயணமும் போக வேண்டிய நிலையே இருந்தது. இவர்கள் மேற்கொண்ட இவ்விலக்கியப் பயணம் ஒரு இலக்கியப் பரம்பரையையே இவர்களுக்குப் பின்னால் இழுத்துக் கொண்டு வரும் சக்தி கொண்டதாய் இருந்திருக்கிறது. மலரன்பன், மாத்தளை சோமு, மு. சிவலிங்கம், பி. மரியதாஸ், எம்.வாமதேவன், ராம சுப்ரமணியம், கோமஸ், சி. பன்னீர் செல்வம், சிக்கன் ராஜ், பூரணி, நயீமா பஷீர், மல்லிகை சி. குமார், பரிபூரணன், சலமன் ராஜ், நூரளை சண்முகநாதன், மாத்தளை வடிவேலன், மு. நித்தியானந்தன், கே. கோவிந்தராஜ், அல் அஸூமத் என்று ஒரு சிறுகதைப் பட்டாளமே கையில் பேனையும் நெஞ்சில் உறுதியுமாய்க் ஊர்வலம் கிளம்பியதை எவராலும் தடுக்க முடியவில்லை. இப்படிக் கிளம்பிய இவ் விலக்கியப் பட்டாளத்தில் சிலர் இலக்கியவாதிகளாய் உயர சிலர் பேனைதூக்கிய பட்டாளத்துக் கூட்டமாகவே இருந்து விட்டனர் இருக்கின்றனர் என்பது வேறு பிரச்சனை.

இவர்களின் இந்த எழுத்துலகப் பிரவேசம் ஏற்கனவே இருந்த வீரகேசரி, தினகரன், பிந்தி வந்த சிந்தாமணி ஆகியவைகளைத் தினரடித்தன. எழுத்துக்களுக்குக் களமில்லாத, நிலையில் சிறு பத்திரிகைகள், யாழ்ப்பாண, மட்டக்களப்புப் பத்திரிகைகள் ஆகியவைகளையும் நாடி அதுவும் போதாமல் தாங்களே பத்திரிகைகள் வெளியிட்டுக் கொள்ளவும் கிளம்பினர். மலை முரசு, மலைப்பொறி, செய்தி, ஈழமணி, சாரல், தீர்த்தக்கரை அமுதம் அல்லி, அஞ்சலி என்று ஐம்பதுக்கும் மேற்பட்ட சிறிய சஞ்சிகைகள் மலையகத்தில் தோன்றி பெருகிவரும் மலையக படைப்புக்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்தன.

மொழியின் ஜீவன் அதைப்பேசும் மக்களின் வாய் மொழியிலேயே இருக்கிறது. மலையகத்தின் பேச்சுமொழி அதன் ஜீவிதம் குன்றாமல் மலையகக் கதைகளில் பாவிக்கப்பட்டிருக்கும் விதம் வியப்புக்குரியது. கொச்சையானது என்றோ மற்றவர்களால் தீண்டத்தகாதவர்களாக ஒதுக்கப்பட்ட மக்களின் வாய் மொழி என்றோ; அப்படியே எழுதினால் மற்றவர்களுக்கு அது புரியுமா என்றோ மயங்காமல் அலட்டிக் கொள்ளாமல், அவ்வார்த்தைப் பிரயோகங்களை நவீனப்படுத்த முனையாமல் அப்படியே எழுதி எழுதி அந்த மொழியின் வளத்துக்கு நீர் வார்த்தது மட்டுமன்றி மற்றவர்களையும் அதனுடன் பரிச்சயப்பட்டுக் கொள்ளச் செய்தமையை எப்படி வியக்காமல் இருக்க முடியும் ?

மலையத்துத் தோட்டங்களைத் தவிர வேறு எங்குமே பாவிக்கப்படாத, சொல் விளங்காத, பொருள் புரியாத எத்தனையோ சொல் விளங்காத; பொருள் புரியாத எத்தனையோ சொற்கள் இருக்கின்றன. நூற்றாண்டு காலமாக, தோட்டத் தொழிலாளர்கள் தங்கள் வசிப்பிடங்களை 'லயம்' என்றே அழைக்கின்றனர். லயத்தின் அறைகளை 'காம்புறா' என்றே அழைக்கின்றனர். அதே போல், பீலி, பிட்னி, பெரட்டுக்களம், பொட்டனி, கவ்வாத்து, கொந்தரப்பு, குட்டிச்சாக்கு, அட்டால், மொய் அலுப்புனாத்தி, வாங்கி, இராதி, பிள்ளைமடுவம் என்று இன்னும் எத்தனையோ சொற்கள் மலையகத்துக்கே உரியனவாய் இருக்கின்றன. மலையகப் படைப்பாளிகள் இச்சொற்களை அப்படியப்படியே ஒலிகுன்றாமல், தங்கள் படைப்புக்களில் இடம் பெறச் செய்து அவைகளின் கௌரவத்தை நிலைநாட்டியுள்ளனர். எழுத்து வழக்கிலும் பேச்சு வழக்கிலும் மலையகம் தனக்கேயுரிய விசேஷ பண்புகளை கொண்டுள்ளமையை மலையகச் சிறுகதைகள் உணர்த்தி நிற்கின்றன.

ஒரு சிலர் லயம் என்பதை 'லயன்' என்றும் 'லைன்' என்றும் 'லாயம்' என்றும், லயக்காம்புறா என்பதை 'லென்ரூம்' என்றும் எழுதும் போது அங்கே மலையகம் தெரியவில்லை ஒரு அன்னியமே தெரிகிறது.

பீலி, பிள்ளைமடுவம், கவ்வாத்து, மொய், லயம் போன்ற சொற்கள் கதைகளில் பாவிக்கப்படுவது மட்டுமல்லாமல் கதைத் தலைப்புக்களாகவும் இடம்பெற்று இந்தப் பிரத்தியேகச் சொற்களைப் பிரபல்யப்படுத்தவும் செய்கின்றன.

"பீலி மேலே போகிறது" – தெளிவத்தை ஜோசப்.
"பிள்ளை மடுவத்திலே" – பூரணி
"கவ்வாத்து" நூரளை சண்முகநாதன் –
தி. ஞானசேகரன்
"மொய்க்காசு" – கே. கோவிந்தராஜ்
"லயத்துப்பயல்" – மாத்தளை சோமு

மலையகத்திலிருந்து எழுந்த படைப்புக்கள் கொழும்பையும், பிற பிரதேசத்து ஏடுகளையுமே பிரசுரத்துக்காக நம்பி இருக்க வேண்டிய காலம் அது. இப்போதும் ஏறத்தாழ அப்படித்தான் என்றாலும் ஆரம்பத்தில் எழுதத் தொடங்கியவர்களுக்கு 'இதுதான்

மலைநாடு, இது தான் அம்மக்கள், இது தான் அவர்களுடைய பேச்சு மொழி, இது தான் அவர்களுடைய வாழ் நிலை'', என்று ஒவ்வொன்று ஒவ்வொன்றாக மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்தும், பழக்கப்படுத்திக் கொடுக்கும் பெரும்பணி இருந்தது.

என். எஸ். எம். ராமையாவின் ஒரு கதையில் வரும் சம்பாஷணை இது. பேரன் வீட்டுக்குப் பணம் கொடுப்பதில்லை என்று புகார். சாப்பாடு முடித்துத் திண்ணையில் அமர்ந்து கிழவன் வெற்றிலை இடித்துக் கொண்டிருந்தபோது பேரன் உள்ளே நுழைகின்றான். பீடி மணம் குப்பென்றடிக்கிறது. கிழவனுக்கு எரிச்சல்.

''ஏலே நில்லு நொப்பன் என்ன புகாரு பண்ணுறான்... வீட்டுச் செலவுக்கு ஒத்தச் சதம் குடுக்குறதில்லியாம்...''
''இன்னும் ரெண்டு மூணு மாசத்துக்கு யாரும் சல்லிப்பேச்சு பேசப்புடாது... நான் கைக்கு உருளோசு வாங்கப் பேறேன்...'' என்றவாறு உள்ளே நுழைந்து பாயைச் சுருட்டிக் கொண்டு வெளியே வந்தான்.

''ஏலே நேராநேரத்துக்கு திங்கிறியே சல்லி குடுக்கவாணாமா...''
''அதான் ஏன்னோட கூப்பன் அரிசி மாவு எல்லாம் வருதே அப்பறம் என்னா..'' என்றவாறு அவன் நடந்து விடுகின்றான்.

''னுங்'' என்று அவன் போன திசையையே பார்த்துக் கொண்டிருந்த கிழவனுக்கு எரிச்சல். ''என்னா அடக்க ஒடுக்கம் முருகம்... முருகம்...'' என்று முனகியவாறு வெற்றிலையை இடிக்கத் தொடங்குகின்றான்.

பீடி குடித்துக் கொண்டு,பெரியவர்களுக்கு மரியாதை தரவிரும்பாத, கட்டுப்பாடுகளை விலக்கிக் கொள்ள விரும்பும் பேரனை மிருகம் என்று பொருமுகின்றான் கிழவன். கிழவனின் கோபத்தின் உச்சமே அந்த கடைசி இரண்டு வார்த்தைகளில் தான் ஜீவிதம் கொள்கின்றது. ''முருகம்... முருகம்...''

இந்தக் கதை (வேட்கை) சிந்தாமணியில் வந்த போது அந்த இறுதி இரண்டு சொற்களும் ''முருகா... முருகா'' என்றே அச்சாகி இருந்தன. அந்த வரியின் ஜீவனையே சிதைத்து விட்டது இந்தச் சொல் மாற்றம். கதை அச்சில் வந்தவின் ''என் கழுத்தை நசுக்கித் திருகுவது போலிருந்தது'' என்று கூறினார் ராமையா என்னிடம். சட்டைப் பொகெட்டை ''சோப்பு'' என்றே பெரும்பாலும் கூறுவார்கள். சட்டைச் சோப்பு கால்சட்டை சோப்பு என்று. 'சோப்பு' என்பதை 'சோப்' என்றே அச்சடிப்பார்கள். மலைகளையும் மலைச் சரிவுகளையும் 'தேறி' என்று கூறுவார்கள் இங்கே ''அதோ அந்தத் தேறியில் தெரிகிறதே ஒரு லயம்'' என்பதை அதோ அந்தச் 'சே' றியில் என்றே அச்சடிப்பார்கள்.

தெளிவத்தை ஜோசப்பின் ''காட்டுப் பூ'' என்னும் கதை தேனருவி என்னும் சிற்றேட்டில் வந்தது. 60 களில் வந்த சிற்றேடு இது. தோட்டக்காட்டிலே பூத்த ஒரு அழகான பெண்ணின் கதை இது. ''செவ்வந்தி கூடையுடன் நடக்கின்றான்'' என்னும் வரிக்கு அழகான ஒரு பெண்ணின் படம் வரைந்திருந்தார்கள். சிறு சஞ்சிகைகளுக்கே உரித்தான அழகான ஜீவகளை ததும்பும் சித்திரம் அது. ஆனால் கூடை முழங்கை இடுக்கின் மடிப்பில் சின்னதாக இடுப்பில் இருந்தது. மீன்காரப் பெண்ணின் வட்டில் போல்.

முருகம் 'முருகா' வானதை அச்சுப் பிழை என்று சமாளிக்கலாம். ஆனால் இதை...!

நூற்றாண்டு காலமாக லயங்களின் இருட்டறைக்குள் பூட்டிச் சிறை வைக்கப்பட்டது போல் மற்றவர்களுக்கு எட்டாமல், அன்னியமாக்கப்பட்டுக் கிடந்து விட்ட இம்மக்களை மற்றவர்களின் மத்தியில் கொண்டு வந்ததும் புரியாமல் இருந்த இவர்களுடைய வாழ்வியல்புகளைப் புரியவைத்த பணியும் மலையகச் சிறுகதைகளையே சார்கிறது.

தமிழ்ச் சிறுகதையின் தோற்றத்துக்கான காரணமே பிரச்சாரம் தான் என்கின்றார் வேதசகாய குமார். (தமிழ்ச் சிறுகதை வரலாறு)'' மாதவய்யாவும், பாரதியும். வ.வே.சு. ஐயரும் கவிதையிலும், நாவலிலும் உரை நடையிலும் பிரச்சாரம் செய்து பார்த்து விட்டார்கள். நீண்ட நெடுந்துயிலில் உறங்கி விட்ட தமிழ் மக்களைத் தட்டி எழுப்பவும் அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும், தங்களுடைய கலாசாரம், நாகரீகம், பண்பாடு, பற்றிய சுய சந்தனையை உருவாக்கவும் ஒரு பிரசாரக் கருவியாகவே தமிழில் சிறுகதை தோன்றியது என்கிறார் அவர். அறுபதுக்குப் பிந்திய மலையகச் சிறுகதைகளும் இதே மையக் கருத்துடன்தான் தோன்றின. என்றாலும் ஒரு பிரச்சாரகனுக்கும், ஒரு இலக்கியக் கலைஞனுக்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன என்பதையும் மலையகச் சிறுகதைகள் காட்டவே முனைந்துள்ளன. ஒரு அரசியல் கட்சிப் பிரசாரகன் போலவோ தொழிற்சங்கப் பிரசாரகன் போலவோ அந்தப் பிரச்சாரத்துக்கே அடிமையாகி வெட்டி வைத்துள்ள பாதை வழியே பட்டை கட்டி விட்ட

குதிரைகளைப்போல் ஓடிக் கொண்டிருக்கவில்லை மலையகப் படைப்பாளிகள். நாலா புறமும் நோக்கினார்கள். நல்லது கெட்டதைக் கண்டறிந்தார்கள். சோகம் நிறைந்த இம்மக்களின் வாழ்விலும் வாழத்துடிக்கும் அந்த மனிதத்துவத்தைத் தேடினார்கள்.

சகல விதமான அடிமைத் தனங்களுக்கும் உட்படுத்தப்பட்ட இம்மக்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் சிறு கதைகள் சோகமய மானவைகளாகத்தான் இருக்க முடியும். இருக்க வேண்டும். ஆனால் அந்த சோகத்திலும் ஒரு கோபம், அழுகையிலும் ஒரு ஆத்திரம் இசையென மிதந்து வருவதை உணராமல் இருக்க முடியாது.

மலையகச் சிறுகதைகள் செழிப்புடன் வளர்ந்தாலும் பத்திரிகைகளில் வருவதுடன் உதிரியாகவே நின்று விட்டன. தொகுதிகளாக வரவில்லை என்னும் குறை சகல மட்டத்திலும் எழுப்பப்பட்டது. படைப்பாளிகளை விடவும் அதிகமான மதிப்பும் பிரபல்யமும் பெற்றுவிட்ட இலங்கையின் விமர்சகர்கள் மத்தியில் மலையக இலக்கியம் பற்றிய விமர்சனங்கள், ஏதும் பெரிதாக இடம் பெறவில்லை. நூல்கள் இல்லாமையே இதற்கான காரணம் என்னும் நொண்டிச் சமாதானமும் கூறப்பட்டது. மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் வீரகேசரியுடன் இணைந்து நடத்திய முதல் நான்கு சிறுகதைப் போட்டிகளில் முதல் மூன்று பரிசுகளைப் பெற்ற சிறுகதைகள் 'கதைக்கனிகள்' என்னும் நூலாக மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் 1971ல் வெளியிட்டது. மலையகச் சிறுகதைகளை ஒன்றாகப் படிக்கக் கிடைத்த முதல் தொகுதியே இது தான். அதன் பிறகு மறுபடியும் மௌனம். நூல்களே வரவில்லை. ஆனால் பத்திரிகைகளில் வரும் படைப்புக்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே இருந்தது. 1979ல் இந்த நீண்ட மௌனத்தை உடைத்தவர் மு. நித்தியானந்தன் அவர்கள். யாழ் வளாகத்தில் விரிவுரையாளராக இருந்தபோது வைகறை என்னும் வெளியீட்டகத்தை ஆரம்பித்து நாமிருக்கும் நாடே என்னும் பெயரில் தெளிவத்தை ஜோசப்பின் சிறு கதைகளைத் தொகுத்து வெளியிட்டார். தனி ஒரு எழுத்தாளரின் மலையகச் சிறுகதைகளைக் கொண்ட முதல் தொகுதி இதுவே. இந்த நூலுக்கு அந்த ஆண்டின் சிறந்த சிறுகதை நூலுக்கான சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது. இதைத் தொடர்ந்து என்.எஸ்.எம். ராமையா வின் ஒரு கூடைக் கொழுந்து வைகறையின் இரண்டாவது நூலாகவும் மாத்தளை எழுத்தாளர் ஒன்றியம் வெளியிட்ட தோட்டக்காட்டினிலே என்னும் மூவர் தொகுதியும் 1980ல் வெளிவந்தன. இவைகளைத் தொடர்ந்து மாத்தளை சோமுவின் நமக்கென்றொரு பூமி (1984) நயீமா சித்தீக்கின் 'வாழ்க்கைச் சுவடுகள்' (1987) மொழி வரதனின் மேகலைகளின் ராகங்கள், (1988) மலரன்பனின் கோடிச்சேலை (1989) மு. சிவலிங்கத்தின் மலைகளின் மக்கள் (1991) ஏ.பி.வி. கோமசின் வாழ்க்கை என்னும் புதிர் (1993) சாரல் நாடனின் மலைக்கொழுந்து (1994) மலையகப்பரிசுக்கதைகள் (1994) மாத்தளை சோமுவின் 'அவர்களின் தேசம்' (1995) தீர்த்தக்கரைக் கதைகள் (1995) புலோலியூர் க. சதாசிவத்தின் ஒரு நாட்பேர் (1995) கே. கோவிந்தராஜின் 'பசியா வரம்' (1996) ஆகிய சிறுகதைத் தொகுதிகள் வெளிவந்திருக்கின்றன.

மலையக வெளியீட்டகம் மூலம் அந்தனி ஜீவாவின் நூல் வெளியீட்டு முயற்சிகளும்; குறிஞ்சி வெளியீட்டின் மூலம் மாத்தளை கார்த்திகேசுவின் நூல் வெளியீட்டு முயற்சிகளும் மலையக நூல் வெளியீட்டுத்துறைக்கான முன்னெடுப்புக்கள் பாராட்டப்பட வேண்டிய பணிகள்.

இவைகள் எல்லாம் மலையகச் சிறுகதையின் வளர்ச்சியினையும் ஈழத்து இலக்கியத்தை செழுமைப்படுத்துவதான அவற்றின் பங்களிப்பினையும் சுட்டி நிற்கின்றன. இவைகளை நாம் பெருமையுடன் அறிக்கையிடும் அதே வேளையில் 60க்குப் பின் எழுந்த உத்வேகமும் புதுப்புது எழுத்தாளர்களின் தாக்கமான வரவும் அவர்களின் வரவு ஏற்படுத்திய செழுமையும் பிறகு பிறகு குறைந்தே வந்துள்ளமைமையையும் வருத்தத்துடன் கூறிவைக்கவே வேண்டும்.

தமிழ்ச் சிறுகதை பரப்பில்; அல்லது ஈழத்துச் சிறுகதை பரப்பில் மலையகச் சிறுகதையின் தரத்தை நிர்ணயிக்க மலையகச் சிறுகதைகள் நிறைய எழுதப்பட வேண்டும். பரவலாக வாசிக்கப்பட வேண்டும். சிறுகதைத் தொகுதிகள் நிறைய வெளிவர வேண்டும். விமர்சிக்கப்பட வேண்டும்.

நூல் வெளியீட்டுத்துறை இலங்கையில் வளர்ச்சியுறாத துறைதான் என்றாலும் வளர்ச்சிக்கான அறிகுறிகள் அரச மட்டத்திலும் தனியார் மட்டத்திலும் தோன்றுவதை உணரக் கூடியதாகவே இருக்கிறது.

நவீன இலக்கியமும் சுவாமி விபுலாநந்தரும்

செ. யோகராசா

பண்டிதரும் அதே வேளையில் விஞ்ஞானப் பட்டதாரியுமான சுவாமி விபுலாநந்தர் நவீன இலக்கிய முயற்சிகளில் ஈடுபாடுகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதே. நவீன படைப்பாக்க முயற்சி சிலவற்றில் அவரே ஈடுபட்டார். அவற்றை விட, ஈழத்திலும் தமிழ்நாட்டிலும் தம் காலத்தில் இடம் பெற்ற நவீன இலக்கியச் செயற்பாடுகள் பலவற்றோடு தம்மைப் பிணைத்திருந்தார். பலரும் அழுத்தாத இவ்விடயம் பற்றி கவனிப்பது பயனுடையாகின்றது.

- 1 -

பாரதியார் நவீன கவிதை முன்னோடி என்பதிலோ மகாகவி என்பதிலோ இன்று இருவேறுகருத்திற்கிடமில்லை. ஆயினும், பாரதியார் மேதைமை பாரதியார் காலத்திலோ அவர் மறைந்து சில வருடங்கள் வரையிலோ பலராலும் அறியப்படவில்லை. இன்னொரு கோணத்தில் கவனிக்கும் போது பாரதியாரை இனங்காண்பதென்பது தமிழில் நவீனத்தின் தோற்றத்தை ஏற்றுக் கொள்வதற்குச் சமமானது. இவ்விதத்தில் பாரதியாரை இனங்கண்டுகொண்டவர்களுள் சுவாமி விபுலாநந்தர் முதன்மையானவர் இது பற்றி இன்னும் விவரித்தல் வேண்டும். பாரதியாருக்கு அடிகளார் கொடுக்கும் 'வரவேற்பு' எத்தகையது என்பதனை காண்பதற்கு, அவர் கால ஆய்வாளரும் ஆர்வலரும் பாரதியாரை எத்தகைய கோணங்களில் காணமுற்பட்டனர் என்று நோக்குதல் வேண்டும். அத்தகையோரை பின்வருமாறு வகுத்துக் கூறலாம் (எனினும் இத்தகைய வரையறை நெகிழ்சியுடையது என்பதனை மனங்கொள்கை)

(அ) 'வேதாந்தச் சிமிழ்' என்ற வரையறைக்குள் பாரதியை அடைப்போர் (எ–டு: ராஜாஜி பி. ஸ்ரீ)

(ஆ) தேசியக் கவியாகக் காண்போர் (எ–டு: வ.ரா)

(இ) சமூகசீர்திருத்த வாதியாகவோ (தி.மு.கவினர்) பொதுவுடையாளராகவோ (ஜீவா, ஆர். கே. கண்ணன்) கருதுவோர்.

(ஈ) இரசனை நோக்கில் அணுகுவோர் (எ–டு: கு.ப.ரா)

இங்கு இரு விடயங்கள் கவனித்தற்குரியன வ.ரா. முதலிய ஒரு சிலர் தவிர, மேற்கூறிய குழுவினர் பலரும் மேற்கூறிய விடயங்களை பாரதி மறைந்து சில பலவருடங்களின் பின்னரே வற்புறுத்தத் தொடங்கினர் என்பது ஒன்று. இவர்கள் பலரும் தமிழ்ப் புலவரோ பண்டிதரோ பல்கலைக்கழகம் சார்ந்தவரோ பட்டதாரியோ அல்லர் என்பது மற்றொன்று. இன்னொரு விதமாகக் கூறின், "அன்றைய தமிழ்ப் பேராசிரியர்களும் புலவர்களும் பாரதியாரை ஒரு கவி என்றே ஒப்புக் கொள்ளவில்லை" (மணிக் கொடிக் காலம் ப.7) இத்தகு பின்னணியில் அடிகளார் பாரதியாரைப் பல்வேறு கோணங்களில்– தேசாபிமானியாக, சமரசவாதியாக, தமிழுணர்ச்சி மிக்கவராக, பக்திக் கவிஞராக, இயற்கை ரசிகனாக காண்கின்றார். பேராசிரியர் கா. சிவத்தம்பியின் வார்த்தைகளில் கூறவதானால் "பாரம்பரியத் தமிழ்ப் புலமை சார்ந்த பண்டிதர்கள் மத்தியில் பாரதியை அவர் மறைவு முதற்கொண்டே இனங்கண்டு ஏற்றுக் கொண்டவர்களாக நமக்கு தெரிவது பாரதியின் நண்பர் நாவலர் சோமசுந்தர பாரதியாரும் சுவாமி விபுலாநந்தரும் மட்டுமே" (பாரதி மறைவு முதல் மகாகவி வரை பக்.77)

பாரதியாரின் மேதைமையை இனங்கண்டு கொண்ட விபுலாநந்தர் அத்துடன் நின்றாரல்லர். தமிழ் நாட்டில்–அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கடமைபாற்றிய வேளையில் 'பாரதியார் கழகம்' ஒன்றையும் நிறுவிச் செயற்பட்டார்.

பாரதி தொடர்பான கட்டுரைகளும்அடிகளாரால் வரையப்பட்டன. பாரதியார் கவிதை நயங்காணவும், கவிதைகளை வகைப்படுத்திக்காணவும் முற்பட்டார். இவ்விதத்தில் அவர் தனித்து எழுதிய கட்டுரையொன்றும் இணைந்து எழுதிய கட்டுரையொன்றும் முக்கியம் பெறுபவை. இக் கட்டுரையொன்றில் பாரதியாரை நீண்ட தமிழ் இலக்கிய வரலாற்றுப் பின்புலத்தில் இனங்கண்டு கொண்டமை நினைவு கூரத்தக்கது. ஓரிடத்தில் இவ்வாறு குறிப்பிட்டார்: "இளங்கோவடிகள், கம்பர் என்னும் மலர்களைத் தந்த தெய்வத்தரு ஓராயிரம் வருடம் ஒய்ந்து கிடந்த பின்னர் வாராது வந்த செல்வத்தைப் போலப் பாரதியாரென்னும் மலரையளித் திருக்கின்றது" (பாரதியார் கவிநயம் இந்தியா 1931)

தமிழ் நாட்டினை விட ஈழத்தில் பாரதியார் ஏற்படுத்திய தாக்கம் கணிசமானது. இவ்விடத்தில் இன்னொரு முக்கிய விடயம் நினைவுகூரத்தக்கது. அதாவது, ஈழத்தில் நவீனத்தின் தோற்றம் மேற்குமயவாக்கத்துடன் மட்டும் தொடர்பு பட்டதன்று;

சமமாக, தமிழ்நாட்டுத் தொடர்பும் கவனிக்கப்படவேண்டியது. ஈழத்தில் நவீன இலக்கியம் பற்றிய சிரத்தை பிரக்ஞை பூர்வமாக நாற்பதுகளளவில் உருவாகிறது. இது மறுமலர்ச்சிக் குழுவினரால் கைகூடுகிறது. இவர்தம் ஆதர்ஷ புருஷர் பாரதியாரே. இதே காலப்பகுதியில் கொழும்பில் இருந்தும் (1946) மட்டக்களப்பு மண்டூரில் இருந்தும் (1949) 'பாரதி' என்ற பெயருடைய சஞ்சிகைகளும் வெளிவருகின்றன.

மேற்கூறியவாறான ஆரோக்கியமான இலக்கியச் சூழல் உருவானதில் விபுலாநந்தர் பங்களிப்புக் கணிசமானது. மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மலையகம், திருமலை, கொழும்பு முதலான பல இடங்களிலும் அடிகளது பாரதி பற்றிய சொற்பொழிவுகள் இடம் பெற்றன.

அடிகளார் நவீன கவிதை முயற்சிகள் சிலவும் கவனிப்பிற் குரியன. அவரது மொழிபெயர்பு ஆக்கங்கள் முக்கியமானவை. தாகூரின் மொழிபெயர்ப்பும் 'ஆங்கிலவாணி' யில் இடம்பெறும் மில்ரன், வேட்ஸ் வேத், கீட்ஸ், ஷெல்லி, ரெனிசன், றொபேட் பிறவுணிங் ஆகியோரது மொழிபெயர்ப்பு ஆக்கங்களும் குறிப்பிடத்தக்கன என்பதில் ஐயமில்லை.

-2-

ஆரம்பகாலங்களில் நவீன நாடக முயற்சிகளை அவ்வளவு தூரம் வரவேற்கவில்லை. அடிகளார் :

"— அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு. இழிவுற்ற பாடல்களைப் பாடிக்கொண்டு பெண்களும், ஆண்களும் ஒருங்கு தோற்றி மானங்கடந்த சல்லாப மொழிகளைப் பேசுகிற நாடகமேடை தூயநெறி நிற்பாருடைய உள்ளத்தையும் கலைத்து தீய நெறியிற் செலுத்துவது ஆதலினால் அவற்றை முற்றாகத்தவிர்ப்பதே முறை"

(அருநிதியம் விலைசரசம் 1923)

ஆயினும் பின்னர் (நன்னோக்குடைய) பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நாடகங்கள் பற்றி பாராட்டி பின்வருமாறு எழுதினார்;

"— நானாடகமும் காதலி ஆற்றுப்படையும் கிடைத்தன. முற்றும் படித்து மகிழ்வுற்றேன். பொருளோ பொருள் எனப்பெரிய மற்றொரு நாடகம் அண்மையில் அரங்கேறியதாக ஈழ கேசரியில் படித்தேன். மட்டக்களப்பு வழக்கு மொழியினையும் ஓரிரண்டு நாடகங்களில் படம் பிடித்து வைப்பது நன்று"

(" சோழமண்டலத் தமிழும்... 1941")

இங்கு நாடகம் பற்றிய அடிகளாரின் நோக்குட்பட பலவிடயங்கள் கவனிப்பிற்குரியன:(i) மட்டக்களப்பு நாடக வளர்ச்சியில் அக்கறை (ii) பேச்சுத் தமிழின் அங்கிகாரம் (iii) நவீன ஆற்றுப்படை இலக்கியத்தினை பாராட்டுதல். தவிர அடிகளார் எழுதிய 'புதுமையான இலக்கிய நாடகம் ஒன்றும் குறிப்பிடத்தக்கதே (மலையமான் சோழிய வேனாதி திருக்கண்ணன்—1929).

- 3 -

நாவல் இலக்கிய முயற்சிகளும் ஆரம்பகாலத்தில் அடிகளாரால் வரவேற்கப்படவில்லை என்றே கூறவேண்டும் (அருநிதியம் விலைசரசம் 1923). ஆயினும், அடிகளாரே மறுமலர்ச்சி எழுத்தாளர் சங்கக் கூட்டமொன்றில் பின்வருமாறு உரையாற்றுகின்றார் :

"நீங்கள் உங்கள் மனோ தர்மத்தின்படி நன்றாக எழுதுங்கள். புதியன புதியனவாக எழுதித் தமிழை வளருங்கள் ஆனால் மற்றவர்களை கண்டிக்கத் துணியாதீர்கள். சொந்த மண்மணம் வீசும் சிறுகதைகளையும், நாவல்களையும் அதிகமாக எழுதுங்கள். எழுத்தில் எப்போதும் சொற்செட்டும் இலக்கணமும் கருத்து ஆழமும் இருக்க வேண்டியது பிரதானம்..."

(ஈழமணி மலர் 1948)

அடிகளாரின் உரை தொடர்பாக, அ.செ. முருகானந்தம் "சுவாமிகள் தமிழின் மறுமலர்ச்சி பற்றி எவ்வளவு பரந்த நோக்கம் கொண்டிருந்தார்களென்பது மறுமலர்ச்சி சங்கத்தில் அவர்கள் வெளியிட்ட கருத்துக்கள் மூலம் நன்கு தெரிந்தது" என்றுரைப்பது கவனிக்கத்தக்கதாம்.

மறுமலர்ச்சி சங்கத்துடன் பேச்சாளர் என்ற விதத்திலேயே தொடர்பு கொண்டிருந்தார், அடிகளார். அதே வேளையில் கே. கணேஸ், சரச்சந்திர ஆகியோர் செயலாளராக விளங்கிய எழுத்தாளர் சங்கத்தின் (1946) தலைவராக அன்னார் விளங்கியமை பலருமறியாத விடயமன்றோ !

(குன்றின் குரல் ஏப்/ஜூன் 93)

- 4 -

நாட்டார் பாடல்கள் இன்றுகூட பண்டிதர்களால் வரவேற்கப்படுவதில்லை. அதுபற்றிய அடிகளார் அக்கறை விதந்துரைக்கற்பாலது. "நாட்டுப் பாடல்களையெல்லாம் மக்கள் மறந்து விடுமுன் அவற்றைத் தொகுத்து வெளியிட வேண்டும்"

(ஈழமணி 1948)

- 5 -

இறுதியாக ஒன்று: மட்டக்களப்பு பிரதேசத்தில் நாற்பதுகளளவில் பரந்த ரீதியில், கலை இலக்கிய விழிப்புணர்ச்சி ஏற்படுகின்றது; நாற்பதுகளின் பிற்கூற்றில் சிறுகதை பிறக்கின்றது. 'உதயம்', 'பாரதி' போன்ற சஞ்சிகைகள் மலர்கின்றன. இத்தகு ஆரோக்கிய சூழலின் ஆரம்ப கர்த்தாக்களுள் அடிகளார் பங்கு முதன்மையானது; அது விரிவான ஆய்வை விழைந்து நிற்பது.

ஈழத்து தமிழ் இலக்கியத்துக்கு முஸ்லிம் எழுத்தாளர்களின் பங்களிப்பு

திக்குவல்லை கமால்

இலங்கை பெற்றுக்கொண்ட சுதந்திரம் எமது இலக்கிய வளர்ச்சியிலே எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்திவிடவில்லை. சுதந்திரம் கிடைத்து பத்தாண்டுகளின் பின்பே, இலக்கிய ரீதியாக ஒரு புதிய பார்வை ஆரம்பமாகியது. இன்னும் தெளிவாகச் சொல்வதானால் 1956ல் ஏற்பட்ட அரசியல், சமூக மாற்றமே தேசிய இலக்கியத்துக்கு முக்கியத்துவம் மூட்டியது.

1956க்கு முற்பட்ட ஆக்க இலக்கியங்களிலே நாம் ஒரு பொதுத் தன்மையை அவதானிக்க முடியும். 1956க்கு பிற்பட்ட இலக்கியங்களிலே ஏற்பட்ட வளர்ச்சிப் போக்கை தசாப்த ரீதியாக அவதானித்தல் மரபாகும்.

கிட்டத்தட்ட இக்காலப் பகுதியிலே தோற்றுவிக்கப்பட்ட இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் செயற்பாடு ஈழத்து இலக்கியத்திலே பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தேசியம், யதார்த்தம், மண்வளம் போன்ற கருத்து நிலைகளும் அவற்றின் அடிச்சரடாக இழையோடும் மாக்ஸியக் கோட்பாடுகளும் குறிப்பிடத்தக்கனவாகும்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் செயல்வீச்சின் காரணமாக மரபுவாதிகளும் 'சைவமும் தமிழும்' பேசியவர்களும் நிலைகுலைந்து போனதை வரலாறு பதிவு செய்துள்ளது. அதே வேளையில் இலங்கை முஸ்லிம் சமுதாயத்தின் மத்தியிலே மரபுவாதிகளோ இஸ்லாமிய இலக்கியம் என்ற சிந்தனைப் போக்கு அன்றும் இன்றும் இருக்கவே செய்கிறது. ஆனால் அதன் சட்டம்பிகளாக நின்று சண்டை பிடிக்கும் நிலையில் எவரும் இருக்கவில்லை.

இஸ்லாமிய இலக்கியம்

இஸ்லாமிய இலக்கியம் என்பதன் அர்த்தப்பாடு என்ன என்பதை இங்கு நாம் தெளிவுகாண்பது அவசியமானதே. இஸ்லாமிய இலக்கியமென்ற கோஷம் தமிழ்நாட்டு முஸ்லிம்கள் மத்தியிலே பலமாக வேர்பாய்ந்திருந்தது. அங்கிருந்துதான் இங்குள்ள சிலருக்கு அது தொற்றியிருக்கவேண்டும்.

தமிழ்நாட்டிலிருந்து வெளிவந்த பிறை– மணிவிளக்கு முஸ்லிம் முரசு... போன்ற மாத சஞ்சிகைகளே இஸ்லாமிய இலக்கியம் பற்றிப் பேசி வலுவிழந்து போயின.

ஜே.எம்.சாலி என்பார் யாவரும் அறிந்த தமிழக எழுத்தாளர் இதுதான் இஸ்லாமிய இலக்கியப் படைப்பு, என்று சொல்லுமாப்போல் 'தமிழக முஸ்லிம் சிறுகதைகள்' என்ற தொகுப்பொன்றை வெளியிட்டுள்ளார்.

அதன் முன்னுரையிலே "கட்டுத்திட்டமான, இஸ்லாமிய வாழ்க்கை முறையை மீறாதபடி வரம்புக்குள் நின்று இலக்கியம் படைக்கும் பெரும்பொறுப்பு முஸ்லிம் எழுத்தாளர்களுக்கு இருக்கவேண்டும். அத்து மீறல்கள் இஸ்லாமிய இலக்கியங்களிலே அனுமதிக்கத்தக்கனவல்ல என்ற குறிப்பிடுகிறார்.

முஸ்லிம் மக்களின் நிஜவாழ்வு.. அதன் பிரச்சினைப் பின்னல்கள்... அவற்றின் விளைவுகள் இவர்களுக்கு முக்கியமாகப்படவில்லை.

ஆனாலும் ஒரு வேடிக்கை இஸ்லாமி இலக்கியம் பேசி ஃபாத்திமாவுக்கு ஃபர்தா போட்டுக்காட்டும் இவர்கள், மறுபக்கம் திரும்பி பத்மினியின் சேலையை உரித்து நிர்வாணத்தைக் காட்டத் தவறவில்லை.

அதாவது, இதே ஜே.எம்.சாலி முஸ்லிம் பாத்திரங்கள் சம்பந்தப்படாத பல நாவல்களை எழுதி இந்த விளையாட்டை சாதித்துக்காட்டியுள்ளார். இத்தகைய இரட்டைவேட எழுத்தாளர்கள் தமிழகத்திலே பலர் இருக்கிறார்கள். அதிர்ஷ்டவசமாக இத்தகைய எழுத்தாளர்கள் நமது நாட்டிலே இல்லாவிட்டாலும்கூட, இரண்டும் கெட்டான் நிலையிலே எழுதுகின்றவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

எமது இலக்கிய மரபிலே முன்னூறு ஆண்டுகாலமாக செய்யுள்களும் காப்பியங்களும் முனாஜாத் கிஸ்ஸா, மஸ்அலா, அந்தாதி, மௌலூத் போன்ற சிற்றிலக்கியங்களும் இருந்து வந்துள்ளன. இவற்றின் பாடுபொருளாக இஸ்லாமிய வரலாற்று மாந்தர்களும் இஸ்லாமியக் கோட்பாடுகளும் இருந்து வந்துள்ளன. இவையே 'இஸ்லாமிய இலக்கிய' மென்ற கோட்பாட்டுக்கு ஊற்றுக் கண்ணாய் இருந்திருக்கக் கூடும்.

நாவல், சிறுகதை என்பன இஸ்லாமிய பண்பாட்டுக்கு எதிரானவை என்ற கருத்தும் இதனோடிணைந்து வளர்க்கப்பட்டுவந்தது.

மக்கள் இலக்கியம்

1956 பின் எமது பாடசாலைகளிலே சுயமொழிக் கல்விப்போதனை இலக்கிய வளர்ச்சிக்கு ஊக்கமூட்டக் காரணமாய் அமைந்தது.

இக்காலப் பகுதியிலே இளங்கீரன், பித்தன், அ.ஸ.அப்துஸ் ஸமது, மருதூர்க் கொத்தன், அண்ணல், புரட்சிக் கமால் பஸீல் காரியப்பர், ஏ. இக்பால், எம்.ஏ. நுஃமான், ஆ.மு. சரீஃப்தீன், எம்.சீ.எம்.சுபைர், யுவன் போன்றவர்கள் எழுதிவந்தனர். இவர்கள் அனைவரும் ஒரு குறிப்பிட்ட நிலைப்பாட்டின் கீழோ.... குறிப்பிட்ட நெறிப்படுத்தலின் கீழோ எழுதி வந்தவர்கள் அல்லர்.

அடுத்தகட்ட ஈழத்து முஸ்லிம் எழுத்தாளர்களுக்கு 1965–70 காலகட்டம் ஒரு பொற்காலமென்றே சொல்ல வேண்டும். இக்கால கட்டத்திலேயே 'இன்ஸான்' என்ற வாராந்தரி வெளிவந்தது.

இதன் ஆசிரியர் அபூதாலிப் அப்துல் லதீஃப் ஓர் இடது சாரிச் சிந்தனையாளர் இன்ஸான் பத்திரிகையின் தலைப்புச் செய்திகளைக்கூட அவர் "சோனத் தமிழி' லேயே வரைந்தார். பிரதி வாரமும் வெள்ளிக் கிழமை ஜும்ஆ தொழுகையின்பின் கிராமங்கள் தோறும் விநியோகிக்கத் திட்டமிட்டிருந்தார்.

ஆக்க இலக்கியங்களுக்கு நிறையச் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது.

பாலஸ்தீனக் கவிதைகள், அல்லாமா இக்பால், நஸ்ருள் இஸ்லாம் போன்றவர்களின் படைப்புக்கள் இதழ் தோறும் வெளிவந்தன. இன்ஸான் மூலம் ஓர் எழுத்தாளர் பட்டாளமே வழிநடாத்தப்பட்டது.

ஏ. இக்பால், எச்.எம்.எம்.சம்ஸ், மொயீன் ஸமீன், வை. அஹ்மத், கலைவாதி கலீல், எஸ்.எல்.எம்.ஹனீபா, எம்.எஸ்.ஏ. ரஹீம், பண்ணாமத்துக் கவிராயர், சாரணா கையூம், யோனகபுர ஹம்ஸா, எம்.பி.எம்.நிஸ்வான்... இப்படியொரு கூட்டமே அணிதிரண்டு எழுதியது.

பட்டிதொட்டிகளில் வாழ்கின்ற முஸ்லிம் மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகள், முதலாளி வர்க்கத்தின் அட்டகாசங்கள், மதப்போலிகளின் குரூரங்கள் அந்தந்தப் பிரதேச மண்வளத்தோடு அரங்கேறின. இஸ்லாத்தின் உள்ளீடான சகோதரத்துவம், சமத்துவம், மனித நேயம், சமூக நீதி போன்றவற்றை வெளிப்படுத்தி ஒரு சமூக மாற்றத்தை வேண்டி நின்று படைப்பாக்கம் செய்தனர். இவர் தம் படைப்புக்கள் மேற்சொன்ன 'இஸ்லாமிய படைப்பு என்ற மாயையை நொறுக்கித் தள்ளியது.

இவர்களில் சிலர் இன்ஸானுக்குப் பிறகு எழுதாவிட்டாலும் கூட, இன்று பேசப்படுபவர்கள் இன்ஸான் பண்ணையில் வளர்ந்தவர்களே, இன்ஸானில் தமது ஆரம்பச் சுவடுகளைப் பதித்த சிலர் பின்னர் 'மல்லிகை' போன்ற சஞ்சிகைகள் மூலம் முன்னணிக்கு வந்தனர்.

நாவல் துறை

1885ல் எழுதப்பட்ட சித்தி லெப்பையின் 'அஸன்பே சரித்திரம்' இலங்கையின் முதலாவது தமிழ் நாவலாகக் கொள்ளப்படுகிறது. இதுதவிர இன்னொரு பெருமை அவருக்குண்டு. ஆரிய ராஜகருணா எழுதிய 'சிங்கள நாவலின் தோற்றம்' என்ற நூலிலே, சைமன் டி சில்வா 1905ல் எழுதிய 'மீனா' என்ற நாவலே இலங்கையின் முதலாவது சிங்கள நாவல் எனக்குறிப்பிடுகின்றார். இத்தகவலின் படி இலங்கையின் முதலாவது நாவலை சித்திலெப்பையே எழுதியுள்ளார்.

சித்தி லெப்பையை அடுத்து எமது நினைவைத் தொடுபவர் சுபைர் இளங்கீரன் ஆவார். 1950 இவர் எழுதத் தொடங்கியுள்ளார்.

பைத்தியக்காரி, மரணக்குழி, காதல் உலகிலே, கலாராணி, ஒரே அணைப்பு, மீண்டும் வந்தாள், பொற்குகை பட்டினிக் தோட்டம், அழகு ரோஜா, வண்ணக் குமரி, மாதுளா, ஆணும் பெண்ணும், காதலன், நீதிபதி, தென்றலும், புயலும், மனிதனைப் பார், எதிர்பார்த்த இரவு, நீதியே நீ கேள்.... இப்படி ஏராளமான நாவல்களை எழுதியுள்ளார். பெரும்பாலானவை தி.மு.க. பகுத்தறிவுப் பாசறை சார்ந்த நாவல்கள் என்பது யாவரும் அறிந்ததே.

தென்றலும், புயலும், நீதியே நீ கேள், நூல்வடிவில் வராவிட்டாலும் அவளுக்கொரு வேலை வேண்டும் என்பன இளங்கீரனின் சிறந்த நாவல்களாக சிலாதிக்கப்படுகின்றன. இருந்தாலும் அவர் ஒரு முஸ்லிம் என்ற வகையில் முஸ்லிம் மக்களின் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்ட நாவல் எதையும் அவர் எழுதவில்லை.

'நீதியே நீ கேள்' என்ற நாவலிலே அன்ஸாரி என்ற ஒரு பாத்திரம் வருவது உண்மைதான். அந்த அன்லாஸி தனது தாயைப் பார்த்து 'அம்மா' என்று பேசும் வண்ணமே உரையாடலைக்கூட அமைத்துள்ளார்.

அவரையடுத்து அறுபதுகளில் கல்ஹின்னை என்.எம்.ஹனிபா (மாமா) ஏமாற்றம், மர்மக் கடிதம், பகற்கொள்ளை, இலட்சியப் பெண் போன்ற நாவல்களை எழுதியுள்ளார். இவை திடுக்கிடும் திருப்பங்களும் மர்மங்களும் நிறைந்த நாவல்களே.

நயீமா சித்தீக், ஏ.எச்.ஏ.பசீர், அ.ஸ. எஸ்.ஐ.நாகூர் கனி, எம்.டி.எம். இம்தியாஸ், எம்.எம்.இக்பால், முகம்மது ஜெயீல், ஜுனைதா செரீப் ஜெக்கியா ஜுனைதீன், புண்யாமீன், கே.அமானுல்லா முகிதீன் ரஜா, றியாஸா ஆப்தீன், இர்பானா ஐப்பார், மருதூர்வாணன், ஹக்கலை ரிழ்வான் ஆகியோரும் நாவல்களை எழுதி வெளியிட்டுள்ளனர். இந்த வகையில் சுமார் ஐம்பது நாவல்கள் அறுவடையாகியிருப்பதாக அறிய முடிகிறது.

1976ல் வை. அஹ்மத் எழுதிய 'புதிய தலைமுறைகள்' ஒரு குறிப்பிடத்தக்க நாவலாகும்.

வாழைச்சேனை கிராமத்தைச் சேர்ந்த முதிய தலைமுறையினருக்கும், இளைய தலைமுறையினருக்கும் இடையில்உள்ளூர் அரசியல் தொடர்பாக ஏற்படும் போட்டியே 'புதிய தலைமுறைகள்' கதையின் அடித்தளம் பள்ளிவாசல் நிர்வாக சபையினரை எதிர்த்து இளைஞன் வெற்றி பெறுகிறான். அவன் மீது பொறாமை கொண்டோர் அவ்விளைஞனையும் அவனது காதலி சல்மாவையும் இணைத்து விபச்சார குற்றம் சுமத்துகின்றனர். மார்க்கத் தீர்ப்பிலும் அவர்கள் நிரபராதியாகின்றனர்.

பொதுவாக முஸ்லிம் கிராமங்களில் நிகழும் பிரச்சனை பிரதேச வாழ்க்கை முறையோடு சித்தரிக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் எழுத்தாளர்களின் நாவல் முயற்சியில் இதனையொரு திருப்புமுனையாகவே கொள்ள வேண்டும்.

இதனைத்தொடர்ந்து வெளிவந்த அ.ஸ. அப்துஸ் ஸமதுவின் 'பனிமலர்' திக்குவலை கமாலின் 'ஒளி பரவுகிறது' என்பன கவனிக்கத்தக்க படைப்புக்களாகும். பொதுவாக ஈழத்து முஸ்லிம்களின் நாவல் முயற்சிகள் திருப்தியடையக்கூடிய வகையிலே இல்லை.

சிறுகதை ஆக்கம்

1898ல் ஐதுரூஸ் லெவ்வை மரைக்காயர் எழுதிய 'ஹைதர்ஷா சரித்திரம்' என்ற தொகுதியோடு இலங்கை முஸ்லிம்களின் சிறுகதை முயற்சி ஆரம்பமாகிறது.

அதிகமாக எழுதாவிட்டாலும் கூட எச்செம்பி முஹிதீன், ஏ.ஏ. லதீஃப், அண்ணல் ஆகியோர் முறையே கம்பளை பிச்சப்பா, மையந்து, மனிதன் ஆகிய சிறுகதைகளை எழுதியதன் வாயிலாக இன்றும் பேசப்படுகின்றனர்.

1964ல் யூ. எஸ். தாவூத் பதினான்கு கதைகளைத் தொகுத்து முஸ்லிம் கதைமலர் என்ற பெயரில் வெளியிட்டார். அதில் எழுதிய ஒன்பதுபேர் அதன்பின்பு சிறுகதைகளே எழுதவில்லையென்று தெரிகிறது.

1979ல் இலங்கையில் நடைபெற்ற இஸ்லாமிய தமிழ் இலக்கிய மகாநாட்டின் போது 'பிறைப்பூக்கள்' என்ற தொகுப்பு நூல் வெளியாயிற்று. அதில் முப்பத்தொன்பது சிறுகதையாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர்.

மூமீஷா, பித்தன், அ.ஸ, மருதூர்க் கொத்தன், முத்துமீரான், ஜுனைதா செரீப், மருதூர் ஏ. மஜீத், எஸ்.எல்.எம். ஹனீபா, மொயின் ஸமீன், ப.ஆப்டீன், கலைவாதி கலீல், திக்குவல்லை கமால், நயீமா சித்தீக், எஸ்.ஐ.நாகூர்கனி, சுலைமா இக்பால், எஸ்.எச்.நிஃமத், ரகுமான், ஏ.ஜபார், புன்யாமீன், இர்பானா ஐப்பார், மடவலை கலீல், மு.பசீர், பீர்முகம்மது, கலீல்கண்டு ஆகியோர் முப்பத்தைந்து சிறுகதைத் தொகுதிகளைத் தந்துள்ளனர்.

நூல் வெளியிடா விட்டாலும் கூட எம்.எச்.எம்.சம்ஸ், வை. அஹ்மத், எம்.எஸ்.ஏ.ரஹீம், மருதூர்க்கனி, எம்.ஏ.ரஹீமா, நற்பிட்டிமுனை பளீல், எம்.எம்.நௌஷாத், நீள்கரை நம்பி, கெகிராவ ஸஹானா போன்றவர்கள் குறிப்பிடத்தக்க எழுத்தாளர்களாவர்.

எம்.எல்.எம்.மன்சூர், வேதாந்தி கனவும் மனிதன் எழுதிய எம்.ஐ.எம்.ரவூப் போன்றோர்

வித்தியாசமான முனைப்புகளைக் காட்டி அமைதியடைந்துள்ளனர்.

எண்ணிக்கையில் அதிகமானோர் சிறுகதைகள் எழுதினாலும் கூட, நாவலுடன் ஒப்பிடுகையில் ஏதோவொரு வகையில் சமுதாயக் கண்ணோட்டத்துடனேயே ஏழுதியுள்ளமை ஆரோக்கியமானதாகும்.

கவிதை இலக்கியம்

கலாநிதி கா. சிவத்தம்பி, மு.இ.மு. ஜபாரின் 'திறக்கப்படாத தீப்பெட்டிகள்' என்ற கவிதை நூலுக்கு எழுதிய முன்னுரையிலே, "கவிஞனாவது ஆலுமையின் நேர்த்தி. இன்று நம்மிடையே மிகச் சொற்பமான கவிஞர்களே உள்ளனர். கவிதைகள் எழுதுவோர் பலர் உள்ளனர். செய்யுள்கள் எழுதுவோர் இன்னும் பலர் உள்ளனர். இவர்கள் எல்லோரும் தங்களைக் கவிஞர்களாகவே எண்ணிக்கொள்கின்றனர்" என்ற சாரப்பட எழுதியுள்ளார்.

இதன்படி பார்த்தால் முஸ்லிம்களில் கவிதை எழுதுவோர் மிகமிக அதிகம்தான்.

அப்துல் காதர் லெப்பை, ஆ.மு. சரிபுதீன் போன்றோர் சமய நெறிநின்றும் எம். சீ. எம். சுபைர் குழந்தை இலக்கியமாகவும், அண்ணல் அழகியல் பாங்கிலும் ஐம்பதுகளில் எழுதிவந்தனர்.

இவர்களிலிருந்து வித்தியாசப்பட்டு நிற்பவர் 'புரட்சிக் கமால் கவிதைகள்' அதற்கு எடுத்துக் காட்டு. மரபோடும் அதே வேளை யாவருக்கும் விளங்கும் எளிமையோடும் எழுதினார். பார்த்த பார்வைக்கு இஸ்லாமியப் பண்புகள் வெளிப்பட்டாலும் யாவருக்கும் பொதுவாகவே அமைந்துள்ளன.

"எவருக்கும் பொதுவான உயரிலட்சிபங்களை தமது கவிதைகளிலே புரட்சிக் கமால் எடுத்துரைக்கின்றார் இஸ்லாம் வற்புறுத்தும் நம்பிக்கை, சமத்துவம், சகோதரத்துவம், தியாகம் முதலிய இலட்சியங்கள் மனுக்குலத்துக்கு அவசியமானவை" என்கிறார் கலாநிதி கைலாசபதி.

அறுபதுகளில் எழுந்த தலைமுறையிலே யுவன், எம். ஏ. இக்பால் போன்றவர்கள் முன்னணிக்கு வந்தனர்.

இவர்களிலே தாத்தாமாரும் பேரர்களும், அழியா நிழல்கள், மழைநாட்கள் வரும் என்ற நூல்களைத் தந்து நுஃமான் முன்னணிக்கு வந்தார். பேச்சு மொழிக் கவிதையை சிலாகித்து மகாகவியை அறிமுகப்படுத்தினார். 'கவிஞன் என்ற கவிதை இதழை சிலகாலம் நடாத்தினார். இவரிடமிருந்து இலக்கிய உலகம் இன்னும் நிறைய எதிர்பார்கின்றது.

உள்மன ஓலங்களாக ஒலித்துக்கொண்டிருந்த புதுக்கவிதை 1970களின் முற்பகுதியில் வானம்பாடிகளின் சிறகடிப்பால் புதுமெருகுபெற்றது. சமூகப் பெறுமானம் உள்ளடக்கமாகியது. இதன் தாக்கம் படிப்படியாக எமது கவிதை உலகையும் உள்வாங்கியது.

அக்கால கட்டத்தில் அன்பு ஜவஹர்ஷா வானம்பாடி, ஏன், எழுச்சி, வேள்ளி.... முதலான தமிழக புதுக்கவி இதழ்களோடு நெருங்கிய தொடர்புபட்டுழைத்தார். 'ஏன்' வெளியிட்ட சிறப்பு மலருக்கு ஜவஹர்ஷாவும் பாலகிரியும் இலங்கைத் தொகுப்பாளர்களாகச் செயற்பட்டனர். மேலும் சில ஈழத்துக் கவிதைகளை "பொற்கள்" என்ற மகுடத்தில் தொகுத்தார். பின்னர் தனது கவிதைகளை 'காவிகளும் ஒட்டுண்ணிகளும்' என்ற பெயரில் வெளியிட்டார்.

திக்குவல்லை கமாலின் 'எலிக்கூடு' செந்தீரனின் 'விடிவு' மூதூர் கவிதைகள்' என்பன அக்கால கட்டத்திலேயே வெளிவந்தன. ஆனால் இவையாவுமே சிறுபிரசுரங்கள் என்ற வகையிலேயே சேரும்.

முழுமையான படைப்புக்களை அடுத்தடுத்துத் தந்தவர் மேமன்கவி யுகராகங்கள், ஹிரோஷிமாவின் ஹீரோக்கள், இயந்திரச் சூரியன் என்பவற்றோடு 'நாளைய நோக்கில் இன்றி'லுக்காக சாகித்திய மண்டலப்பரிசையும் பெற்றார். ஆயினும் அளவுக்குமீறிப் படிமங்களை அடுக்கி வாசகரைத் திணறவைப்பதான ஒரு குற்றச்சாட்டு இவருக்குண்டு.

அன்புடீன், பாலமுனை பாறூக் இருவரும் முறையே முகங்கள், பதம் எனும் நூல்களைத் தந்துள்ளனர். கட்டிறுக்கமான யாப்பையோ, கட்டுடைத்த புதுமையையோ இவர்கள் வரித்துக்கொள்ளாமல், நிதானமாகச் சமூக உணர்வுகளைப் பாடியதன்மூலம் குறிப்பிடத்தக்கவர்களாகின்றனர்.

எண்பதுகளைத் தாண்டும் போது ஈழத்துக் கவிதைகளின் உள்ளடக்கமே மாறிப்போய்விட்டது. இந்தப்பரிமாணத்தில் குறிப்பிடத்தக்க சிலர் பிரகாசிக்கின்றனர்.

இத்தனைக்கும் பிறகு கச்சிதமாக மரபுக் கவிதைகளை யாத்தளிப்பதில் ஜின்னா சரீப்தீன், மருதமைந்தன் போன்றோர் உறுதியாகச் செயற்படுகின்றனர்.

1996ல் அல்அஸுமத் சுமார் நானூற்றைம்பது இளம் கவிஞர்களின் ஆக்கங்களை, வானொலி நிகழ்ச்சியொன்றுக்கூடாக நூலாக்கியுள்ளார். இவர்களுள் சிலரேனும் தேறுவார்களென எதிர் பார்க்கலாம். ஏலவே அ.ஸ. தொகுத்த 'முற்றத்து மல்லிகை' எம். சீ. எம். சுபைர் தொகுத்த 'பிறைத்தேன்', அன்பு முகையதீன்– பாலமுனை பாறூக் .இணைந்து தொகுத்த 'எழுவான் கதிர்கள்' என்பன பல்கவிஞர் தொகுப்பு நூல்களாக வெளிவந்துள்ளன.–

காதர் மஸ்தான், யூ. எல். எம். குவைலித், ஏ.எம். அபூபக்கர், எம்.எச்.எம். ஹலீம்தீன், எம்.எச்.எம். புகாரி, கலைக்கமல், தாஸிம் அஹ்மத், கலைவாதி கலீல், மருதூர் ஏ. ஹஸன், மு.றூகா, மடவளை கலீல், எஸ். எச் நிஃமத், நஜ்முல் ஹுஸைன், ஏ. முகம்மது தமீம், ரி. எல். ஜௌபர்கான், எஸ் முத்துமீரான், ஐ.ஏ.ஹஸன், டீன்கபூர், பக்கிரித்தம்பி முதலான முப்பத்தைந்து கவிஞர்கள் எழுபத்தைந்துக்கு மேற்பட்ட தொகுதிகளை வெளியாக்கியுள்ளனர்.

இதர துறைகள்

கவனிக்கப்படாத, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படாத துறையாக நாடகப் பிரதியாக்கம் அமைந்திருக்கிறது. எம்.ஏ முகம்மத், எச். எம். எம். இப்ராகிம், இளங்கீரன், ஜுனைதா செரீப் ஆகியோரின் நாடக நூல்கள் அருமையாக வெளி வந்துள்ளன. இது தவிர தரமான ஒலிநாடகப் பிரதிகளை எம். அஷ்ரப்கான், எம். அஸ்வத்கான், தீன்ஷா, பௌஸுல் அமீர். மானா மக்கீன், கே. எம்.ஏ. முஹிதீன், எம்.எம். இர்பான் போர்வையூர் ஜிப்ரி போன்றவர்கள் வழங்கி வந்துள்ளனர்.

எஸ். முத்துமீரான், யூ. எல்.ஆதம்பாவா, எம். ஐ. எம். முஸம்மில் ஆகியோரின் உருவகக் கதைத் தொகுதிகளும் ஹஸீனா வஹாபின் மனிக்கதைத் தொகுதியொன்றும் காலி– ஏ. எச். எம். யூசுப்பின் நகைச்சுவைச் சித்திரத் தொகுதியொன்றும் அதிகம் பேசப்படாத விடயங்களாகும்.

விமர்சனம்

இலக்கிய வளர்ச்சிக்கு விமர்சனம் மிக இன்றியமையாததே எமது படைப்பாளிகள் கண்டனங்களுக்கு ஆலான அளவுக்கு கண்ணியமான ஊக்குவிப்புகளுக்கு இலக்காகவில்லை.

முஸ்லிம் எழுத்தாளர்களின் படைப்புக்களை ஆய்ந்து பல தொகுப்புக்களை வெளியிட்ட கலாநிதி எம்.எம். உவைஸ் 1950ம் ஆண்டோடு அதற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார். இலக்கிய ஈடுபாடு கொண்ட கலாநிதி எம். ஏ. எம் சுக்கிரி, எஸ். எம். கமால்தீன், எம். எஸ். எம். அனஸ், எம். ஐ. எம். அமீன் போன்றவர்களும் நவீன இலக்கியங்களை நோக்கி இறங்கி வரவில்லை. ஒரு விமர்சகராகவும் நிகழும் எம். ஏ நுஃமான் முஸ்லிம் படைப்பிலக்கியங்களை ஆய்வு செய்து எம்மவர்களை தேசிய, சர்வதேசிய நீரோட்டத்தை நோக்கி இட்டுச் செல்வார் என்ற நம்பிக்கை இன்னும் அற்றுப்போகவில்லை.

முஸ்லிம் சமய,கலாசார, பாரம்பரிய, பண்பாட்டுக்கூறுகள் பிரதிபலிக்கும் ஆக்கங்களை சரியாகப் புரிந்து கொண்டு உள் நின்று விமர்சிக்கும் தன்மை எம். எம். எம். .மஹ்ரூப், முகம்மது சமீம், எஸ். எம். ஜே. பைஸ்தீன், எச். எச். எம். சம்ஸ் போன்றவர்களால் ஓரளவுக்காவது மேற்கொள்ளப்படுவது நம்பிக்கை தரும் நிகழ்வாகும்.

வாசகர் தரம்

கல்வி விருத்திப் பரம்பல் காரணமாகவும் பொதுசனத் தொடர்பு ஊடகங்களின் செல்வாக்கினாலும், மாணவர்–இளைஞர் வளர்ந்தோர் மத்தியில் புதியன ஏற்தலுக்காக வாசிப்புத் தேவையை உயர்த்தியுள்ளது.

ஆயத்துல்லா கொமெய்னியின் ஈரான் புரட்சி ஏற்படுத்திய அறப்போர் (ஜிஹாத்) பற்றிய சிந்தனைகளும்,ஆப்கானிஸ்தான்.......... பொஸ்னியா.......... செச்னியத் தாக்கங்களும்........

ஸல்மான் ருஸ்தி, தஸ்லீமா நஸ்ரின் போன்றோரின் இலக்கியங்கள் (இவை சரியானவை என்ற நோக்கில் குறிப்பிடப்படவில்லை) உலகை ஒரு கலக்குக் கலக்கியதன் மூலம், இலக்கியத்துக்குள்ள சக்தியைப் புரிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றமையும்....

நவீன உலகுக்கு ஈடு கொடுக்கும் வகையில் இஸ்லாமியக் கருத்துக்களை முன்வைத்த அறிஞர்களான ஹஸனுன் பன்னா செய்யத் குதுப், முகம்மத் அல்கஸ்ஸாலி, யூசுப் கர்லாகி போன்றோரின் செல்வாக்கு எமது வாசகர் வட்டத்தைப் போஷித்துள்ளதை எவரும் மறந்து விடமுடியாது.

இத்தகைய நிலைப்பாடுகள் காரணமாக வேகமான சமூகப் புனரமைப்புக்கு உந்து சக்தியான.......... சமாதான சகவாழ்வுக்கு உரமூட்டுகின்ற இலக்கியங்களை தேசிய மட்டத்திலும் எதிர்பார்ப்பது தவறல்ல.

இந்த எதிர்பார்ப்பை ஈடேற்றும் வகையில், இன்று ஈழத்து முஸ்லிம் எழுத்தாளர்கள் செயற்படுகிறார்களா என்பதே வேள்வி?

புதிய பிரச்சினைகள்

இனி 1980களுக்குப் பின்பு எமது எழுத்தாளர்களுக்கு முன்னுள்ள பிரச்சினைகளை நாம் இனம் காணபதவசியம் . சர்வதேச ஏகாதிபத்தியம் எமதுநாட்டின் மூலவளங்களைச் சூறையாடுகின்ற திறந்த பொருளாதாரமும் அதன் விளைவுகளிலுமிருந்து நாம் ஒதுங்கி நிற்க முடியாது.

பேரினவாதம் – இனப் பிரச்சினை – தொடரும் போர்ச்சூழல் எமது பாணதுணடைக் கூடப் பதம் பார்த்திருக்கிறது. மூச்சுப்பேச்சுக் காட்ட முடியாதபடி மனித உரிமை மீறல்களும் குழுப் பயங்கரவாதமும் அரச பயங்கரவாதமும் எம்மை அச்சுறுத்தி வந்துள்ளது.

எழுபதினாயிரத்துக்கு மேற்பட்ட முஸ்லிம்கள் வடக்கிலிருந்து குறுகிய நேரக்கெடுவில் வெளியேற்றப்பட்டு தெற்குக் கிராமங்கள் தோறும் அகதிகளாக அவதிப்படுவதை நாம் கண்டு கொள்ளாமலிருக்க இயலாது.

மரபு ரீதியான தொழில்களின் தேய்வும், வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களால் ஏற்படும் சாதக பாதகமான நிலைப்பாடுகளையும் நாம் சாதாரணமாக கருத முடியாது.

கல்வி, உயர் கல்வி, அரச வேலைவாய்ப்புக்களை நோக்கி பெண்களின் எழுச்சியும் அதற்கான தடைகளும் தற்செயலானதென்று தட்டிக் கழிக்கத் தக்கதல்ல.

கிராமங்கள் தோறும் இயக்க ரீதியாக தப்லீஃ ஜமாஅத், ஜமாஅதே இஸ்லாமி, தௌஹீத் ஜமாஅத், ஜமாஅதே முஸ்லிமின் என்று பிரிந்து நின்று ஆத்மீகப் போர் புரிவதும் கவனிக்கத்தக்கதே.

மேற்சொன்ன யதார்த்தங்களை உள்வாங்கி, அவற்றை இலக்கியமாக்கும் சிருஷ்டியாளர்கள் எங்கள் மத்தியிலே இன்று இருக்கிறார்களா ?

'நமக்கேன் இந்த வம்பு' என்று ஒதுங்கி நிற்கிறார்கள் சிலர். எழுதாமலிருக்க முடியாது என்பதற்காக... எதையாவது எழுதிக் கொண்டிருக்கிறார்கள் இன்னும் சிலர். சமூக – சமய– பயங்கரவாத – அரச தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க முடியாமல் சமரசம் செய்து கொள்கிறார்கள் மற்றும் சிலர். எழுதியதுபோதும் அவற்றை நூலாக்கம் செய்வோமென்று இறங்குகிறார்கள். இன்னொரு சாரார்.

எவ்வாறாயினும் இக்காலப் பகுதியில் நூலாக்க முயற்சியொன்றே சற்றே மகிழ்ச்சியளிக்கிறது. 1960–69களில் பதினேழாகவும், 1970–79 களில் முப்பதாகவும், 1980–89களில் எழுபதாகவும் உயர்ந்த ஆக்க இலக்கிய நூல் வெளியீடுகள் 1990–96களில் ஐம்பத்தாறாக இன்னும் ஒரு படி வளர்ச்சி கண்டுள்ளது.

முத்தாய்ப்பு

சமகாலப் பிரச்சினைகளை சமகாலத்திலேயே முழுமையான இலக்கியங்களாகப் படைத்துவிட முடியாது. ஆயினும் எதிர்கால முழுமையை நோக்கிய அத்திவாரத்தையாவது இட்டு வைக்கும் பொறுப்பு எழுத்தாளனுக்குண்டு.

சேரன், சு. வில்வரத்தினம், சிவசேகரம், சிவரமணி, மைத்ரேயி போன்றோரின் கவிதைகளிலும், செங்கை ஆழியான், தெணியான், இரத்தினவேலோன் மற்றும் பல எழுத்தாளர்களின் சிறுகதைகளிலும், விடிவுக்கு முந்திய மரணங்கள், புதியதோர் உலகம், மௌனத்தில் அழுகின்ற மனங்கள் போன்ற நாவல்களிலும் இனவிடுதலைக் கருத்துக்களும் போராட்ட நிகழ்வுகளும் புலம்பெயர் அவலங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு இலங்கை முஸ்லிம்கள் எதிர்நோக்கும் முன்சொல்லப்பட்ட தேசிய – சர்வதேசிய – உடனிகழ்கால பிரச்சினைகள் பதிவாகின்றனவா என்பதே கேள்வி.

ஓரளவுக்கு கவிதையில் மாத்திரம் இது சித்தித்திருக்கிறது. நானும் ஒரு பூனை, எட்டாவது நரகம், பாம்பு நரபே மனிதன், பனியில் மொழிபெழுதி ... போன்ற படைப்புக்களைத் தந்து... வரவர அஃறிணைகளின் ஆக்கிரமிப்புகளுக்கு ஆளானாலும் கூட சோலைக்கிளி இதற்குத் தலைமை தாங்குகிறா. ஜபார், சுல்பிகா, எம். பௌஸர் போன்றோர் அவரோடு கைகோர்த்துக் கொள்கின்றனர்.

மொத்தத்தில், 1956 முதல் சமூக மாற்ற நோக்கிலும் போக்கிலும் வளர்ந்து சென்ற முஸ்லிம்களின் ஆக்க இலக்கியம், 1980 முதல் படிப்படியாக வீழ்ச்சியுற்று, பூச்சியத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிற தென்பதே கசப்பான உண்மையாகும்.

ஈழத்தமிழ் இலக்கியத்தில் பெண்களின் படைப்புக்கள்

ஏ. தேவகௌரி

ஈழத்து இலக்கியமானது 'ஈழம்' என்ற எண்ணப் பாட்டுக்குள் தன்னை ஆழ அகல கால் பதித்துக் கொண்ட காலம் அறுபதுகள் என்பது பலரதும் கருத்தாகும்.

1948இல் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்திருந்தும்கூட தமிழ் சமூகத்திலோ கலை இலக்கியத்திலோ குறிப்பிடத்தக்க மாற்றத்தை அது ஏற்படுத்தவில்லை என்பதும் இந்நிலையில் 50களில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தோற்றமும், இலவசக்கல்வியும், 1956 இல் தனிச் சிங்களச் சட்டமும் 'ஈழத்தமிழ்' என்ற பிரக்ஞையை மக்கள் மனதில் பதித்தது என்பதும் பல அறிஞர்களினதும் முடிவாகும். ஆனாலும் கூட அது திருப்திகரமாக இருக்கவில்லை என பலரும் கருத்துக்கூறியுள்ளனர்.

இந்நிலையில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினரால் முன்வைக்கப்பட்ட முற்போக்கு இலக்கிய வாதமானது ஈழத்துத் தமிழ் இலக்கியம் என்ற குரலையும் அதே வேளை பாரம்பரிய ஈழத்தமிழ் இலக்கியத்தினின்றும் வேறுபட்ட தன்மையினைக் கொண்டு இலக்கியம் விளங்க வேண்டும் என்றும் கூறி அதன் மூலம் சமூக மாற்றத்தை வேண்டி நின்றனர். அதன்போது மரபுவாதம், இடதுசாரி எதிர்ப்பு வாதம் ஆகியவற்றின் எதிர்ப்பின் போராட்டங்களுக்கு மத்தியில் வெற்றியும் பெற்றது. இக்கால கட்டம் அறுபதாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், இந்த 60களின் முக்கியத்துவம் பற்றி 'மலையகத் தமிழ் இலக்கியம்' என்ற நூலில் கலாநிதி க. அருணாசலம் குறிப்பிட்டிருக்கிறார். அதாவது "1960களில் இலங்கையின் சகல இனங்களினதும் அடிநிலை மக்கள் மத்தியில் ஏற்படத் தொடங்கிய எழுச்சி, பின்தங்கிய கிராமப் புறங்களிலும் பின் தங்கிய பிரதேசங்களிலும் எழுச்சிக்காற்று நுழையத் தொடங்கின. இலவசக் கல்வி விருத்தி, பல்கலைக்கழகம் வரையிலான தாய் மொழிக்கல்வி விருத்தி உலக அரங்கில் மிகவேகமாக இடம் பெற்றுக் கொண்டிருந்த மாற்றங்கள், முற்போக்குச் சிந்தனைகளதும் பொதுவுடைமைக் கருத்துக்களினதும் காத்திரமான வீச்சு, ஈழத்து முற்போக்கு இலக்கிய இயக்கத்தின் வீறார்ந்த செயப்பாடுகள், தமிழகத்தில் ஏற்பட்டுக் கொண்டிருந்த மாற்றங்களின் தாக்கம் ஈழத்து உலகில் 'இலக்கியசெல் நெறி பற்றி இடம்பெற்ற சர்ச்சைகள், வாதப்பிரதிவாதங்கள், விமர்சன உலகின் நெறிப்படுத்தல் முதலியவை ஈழத்து இலக்கிய உலகிலும் அதன் ஒரு கூறான மலையக இலக்கிய உலகிலும் குறிப்பிடத் தகுந்த மாற்றங்களை ஏற்படுத்தின' என்கிறார் அவர்.

இந்த வகையில் நோக்கும்போது அறுபதில் இருந்து எண்பது வரையான காலத்தை ஒரு பகுதியாகவும் எண்பதின் பின் ஒரு காலப் பகுதியாகவும் பிரித்து நோக்கலாம். இதற்கு அரசியல் சமூகப் பின்னணியே பிரிகோடாக இருக்கும்.

இவ்வாறான காலப்பகுப்பிலே, முதலில் 60இல் இருந்து 80 வரையான காலப்பகுதியை நோக்கினால், இதற்குள் இரு பகுப்புக்கள் இருப்பதை உணரலாம். 60இல் இருந்து பரவிய முற்போக்கு அலை இலக்கியத்தில் ஏற்படுத்திய தாக்கம் எழுபது வரை நீடித்தது. அதன்பின் பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் குறிப்பிடுவதுபோல் முற்போக்கு இலக்கிய ஆக்கவீச்சு ஒடுங்க. சிங்கள மேலாண்மை வாதப்போக்கு ஆரம்பமாகிறது.

இப்போக்கானது வெகு விரைவில் அரசஅடக்குமுறை நடவடிக்கைகளுக்கு இடம் கொடுக்கத் தொடங்கியது. அதனை எதிர்த்து மேற் கிளம்பிய தமிழ் இளைஞர் தீவிரவாதம் அரசியல் சமூக, பொருளாதார விடுதலையை உள்ளடக்கியதாக

இயங்கியது. இந்நிலையில் இலக்கியத்தைப் பொறுத்தவரை அடக்குமுறையின் கோரமும் அந்த அடக்குமுறை காரணமாக மேற்கிளம்பும் மானிட அவலங்களும் முக்கியமாக இடம்பெறத் தொடங்கின.

இத்தகைய பின்னணியில் 60களை நோக்கும் போது, யாழ்பாணச் சமூகத்தில் காணப்பட்ட சாதிப்பாகுபாடு ஒரு சமூகப் போராட்டப் பரிமாணத்தை இலக்கியத்தில் பெற்றுக் கொண்டது. மட்டக்களப்பில் தமிழ், முஸ்லிம் எழுத்தாளரிடையே நல்லுறவு, சமூக எழுச்சிக்கான உந்துதல் ஆகியவை முனைப்பாகின. மலையகத்திலோ அந்த சமூகத்தின் இருத்தல் பற்றிய அலசல் இடம் பெறத் தொடங்கிற்று.

இந்த நோக்கில் நாவல், சிறுகதை, கவிதை என இலக்கியங்கள் வடிவங்களைப் பெறலாயின. இதில் பெண்களின் பங்களிப்புப்பற்றிப் பார்க்கும் போது முதலில் அவர்களின் விபரப்பட்டியல் தேவைப்படுகின்றது. அதற்கு இலக்கியத்துறையில் ஈடுபட்ட பெண்கள் யார் யார்? அவர்கள் ஈடுபட்ட துறை என்ன? அதில் அவர்கள் கூறிய கருத்துக்கு வலுவிருந்ததா? என்பவை பற்றிய ஆய்வு ஏற்கனவே இடம் பெற்றிருக்க வேண்டும். இந்த 'வலு' எதனால் அளக்கப்பட்டது? என்று பார்க்கின்ற போது பெரும்பான்மை ஆண்கள் எழுதும் இலக்கியம் காலத்தை காட்டுவதாக வைத்து அதனுடன் ஒத்துப் போகும் கருத்துக்களை இந்தப் பெண்களும் படைத்திருந்தால் அவர்களின் பெறுமானம் கணிக்கப்பட்டு கவனத்தில் சேர்த்துக் கொள்ளப்படும். இல்லையேல் கவலையில்லாது ஒரு புறம் அவையும் இருந்து கொண்டிருக்கும். உதாரணமாக பவானி ஆழ்வாழ்பிள்ளை இன்று கருத்துக்குள்ளாகி இருப்பது இத்தகைய ஒரு நிலையால்தான் ஏனெனில் அவர் 60களில் எழுதத் தொடங்கியிருந்தும் கூட பெரும்பான்மை ஆண்கள் மத்தியில் ஒரு பெண் எழுதுகிறாள் என்ற நோக்கில் மட்டும் அவர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தார். ஆனால் அவரது கதைகளால் அவர் முக்கியத்துவம் பெற்றது 90களில் தான். சாரணம் 80களில் இருந்து ஈழத்தில் அதிதீவிரமாக பரவிய பெண்ணிலைவாதக் கருத்துக்களின் உள்வாங்கல்.

எனவே பெண்களின் படைப்புகளில் பெறுமானங்களைக் கணித்து அவர்களை இலக்கியப் பாரம்பரியத்தில் சேர்த்துக் கொள்வதிலுள்ள சிக்கல்கள் முதலில் தீரவேண்டும். அப்படித் தீர்ந்தாலும், இலக்கிய வரலாறு பற்றிப் பேசப்படுகின்ற இடங்களில் விமர்சனங்களில் பெண்கள் கணிப்புக்குள்ளாகின்றார்களில்லை, ஏன்? என்று நோக்கும் இலங்கையில் ஆண் எழுத்தாளர்களுடன் ஒப்பிடும் போது மிகச் சொற்ப தொகையினராக இவர்கள் இருப்பதும் அவர்களுள்ளும் வளர்ச்சியும் முதிர்ச்சியும் அடைந்தவர்கள் மிகமிகச் சொற்ப எண்ணிக்கையினராக இருப்பதும் அவர்களுள்ளும் தொடர்ந்து எழுதும் நிலையை கைவிட்டவர்களாக பலர் இருப்பதும் காரணங்களாகின்றன. உதாரணமாக கவிதா, மண்டூர் அசோகா, பவானி போன்ற சிறந்த பெண் எழுத்தாளர்கள் இன்று எழுத்துலகில் இருந்து ஒதுங்கி விட்டனர்.

இத்தகைய நிலையில் 60இல் இருந்து எண்பது வரையான காலப்பகுதியை நோக்கும் போது குறிப்பாக நாவலிலக்கியத்தில் கோகிலம் சுப்பையா. நா. பாலேஸ்வரி, சிறுகதை இலக்கியத்தில் குந்தவை, பவானி ஆழ்வாழ்பிள்ளை, புதுமைப்பிரியை என்ற புனை பெயரில் எழுதிய பத்மா சோமகாந்தன், மண்டூர் அசோகா, 'கவிதா' என்ற பெயரில் எழுதிய நாகேஸ்வரி, சிவபாக்கியம் குமாரவேல், யாழ் நங்கை என்ற பெயரில் எழுதிய அன்னலட்சுமி இராஜதுரை, யோகா பாலச்சந்திரன், கோகிலா மகேந்திரன், குரமகள், நயீமா சித்தீக், சரஸ்வதி, மகேஸ்வரி திலகா பழனிவேல், மாத்தளை ரோகினி பூரணி, இஸ்மாலிகா, ஆகியோரின் ஆர்வமும் பதிவாகியுள்ளன. இவர்களில் கவிதையில் ஆர்வம் காட்டியவர்களும் அடங்கும்.

இவர்களின் இலக்கிய ஆக்கங்கள் பற்றிச் சிந்திக்கின்ற போது 60களில் ஆண் எழுத்தாளர்கள் யாழ்பாணச் சமூகத்து சாதியத்தை மையமாக வைத்து வீரியம் மிக்க படைப்புக்களை எழுதியளவிற்கு பெண்கள் எவரும் எழுதியிருக்கவில்லை என்பது தெரியவருகின்றது. காரணம் சமூகத்தில் பெண்களின் கல்விநிலை, சமூக கலாசார நோக்கில் வெளிப்படையான அனுபவம் ஆகியவை பெண்களுக்கு குறைவாகவே இருந்திருக்கிறது. ஆனாலும் மலையகத் தொழிலாளரின் வர்க்கப் போராட்ட முனைப்பினை கோகிலம் சுப்பையா தனது தூரத்துப் பச்சை நாவலில் முனைப்பாகக் காட்டியுள்ளார்.

மேலும் இவ்விடத்தில் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். ஒவ்வொரு பெண் எழுத்தாளர்களினதும் ஆக்கங்களை ஒட்டுமொத்தமாக வாசிக்கக்கூடிய சாதகமான நிலை இல்லாத போது பெரும்பான்மையாக வெளியில் பேசப்பட்ட கதைகளை வைத்தே கணிப்புகள் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

நா. பாலேஸ்வரியைப் பொறுத்தளவில் சிக்கல்களை ஆண், பெண் உறவில் ஏற்படும் கலாசார கட்டுக்கோப்புக்குள் வைத்துக் கொண்டு பிறழ்வுகளாகவே சித்தரிக்க முயன்றவர். மனோரம்மியமான காதல் கதைகளை திடீர் திருப்பங்களுடன் தியாகம், கண்ணீர் என கற்பனையில் எழுதியவர். இவரது சுடர் விளக்கு, பூஜைக்கு வந்த மலர் ஆகிய நாவல்கள் அத்தகையன இருந்தாலும் அன்றைய வீரகேசரி, மித்திரன் வாசகர்களுக்கு இவை வரப்பிரசாதமாகவே அமைந்தன.

மேலும், பவானி ஆழ்வாழ்பிள்ளை, கவிதா, யோகாபாலச்சந்திரன், பத்மா சோமகாந்தன், கோகிலா ஆகியோர் பெண்களின் உணர்வுகள் யதார்த்த வாழ்வோடு மோதுகின்ற தன்மைகளை வெளிப்படுத்தினர். இவை கலாசார அமைப்புக்குள் நின்று பேசப்பட முடியாதவையாகவே அதுவரை காலம் இருந்தவை. கவிதா, யோகா பாலச்சந்திரன், பத்மாசோமகாந்தன், கோகிலா ஆகியோரை விட பவானி சற்றுத் துணிச்சலுடன் கலாசாரப் பெறுமானங்களைக் கேள்விக்குறியாக்கியவர். இவர் எழுதிய 16 கதைகளின் தொகுப்பு 1962இல் 'கடவுளரும் மனிதரும்' என்ற பெயரில் வெளியாகியது. இன்று பலராலும் விதந்து கூறப்படும் ஒரு தொகுதியாகவும் உள்ளது.

கவிதா, யோகாபாலச்சந்திரன், பத்மா சோமகாந்தன், கோகிலா மகேந்திரன் இவர்கள் கலாசாரம் என்ற கட்டுக்கோப்பின் அமைப்பால் மாற்றங்களை உள்வாங்க முடியாது பெண்கள் இழந்து போகும் சிறுசிறு உரிமைகளையும் உணர்வு வெளியீடாக வெளிப்படுத்தியவர்கள் இவர்களுள்ளும் பத்மா சோமகாந்தன், கோகிலா மகேந்திரன் ஆகியோர் அந்த உரிமைகளைப் பெண்கள் பெறுவதற்கு உரித்துடையவர்கள் என்பதை வெளிப்படையாகவே நிறுவியவர்கள். இவர்களது எழுத்துக்கள் 80இன் பின் சிறப்பாக ஆராயப்படும்.

கவிதாவின் 'யுகங்கள் கணக்கல்ல' கதைத் தொகுப்பு 1986 இல் தான் வெளிவந்தது. நுட்பமான பார்வை, சமுதாய ஆய்வு, துணிச்சலான வெளிப்பாடு சிறந்த நடை என விமர்சகர்களால் அறிமுகப்படுத்தப்பட்டவர். இவர் 70 இல் எழுதிய 'நுகம்' என்ற சிறுகதையில் ஒரு பெண்ணின் இருத்தல் சமூகத்தில் எவ்வாறு இருக்கிறது என்பதை வெளிப்படுத்தியுள்ளார். ஒரு பெண் எமது கலாசாரத்தில் பாலியல் பற்றி அறியாதவளாயும், திருமணத்தில் மனோரம்மியமான காதலையும், உடலுடன் எந்தவகையிலும் சம்பந்தப்படாத மென்மையான அரவணைப்பில் உயர்ந்து நிற்கும் காதலனையும் எதிர்பார்த்திருப்பதும் திருமணம் என்ற பந்தத்துள் நுழைந்து அவற்றை அனுபவிக்க எண்ணும்போது முற்றிலும் மாறுபட்டதாய் அமையும் யதார்த்த வாழ்வு சாவை எதிர்பார்த்து நடத்தும் வாழ்க்கையாக மாறிவிடுகிறது. இத்தகைய சமூகத்தில் இப்படித்தான் அவளால் வாழ முடிகிறது. இதனை மீறி மனம் எதையும் நினைக்கத் தோன்றாது வாழ்தல் தான் அது. இதேவேளை இந்த இருத்தலில் வாழ்தலில் பெண்ணின் மனதையும் உணர்வுகளையும் கலாசாரம் மீறி வெளிக்காட்டியவர் பவானி.

யோகாபாலச்சந்திரனோ இத்தகைய வாழ்தலுக்கு காரணம் என்ன என்பதை கண்டு பிடித்துக் கூறியவர். அவரின் 'விழுமியங்கள்' என்ற ஒரு சிறுகதை. அதில் ஒரு பெண் திருமணம் முடித்து ஒரு பிள்ளைக்கும் தாய் நோய் காரணமாக இறந்துவிடப் போகின்றாள். அதுவரை அவளது வாழ்தலில் குடும்பம் சமூகம் அவளுக்கு அளித்த திருப்தி என்ன ? உளவியல் ரீதியாக சீதன அமைப்பையும், வெளிநாட்டு மாப்பிள்ளை தேடும் வரட்டும் கௌரவமும் கிழித்துக் காட்டப்படுகிறது. அதில் உள்ள ஒரு பந்தியை மட்டும் இங்கு தருகிறேன்.

'கட்டின பிறகாவது சொத்துப்பத்தை வைத்து புருஷனோடு உல்லாசமாய் இருந்தேனா அம்மா ? வசதியான சீதன வீடுகள் இரண்டையும் வாடகைக்கு விட்டுவிட்டு நகைகளையும் பாங்கில் போட்டுவிட்டு கலியாணம் கட்டி ஆறுமாதத்தில் என்னை பிள்ளைத்தாச்சி ஆக்கிப் போட்டு ஸ்கொலஷிப்பில் போனார் பிள்ளையைப் பெத்துப்போட்டு மூன்றரை வருஷம் வீட்டுக்குள்ளே கற்புக்காத்து கிடந்தன். போன மாதம் புதுக்காரோட வந்தார். அந்தக் காரில் ஆஸ்பத்திரிக்குத்தான் போகின்றேன்.'

இவ்வாறு பெண்ணின் மன உணர்வுகளைத் துல்லியமாக பெண்களால்தான் காட்ட முடியும் என முத்திரை பதித்தவர்கள் இவர்கள். நயிமா சித்திக் வர்க்க முரண்பாடு எவ்வாறு குடும்பத்துள்ளும் பிளவுகளை ஏற்படுத்துகிறது என்பதை இஸ்லாமிய சமூக நடைமுறைகளுடன் விளக்கியவர்.

பெரும்பாலும் பெண்களின் வெளிப்பாடுகள் குடும்ப அமைப்புக்குள் பெண்களின் நிலை பற்றியும் அதனால் எழும் மன அழுத்தங்கள் பற்றியும் சிந்திப்பனவாய் இருந்துள்ளன. அத்துடன் சீதனம், சாதிவர்க்க ஏற்றத்தாழ்வால் காதல் எதிர்ப்பு ஆகியவற்றைக் கொண்டதாயும் அமைந்தன. முன்பு நான் இங்கே குறிப்பிட்ட 70 இல் இருந்து வீசத் தொடங்கிய பேரினவாத மேலாண்மையால் விளைந்த அரசியல் சமூக மாற்றங்கள் பெண்களால் பெரிதாக வெளிப்படுத்தப்படவில்லை. அப்பிரச்சினைகள் குடும்ப உறவுக்குள் தலைகாட்டத் தொடங்கிய எண்பதுகளின் பின்தான் பெண் எழுத்தாளர்களின் கவனிப்பு ஆரம்பமாயிற்று. இதிலிருந்து நாம் ஒன்றை அவதானிக்கலாம். சமூகத்தில் எழும் பிரச்சிகனைகள் குடும்பத்துள் வருகின்றபோது தான் பெண்களால் அவைபற்றிய எழுதமுடிகிறது. இது பெண்களின் வாழ்வு, குடும்பத்தைச் சுற்றி எந்தளவிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை காட்டுகிறது.

இந்நிலையில் எண்பதின் பின் நாம் நோக்குகின்ற போது முனைப்புப் பெற்ற இரு விடயங்கள் பெண்கள் வெளியே இழுத்துள்ளதை அவதானிக்கலாம். இன்று அரசியல் முனைப்பு அத்துடன் புலம்பெயர் நிலையையும் சேர்த்துக் கொள்ளலாம். இவற்றின் மூலம் மிக முக்கியமான ஒரு காலப்பகுதியாக இது இருப்பதை உணரலாம். குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பெண்களுக்கிடையே புதிய உற்சாகமும் விழிப்பும் வெவ்வேறு பெண்கள் அமைப்புகளின் தோற்றத்திலும், அரசியல் கலை இலக்கிய நிகழ்ச்சிகளிலும் வெளிப்பட்டது.

'தமிழ்ச் சகத்தில் பெண்கள் நிலை அவர்களது வெவ்வேறான பிரச்சினைகள், பெண்ணிலைவாதம் ஆகிபன குறித்து எண்பதுகளின் ஆரம்பத்திலிருந்து பெண்களிடையேயும் இளைஞரிடையேயும் இடம்பெற்ற கருத்துப் பரிமாற்றங்கள் வாதப்பிரதிவாதங்களால் பெண்களது கலை இலக்கிய முயற்சிகளிலும் பிரதிபலித்தன' என சித்திரலேகா மௌனகுரு அவர்கள் 'சிவரமணிகவிதைகளில்' என்னும் தொகுப்பு முன்னுரையில் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

இத்தகைய ஒரு நிலைப்பாடு எண்பதுகளில் இருந்து பல பெண்களை இலக்கிய முயற்சிக்கு இருந்து உள்ளிழுத்தது. ஊர்வசி, செல்வி, சிவரமணி, அவ்வை, மைத்திரேயி, மைதிலி அருளையா, சங்கரி ராதா, ரங்கா, வசந்தி, மசூறாமஜீட் என பலர் கவிதையில் சமகாலப் பிரச்சினைகளை வெளிப்படுத்தினர். பிரச்சினை உடனுக்குடன் பிரசவிப்பதில் கவிதை வடிவமே கைகொடுக்கவல்லது உணர்ச்சிவிவேகம் கவிதையில் நன்கே படியும். இக்கால கட்டம் இலக்கியப் பரப்பில் ஒரு எதிர்ப்பிலக்கியத்தன்மையை முற்றுமுழுதாகக் கொண்டிருந்தது என்று கூறுவதில் தவறில்லை என்று எண்ணுகிறேன்.

அத்துடன் இவர்களது கவிதைகளில் சமூக உற்று நோக்கல் சிறந்து விளங்கியது. மரணத்துள் வாழ்வோம் கவிதைத் தொகுப்பில் இருந்து, சொல்லாத செய்திகள், செல்வி சிவரமணி கவிதைத் தொகுப்புகள் ஆகியவற்றில் இவற்றை நாம் காணலாம்.

ஆங்காங்கே பிரதேச சஞ்சிகைகளிலும், வானொலியிலும், பத்திரிகைகளிலும் அரசியல் அதிகம் சாராத சமூகவியல் பார்வை கொண்ட பெண்களின் கவிதைகள் இடம் பெறலாயின. உதாரணமாக செல்வி, பஹிமா ஜஹான் வானொலிக்கு எழுதிய 'முருங்கையில் ஏறிய சமாதானம்' மரீனா இல்யாஸ் பத்திரிகையில் எழுதிய 'மரங்களும் சிவக்கும்' போன்ற கவிதைகள் சமூக நிலைப்பாடுகளை பிரதிபலிப்பவை. இந்த சமூக உற்று நோக்கல் மலையகத்தில் வேறு ஒரு கோணத்தில் பெண் எழுத்தளரிடையே பிரதிபலித்தது.

குறிப்பாக கலைமகள் ஹிதாயா, செல்வி அரபா உம்மா, ஆர். நளினி கருப்பையா, நாகபூஷணி, பிரமிளா ஆகியோர் மலையகக் கவிதை உலகில் நம்பிக்கையூட்டும் கவிஞர்களாக இனங்காணப்பட்டவர்கள்.

இவர்கள் தமது சமூகநிலைப்பாடுகளைக் கண்டு பொங்கியதுடன் கற்றறிந்தவர்களின் பாராமுகத்தையும் கண்டு தட்டிக் கேட்டவ.்கள். உதாரணமடாக கருப்பையா, நாகபூஷணியின் 'மெழுகுதிரிகள்', 'ஒரு தாயின் விதி' போன்ற பல கவிதைகள் அத்தகையன. இவ்வாறு

கவிதைக்குப்பின் சிறுகதை பல புதிய பரிமாணங்களைப் பெறத் தொடங்கின. பத்மா சோமகாந்தன் கோகிலா மகேந்திரன் ஆகியோருடன் இந்திராணி, நளாயினி கணபதிப்பிள்ளை, அம்மன் கிளி, ஊரெழு தர்ஷினி, தாமரைச் செல்வி, சந்திரா தியாகராசா, ஹெக்ராவை சஹானா, பாலரஞ்சனி சர்மா ஆகியோர் கணிப்புக்குள் வருகின்றனர்.

பத்மா சோமகாந்தன் 1993இல் 'கடவுளின் பூக்கள்' 1996இல் 'புதிய வார்ப்புகள்' ஆகிய சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். 1992 இல் இவர் எழுதிய 'சருகும்தளிரும்' இல் இருந்து இந்தச் சமூகம் எதிர்கொண்ட சவால்கள், அடிப்படைக் கலாசார எண்ணப்பாட்டில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதை காட்டுகிறார்.

என்னதான் பல்கலைக்கழகம் வரை ஆணும் பெண்ணும் சேர்ந்து படித்தாலும், தனியாக ஒரு ஆணும் பெண்ணும் சந்தித்துக் கதைத்தால் வித்தியாசமாகப் பார்க்கும் சமூககலாசார எண்ணப்பாடு அரசியல் தேவைகருதி ஆண், பெண் இணைந்து சேவையாற்றிய போது மாற்றமுற வேண்டியவை ஆகிவிடுகின்றன. பலநாள்கள் அந்தப் பக்கத்து வீட்டில் சந்திக்கும் ஆண், பெண் பற்றிய எண்ணங்கள் ஒருநாள் மாற்றமுற வேண்டி ஏற்படுகிறது.

'புதிய தலைமுறைக்கு ஆண், பெண் என்ற எண்ணத்தையோ பருவத்துக்கு உரித்தான வேட்கையைப் பற்றிச் சிந்திக்கவோ நேரமின்றி, கால நேரத்தைக் கூடப்பொருட்படுத்த முடியாதவாறு இன்று காரியமாற்ற வேண்டிய அவசர தேவைகள் புதிதாக எத்தனையோ இருக்கின்றன என்பதை என்னால் கூட இப்போது தான் நிதர்தசனமாகத் தரிசிக்க முடிந்தது. இது அக்கதையில் வரும் ஒரு பகுதி.

இவ்வாறு குடும்பத்துள் வராத சமூகவியல் பார்வைகளை மலையகம் வரையும் விரித்திருப்பவர் பத்மா சோமகாந்தன்.

கோகிலா மகேந்திரன் சிறந்த படைப்பாளிகள் வரிசையில் முன்னிற்பவர். 1983 இல் மனித சொரூபங்கள். 1984இல் முரண்பாடுகளின் அறுவடை, 1986இல் 'பிரசவங்கள்' என்பன அவரது சிறுகதைத் தொகுதிகள், துணிவாகவும், தெளிவாகவும் சமூதாயப் பிரச்சினைகளை எழுதும்போது உளவியல் பாங்கில் அணுகுபவர் இவர். 1982இல் 'சடப்பொருள் என்று தான் நினைப்போ' என்ற கதை மூலம் பெண்ணுக்கு பிரச்சினை வீட்டில் மட்டுமல்ல செல்லும் வாகனத்திலும் தான் எனக் காட்டியவர் இவ்வாறு சின்ன சின்ன விடயங்களிலும் பெண் எவ்வாறு நோக்கப்படுகிறாள் என்ற அவரது பார்வை சமூகத்தை தட்டிக் கொண்டே இருப்பதாய் அமைகிறது.

இவர்களுடன் இளைய தலைமுறையினராக தாமரைச் செல்வி, இந்திராணி, நளாயினி, சந்திரா, பாலரஞ்சனி சர்மா, ஹெக்ராவை சஹானா ஆகியோர் பெண்கள் பற்றிய பிரக்ஞையுடன் எழுதிக் கொண்டிருப்பவர்கள்.

தாமரைச் செல்வி உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காது சமூக எண்ணப்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதை உணர்வுகளாக்கி எழுதி வருவதை உணரலாம். அண்மையில் வீரகேசரி ஞாயிறு இதழில் வெளியான 'தவிப்பு' சிறுகதை அத்தகையது. இவ்விடத்தில் ஒன்று கூறவேண்டும். படித்த பெண்கள் பற்றி சிறப்பான அபிப்பிராயம் இல்லாத ஒரு நிலையை இந்த ஆண் எழுத்தாளர்கள் தோற்றுவித்ததைத் தொடர்ந்து தாமரைச் செல்வியும் 1993 இல் பார்வை என்ற ஒரு கதையை எழுதியுள்ளார். படிக்காத அன்புள்ளம் கொண்ட பெண்களை உயர்த்துவதற்காக படித்த பலதையும் சிந்தித்துச் செயலாற்றும் பெண்களை இறுதியில் மலினப்படுத்துவது நெருடலாகவே இருக்கிறது.

'பாத்திரம் தேய்ப்பதிலும் சமைப்பதிலும் மட்டுமே ஒரு பெண்ணால் சந்தோஷப்பட்டு விட முடியுமா ? இவைகளைவிட உலகத்தில் எத்தனையோ விசயங்கள் இருக்கின்றன' என்று நான் கூறமுயன்றும் பிரயோசனம் இல்லை என கணவன் அலுத்துக் கொள்கிறார். இது அவர் படைத்த ஒரு பெண்.

அடுத்த பெண் 'நுனிநாக்கால் இலக்கியமும் உலக விஷயங்களும் தளும்பிக் கொண்டிருக்கும் ஒரே சமயத்தில் அவளால் சமையலைப் பற்றியும் வியட்நாமியப் போராட்டத்தையும் பற்றியும் பேச

முடியும். எந்தச் சிறுகதை நாவலையும் அக்குவேறு ஆணிவேறாக விமர்சிக்க முடியும்... இப்படியே போகிறது மற்றப் பெண் பற்றிய விபரிப்பு. இத்தகைய ஒரு பாத்திரம் மிகவும் இக்கட்டான நிலையில் இடம் பெயர்ந்து வரும் உறவினரை ஏற்றுக் கொள்ள மறுப்பதாகவும் முன்னைய பெண் சந்தோஷமாக அவர்களை ஏற்றுக் கொள்வதாயும் காட்டியுள்ளனர்.

இப்படியான எழுத்துக்கள் பெண்களின் பின்னடைவுக்கே வழிவகுக்கும் என்பதை அவரால் ஏன் உணர முடியாது போயிற்று ? சிறுகதை, நாவல்களை அக்குவேறு ஆணி வேறாக விமர்சிக்கும் ஒரு பெண்ணால் இக்கட்டான நிலையில் வரும் மனங்களைப் புரிந்து கொள்ள முடியாமல் இருக்குமா?

இல்லை.

முடியும் என்றே நான் எண்ணுகிறேன். எனவே, வழி அமைத்துக் கொடுத்திருக்கும் தடங்களில் மட்டும் ஓடிக் கொண்டிருக்காமல் பெண்கள் தமது தடங்களையும் பதிக்க முன்வந்திருக்கும் இக்கால கட்டத்தில் எழுத்துத்துறை கவனமாகக் கையாளப்பட வேண்டியதாக இருக்கிறது.

பெண்கள் என்றால் சீதனம், கல்வியின்மை பற்றிப் பேசிய தமிழ்ச் சமூகத்தில் ஆண்–பெண் அசமத்துவ உறவின் வெவ்வேறு பரிமாணங்கள், அவற்றால் பெண்களின் வாழ்வில் ஏற்படும் பாதிப்புகள் ஆகியவற்றை, குறிப்பாக பெண்கள் தமது இருத்தல் பற்றி தமது கண்ணோட்டத்தில் கருத்துக் கூறிக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் பெண் பற்றிய பழைய நம்பிக்கைகள் மீள் பரிசீலனைக்கு உள்ளாகாமலே கைவிடப்படுவதாய் இருக்கிறது.

அடுத்து புலம் பெயர் இலக்கியங்கள் பற்றி நோக்கும்போது, 'பனியும் பனையும்' கதைத் தொகுப்பு கவனத்தை ஈர்க்கிறது. அதில் சந்திரிக்கா ரஞ்சன், தேவா, லோகா, ராஜேஸ்வரி, பாலசுப்பிரமணியம், அருண் விஜயராணி, ரதி ஆகிய பெண் எழுத்தாளர்கள் கணிப்புக்குள்ளாகியுள்ளனர். இவர்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் 'பெண்' என்பதால் ஒருவர் எதிர் நோக்கும் கலாசார பிரச்சினைகள், குடும்ப அமைப்பில் முரண்பாடுகள் ஆகியவற்றைச் சித்தரித்துள்ளனர். இவர்களின் சித்தரிப்பில் கலாசார முரண்பாட்டை உள்வாங்குவதில் பெண்களுக்குள் சிக்கல்கள் முனைப்பாகியுள்ளன. அத்துடன் அடுத்த சந்ததியைத் தயார்படுத்தலில் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் கருப் பொருளாகியுள்ளன.

இவர்களது கதைகளின் புலம் பெயர்ந்த நாட்டு மொழிச் சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கும் அளவிற்கு இலங்கையில் சிங்களச் சொற்கள் தமிழர்களால் பயன்படுத்தப்படவில்லை என்றே கூறலாம். அந்தளவிற்கு மொழி, கலாசாரம் யாவற்றையும் உள்வாங்க வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

மேலும் இவர்களின் இலக்கியங்கள் ஈழத்து இலக்கியமாக எண்ணப்படுமா என்ற கேள்வியும் உண்டு. அதாவது ஆரம்ப கால கட்டங்களில் ஈழமண்ணை பிரதிபலித்து கதைகள் எழுதியவர்கள் இப்பொழுதெல்லாம் தாம் வாழும் சூழலில் கதை எழுதத் தொடங்கி விட்டனர். இது அவர்கன வாழ்தலின் வெளிப்பாடு. அத்தகையதான இலக்கியம் அந்தந்த நாட்டு தமிழ் இலக்கியமாகவே இருக்க முடியும். ஈழத் தமிழ் இலக்கியமாக இருக்க முடியாது என்றே எண்ணுகிறேன்.

எனவே, அறுபதிற்குப்பின் ஈழத் தமிழ் இலக்கியத்தில் பெண் எழுத்தாளர்களின் பங்களிப்பு ஒட்டு மொத்தமான பெரும்பான்மைக் கருத்தோட்டத்திற்கு ஒத்ததாகவும் அதேவேளை பெண்களுக்கேயுரிய தனித்துவத்தோடும் மலர்ந்து கொண்டிருக்கிறது. ஆயினும் இனிவரும் காலத்தில் பெண் எழுத்தாளர்கள் என பகுத்து தனியாக ஆராயவேண்டிய நிலைப்பாடு தோன்றாமல் இருக்கமளவிற்கு பெண் எழுத்தாளரின் பங்கும், ஆய்வாளர்களின் கணிப்பும் அமைய வேண்டும் என்பது எனது ஆவல்.

புலப்பெயர்வும் ஒட்டுறவும்

முருகபூபதி

'புலம்பெயர்ந்தோர் இலக்கியம்' விமர்சனத்திற்கும் விவாதத்திற்கும் உட்பட்டு வளரும் இக்காலப்பகுதியில்–அதனை படைக்கும் படைப்பாளிகள் மத்தியில் ஆத்மார்த்தமான சிநேதமும் ஒட்டுறவும் ஆரோக்கியமாக வளர்ந்து கொண்டிருக்கிறதா? – என்ற வினாவுக்கு விடை தேடும் முயற்சியே இச்சிறிய கட்டுரையாகும்.

புலப்பெயர்வே அவலமானது. விருப்பத்தின் பேரில் புலம்பெயர்ந்து அந்நியம் சென்றவர்கள், நிர்ப்பந்தங்கள் ஏற்படுத்திய தாக்கத்தினால் அந்நிய நாட்டில்–முற்றுமுழுதாக அந்நியப்பட்ட சூழலில் புகலிடம் பெற்றவர்கள் மத்தியிலிருந்து இலக்கியம் படைப்பவர்கள் 'ஏதோ' எழுதிக் கொண்டிருந்தவர்கள்தான்.

அந்த 'ஏதோ' – கவிதைகளாக, கட்டுரைகளாக–செய்திகளாக–விமர்சனங்களாக, புனைகதைகளாக மலர்ந்தவை.

உள்ளார்ந்த ஆற்றலும் இலக்கியப் பிரக்ஞையும் கொண்ட படைப்பாளி, தான் எங்கே வாழ நேர்ந்தாலும் தொடர்ந்தும் எழுதிக் கொண்டிருப்பான் என்பதற்கு சான்றாக பலர் கனடாவிலும், ஐரோப்பாவிலும், அவுஸ்ரேலியாவிலும் திகழ்கின்றனர்.

இயந்திரமயமான–இரண்டக வாழ்விற்கு பலியாகிக்கொண்டே இலக்கியம் படைப்பவர்கள் தான் அநேகம்.

இவர்களிடமிருந்து இலக்கிய படைப்புகள் மாத்திரமல்ல, இலக்கிய இதழ்களும் செய்தி ஏடுகளும், நூல்களும் வெளியாகின்றன.

அத்துடன் ஒலிபரப்பு–ஒளிபரப்பு துறைகளிலும் சாதனை புரிகின்றனர். திரைப்படங்களும், டெலிட்ராமாக்களும் தயாரிக்கின்றனர்.

நாடகங்கள், கூத்துகள் அரங்கேற்றுகின்றனர்.

இளம் தலைமுறைக்கான 'தமிழ் அடையாளம்' தேடும்–பேணும் வீடியோ ஒளிப்பதிவு நாடாக்களையும் அற்புதமாக தயாரித்து அளிக்கின்றனர்.

ஈழத்தில் நிம்மதியான வாழ்வுக்கான 'தமிழ் அடையாளம்' தேடும் – பேணும் வீடியோ ஒளிப்பதிவு நாடாக்களையும் அற்புதமாக தயாரித்து அளிக்கின்றனர்.

ஈழத்தில் நிம்மதியான வாழ்வுக்காக தமிழினம் போராடுகின்ற அதே சமயம்–அந்நியம் புகுந்தவர்கள்–தமது வேரின் சால்பை பேணவும்–தமது இன அமையாளத்தை பதிவு செய்யவும் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

இந்த போராட்டத்தின் வெளிப்பாடுகளாக கலை இலக்கிய முயற்சிகளை இனம் காண முடிகின்றது.

ஈழத்தில் பொம்மை, பேசுபடம், ஆனந்தவிகடன், குமுதம் தமிழர் கடைகளை ஆக்கிரமித்திருப்பது போன்று புலம்பெயர்ந்தோரின் கடைகளிலும் அவை ஆக்கிரமித்திருப்பது நிதர்சனம்.

இதனால்–புலம்பெயர்ந்த படைப்பாளிகள் மத்தியிலிருந்து மலரும் சிற்றிதழ்கள் பரவலாக மக்களைச் சென்றடைவதில்லை.

கனடாவில் வெளியாவது ஐரோப்பாவுக்கு தெரிவதில்லை, இக்கண்டங்களின் முயற்சிகள் அவுஸ்திரேலியாவுக்கு தெரிவதில்லை.

அக்கறையும்–இலக்கிய உணர்வும் மிக்கவர்கள் மாத்திரம் 'தபால் கட்டண சுமையை' கவனத்தில் கொள்ளாமல் பரஸ்பரம் அனுப்பிக் கொண்டிருக்கின்றனர்.

அல்லது தாம் சார்ந்த கண்காட்சிகளை நடத்தி கலை, இலக்கிய வெளிப்பாடுகளுக்கு அறிமுகம் தேடிக் கொடுக்கின்றனர்.

ஆர்வத்தை மாத்திரம் மூலதனமாக நம்பி சிற்றேடுகளை வெளியிடுவோர் தொடர்ந்து தாக்குப்பிடிக்க முடியாமல் கையைக் கட்டிக் கொண்டு ஒதுங்கியிருக்கின்றனர்.

செய்தி ஏடுகள் விளம்பரங்களை நம்பி காலத்தை ஓட்டுகின்றன.

வாசகரின் ஆதரவை மாத்திரம் மூலதனமாகக் கொண்டு வெளியாகும் இதழ்களை விரல் விட்டு எண்ணலாம்.

மேற்குறித்த பின்னணிகளுடன் படைப்பாளிகளின் சிநேகத்தையும் நட்புறவையும் இனம்காண வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

E.Mail உம் Internet உம் சிலசமயம் சிநேகத்தையும் ஒட்டுறவையும் ஏற்படுத்தலாம்.

எனினும்–அதற்கும் ஆத்மார்த்தமான இலக்கிய உணர்வுதான் மூலதனமாக இருக்க வேண்டும்.

நான்கு தசாப்தங்களுக்கு மேல்
இடையறாது இலக்கியப்பணியாற்றிவரும்
இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை
வாழ்த்துகிறோம் !

Rani Grinding Mills.

219, Main Street,
Matale,
Sri Lanka.
Phone: 066-22425

Vijaya General Stores

(Agro Service Centre)
Dealers: Agro Chemicals, Sprayers,
Fertilizer & Vegetable Seeds.

No. 85, Sri Ratnajothy Saravanamuththu Mawatha,
Colombo-13.
Telephone: 331596, 337011.

☆
☆ ☆

☆
☆ ☆

☆
☆ ☆

S.T.R. FILMS

Present

Very Soon at

New Olympia

BLOOD FIGHT

Bolo Yeung-yasuaki Kurata

Directed by

Shuji Goto

புதுமை இலக்கியம்” சிறப்புற அமைய எமது வாழ்த்துக்கள்

❋

❋ ❋

❋

❋ ❋

❋

❋ ❋

❋

❋ ❋

அஷ்டலக்ஷ்மி என்று பெயர் சொன்னாலே போதும்.
மக்களின் மகோன்னத ஆதரவுடன்
குலபதி ஆறுமுகம் கந்தையா ஜே.பி. அவர்களின்
பெருமுயற்சியினால் தொடர்ந்து வெளிவரும்
அஷ்டலக்ஷ்மி தினத்தாள் கலண்டர்
அஷ்டலக்ஷ்மி பஞ்சாங்கக் கலண்டர்
அஷ்டலக்ஷ்மி தமிழ் டயறிகள்

அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்

320, செட்டியார் தெரு, கொழும்பு–11.
தொலைபேசி இல: 334004.

தலைமையகம்:
அஷ்டலக்ஷ்மி த.பெ.இல. 1, கைதடி.

With Best Compliments From:-

PROFESSIONAL MANPOWER RECRUITING SERVICES (PTE) LTD.

Overseas Manpower Consultant & Allied Services.

529 GALLE ROAD, COLOMBO 06. SRI LANKA.
TEL.: 0094-1-589141, 589411
FAX.: 0094-1-589411, 597945
HOT LINE 0094 71-52877
Labour Lincence : 1382
E-mail : pmrs@itmin.com

Professional Manpower for Professional Recuriting

With Best Compliments From:-

AVOID DRUGS
AND
PLANT PALMYRAH
FOR
PROSPEROUS LIFE

PALMYRAH DEVELOPMENT BOARD

244, Galle Road,
Colombo - 4.

53, Kandy Road,
Jaffna.

வாழ்த்துக்கள்

Brownson Industries

139, Bankshall Street, Colombo-11.
Telephone: 327197.

இளங்கீரனின்

"ஈழத்து முற்போக்கு இலக்கியமும் இயக்கமும்"

கிடைக்குமிடம் :

எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகம்,
ஜே 1– பம்பலப்பிட்டி தொடர்மாடி,
கொழும்பு – 4.

With Best Compliments From:-

*
* * *
*

*
* * *
*

*
* * *
*

BOUGAINVILLA PRINTERS

376, Grandpass Road,
Colombo - 14.
Phone : 593791
Fax.: 590943

தலை நகரில்

தலை சிறந்த

சிகை அலங்கரிப்பு நிலையம்.

ஓரியண்டல் சலூன்

182, முதலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு - 11.

ORIENTAL SALOON

182, First Cross Street,
Colombo - 11.

இலக்கிய ஆய்வரங்கை,

- ✧ இணைந்து நடத்த முன்வந்து உதவி ஒத்தாசைகள் புரிந்த கலாசார அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் திருமதி இ. கைலாசநாதன், இந்து கலாசராத்திணைக்களத்தின் பிரதிப்பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன், உதவிப்பணிப்பாளர் திரு. வீ. விக்கிரமராஜா மற்றும் திணைக்கள அலுவலர்கள்.

- ✧ ஆய்வரங்கை சிறப்பிக்கும் அறிஞர்கள், ஆய்வாளர்கள், எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள்.

- ✧ கலை இலக்கிய ஊக்குவிப்பாளர் தொழிலதிபர் அல்ஹாஜ் ஹாஷிம் உமர், கலை இலக்கிய கருமங்களுக்காக உற்சாகமாகக் காரியமாற்றி வரும் திரு. இராஜலிங்கம் .

- ✧ என்றுமே ஒத்துழைப்பு அளித்து வரும் தொடர்பு சாதனத்துறையினர்.

இம்மலர் சிறக்க,

- ✧ கட்டுரை வழங்கிய இலக்கிய நண்பர்கள்,
- ✧ விளம்பரங்கள் உதவிய வர்த்தகப் பிரமுகர்கள்,
- ✧ அழகாக வடிவமைத்து துரிதமாக அச்சேற்றித் தந்த யுனி ஆர்ட்ஸ் அச்சக அதிபர் திரு. பொ. விமலேந்திரன், மற்றும் அவரின் நிறுவனப் பணியாளர்களுக்கும் இதய பூர்வமான நன்றி.

இ. மு. எ. ச

"புதுமை இலக்கியம்"
சிறப்புற அமைய
எமது வாழ்த்துக்கள்

PARA EXPO PRODUCTS (PVT.) LTD

Exporters of Non Traditional Sri Lanka Foods.

30, Sea Avenue,
Colombo-3.
Tel: 573717.

"புதுமை இலக்கியம்"
சிறப்பு மலருக்கு
எமது வாழ்த்துக்கள்

❖❖
❖

❖❖
❖

❖❖
❖

SURIYA SUPER MARKET
SURIYA TEXTILES MILLS (PVT.) LTD.

3rd Cross Street,
Colombo-11.
Telephone: 336977, 438494-449105.

RETAIL OUTLETS

35, 3rd, Cross Street, Colombo-11.
Telephone: 440109.

109, Keyzer Street, Colombo-11.
Telephone: 332287

73/1, 3rd Cross Street, Colombo-11.
Telephone: 341779.

Printed by Unie Arts (Pvt) Ltd. Colombo 13,